24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 40
விலை: 40

சுடர் 34 கதிர் 27 மார்கழி 07ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 23 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049



# வெள்ளத்தில் மூழ்கியது வடக்கு 30,000 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 23

வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக மழை பெய்துவரும் நிலையில் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. வடக்கின் 5 மாவட்டங்களிலும் 6 ஆயிரத்து 297 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 521 பேர் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

>> 37

## மழை வெள்ளத்தால் ஏற்பட்ட மின் ஒழுக்கில் ஒருவர் சாவு!

*பரந்தனில் நேற்று சோகம்*

யாழ்ப்பாணம், டிசெ.23

மின் ஒழுக்குக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். வீட்டுக்குள் புகுந்த வெள்ள நீராலேயே மின் ஒழுக்கு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் பரந்தன், பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று நடந்துள்ளது.

>> 37



வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் நடவடிக்கைகளில் பொதுமக்கள். படையினர். தன்னார்வ சேவையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் 21ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நேற்று 22ஆம் திகதி காலை 8.30 மணி வரை பதிவான மழைவீழ்ச்சி

| | |
|---|---|
| மாங்குளம் | 360.1 மி.மீ. |
| ஒட்டுசுட்டான் | 301 மி.மீ. |
| ஆனையிறவு | 220.1 மி.மீ |
| இரணைமடு | 237.3 மி.மீ |
| வள்ளிபுனம் | 195.3 மி.மீ. |
| அளம்பில் | 158.2 மி.மீ. |
| சாவகச்சேரி | 89.3. மி.மீ. |
| அச்சுவேலி | 70.4 மி.மீ. |
| பருத்தித்துறை | 74.8 மி.மீ. |
| நயினாதீவு | 44.3. மி.மீ. |
| யாழ். கோட்டை | 36.7 மி.மீ. |
| நெடுந்தீவு | 40.9 மி.மீ. |
| திருநெல்வேலி | 69.3 9 மி.மீ. |

## மழையால் முடங்கியது யாழ்.

கடந்த இரு நாள்களாகப் பெய்த கடும் மழையால் யாழ்ப்பாணத்தில் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

தொண்டைமானாறு கடல்நீரேரியை அண்மித்த அச்சுவேலியின் பல கிராமங்களும், மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் அதிகரித்ததால் தொண்டைமானாறு நீரேரியின் 4 வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டன.

*விரிவு - பக்கம் 3*

## வெள்ளக்காடாகியது முல்லை. மக்கள் அவலம்; பெரும் அழிவு



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாகப் பெய்து வரும்கடும்மழையால்வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மக்கள்இடம்பெயர்ந்துவருகின்றனர். விளைநிலங்கள்அழிவடைந்துள்ளன. பெரும்எண்ணிக்கையான கால்நடைகள் இறந்துள்ளன.

*விரிவு - பக்கம் 5*



## இடர் நிலமையை கையாள நேற்றிரவு அவரசக் கூட்டம்

கிளிநொச்சி, டிசெ. 23

தற்போது நிலவும் இடர் நிலைமையைக் கையாள்வது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலத்தில் நேற்று இரவு அவசரக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

>> 37

## வர்த்தக நிலையங்களை இன்று திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23

தற்போதைய இடரைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் இன்று திறக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

>> 37

## எத்தகைய தடைகள் வரினும் தீர்வுக்கான நகர்வு தொடரும்

*மாவை எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.23

எத்தகைய தடைகள் வந்தாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எமது ஜனநாயகப் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

>> 37

## விஜயகலாவுக்கு அமைச்சு கொந்தளிக்கும் வீரவன்ஸ

கொழும்பு, டிசெ.23

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு மீண்டும் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று கொந்தளித்துள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்

>> 37

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி.

12.60% வ.வ.

வ.தே.வ. 13.14%

4 மாதங்கள்

அழையுங்கள்: 0115 411 411

011 5 411 411

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் ... Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் அமைப்புக்களை ஒழிப்பதும் ஜனநாயக கொலையின் ஓரம்சம்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், டிசெ.23**

**நடந்து முடிந்த ஜனநாயகப் படுகொலையின் ஒரு அம்சம் சிவில் அமைப்புக்களை இல்லாமல் செய்ததாகவே இருக்கும். அந்தக் கைங்கரியம் முன்னரே ஆரம்பிக்கப்பட்டது. அதனுடைய வெளிப்பாடுதான் இப்போதும் நடைபெற்ற அரசியல் குழப்பங்கள்**




இவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் தே.தேவானந் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், மனித உரிமைகள் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி தலைமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரச சார்பற்ற நிறுவனங்னின் சொல்லை வைத்துத்தான் இந்த அரசே நடக்கிறது என்று அரச தலைவர் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கருத்துத் தெரிவித்திருந்தார். எவ்வளவு தூரம் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற நிறுவனங்களாக இருக்கின்றன அதிலிருந்து புரிந்துகொள்ள முடியும். அந்த நிறுவனங்கள் எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என்பதில்தான் அனைவரும் கவனமாக இருக்கின்றார்கள் என்பதை மனதில் நிறுத்திச் செயற்பட வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

ஐக்கியநாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் எனும் இரண்டு மிகப் பெரும் அமைப்புகளும் பன்னாட்டு ரீதியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றின் அணுகுமுறைப் பிழையால்தான் அரசியலில் இப்படியான குழப்பங்கள் ஏற்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களைச் செய்யாது, பாதிப்பை உள்ளாக்கியவர்களுக்கு அதாவது வலுவாக உள்ளவர்களுக்குச் சார்பான நிலைமை நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

நாம் பாதிக்கப்பட்டவர்களாகவும், நலிவுற்றவர்களாகவும் சித்தரிக்கப்பட்டு அந்தச் சித்தரிப்புக்கு ஏற்பவே நடத்தப்பட்டோம் என்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம். ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் விட்ட தவறுகளே இவற்றுக் காரணம். ஜனநாயகம் பிழைக்கும் போது அல்லது ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளின் போது அவற்றுக்கு எதிராக சிவில் அமைப்புக்கள் குரல் கொடுக்க முடியாத நிலையில் இருந்தன என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்" - என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக எம். செல்வினும் கலந்து கொண்டனர். வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானமும் கலந்து கொண்டார்.

செயலமர்வில் கலந்து கொண்ட 45 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இணையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. (ற-21)

## முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ 23

வீதியில் மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார். கோப்பாய் வடக்கைச் சேர்ந்த துரையப்பா இரத்தினசிங்கம் (வயது78) என்பவரே உயிரிழந்தார். கடந்த 10ஆம் திகதி வாழைக்குலையைச் சந்தையில் கொடுத்துவிட்டு கைதடி மானிப்பாய் வீதியால் பயணித்தபோது அவர் மயங்கி விழுந்துள்ளார். அவர் தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மயங்கிய நிலைமையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ற-7,8)

## ஒளிவிழா

கொழும்பு, டிசெ.23

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலக ஒளிவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. நிறுவன இயக்குநர், பணியாளர்கள், சர்வமதக் குழுவினர் இணைந்து சர்வமத சமாதான நல்லிணக்க ஒளிவிழா எனும் தொனிப்பொருளில் நிகழ்வை நடத்தினர். புலமைப் பரீட்சையில் சித்தி எய்திய 10 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 50 மாணவர்களும் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் போதனா மருத்துவமனை பல் மருத்துவ நிபுணர் திருச்செல்வமும், அவரது பாரியாரும் கலந்து கொண்டனர். (ற)

# வடக்கு மாகாண சபை எதையும் வெட்டி வீழ்த்தியதாக அறியேன்

## அதன் அவைத் தலைவரே கூறினார்

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாண சபையின் 134 அமர்வுகளில் 132 அமர்வுகளுக்கு தலைமை தாக்கியுள்ளேன். ஆனால் என்னவோ அங்கு எவையும் வெட்டி வீழ்த்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், மனித உரிமைகள் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையைப் பற்றிப் பேசினால் அது கஸ்டமான விடயம்தான். நாம் வெற்றியடைந்துவிட்டோம் என்று கூறிப் பீற்றிக்கொள்ளும் நிலமையை கடந்த 5 ஆண்டுகளில் எட்டவில்லை. அவைத் தலைவர் என்ற வகையில் சபையை முரண்பாடுகளுக்கு உள்ளேயே ஒரு உடன்பாட்டோடு நிறைவு செய்துள்ளேன்.

ஒரு காலகட்டத்தில் இந்த மண்ணில் அரசியல் வாதிகள் செயற்படாத காலத்தில் மக்களுடைய அபிலாசைகளை, எண்ணக்கருக்களை கருத்தில் கொண்டு போர் நிலைகளில் இருந்து மக்களை பாதுகாக்கும் முயற்சிகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டிருந்ததை நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்த நிறுவனங்கள் மக்களுடைய தேவைகளுக்காகச் செயற்பட்ட காலம் அது. பின்னர் அரசியல்வாதிகளுடைய பிரசன்னத்தின் பின்னர் அந்தக் கோணத்திலான செயற்பாடு சற்றுக் குறைவு என்று நினைக்கின்றேன். அது தவறாகவும் இருக்கலாம்.

எங்கள் நிறுவனங்கள் எங்கள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் அரும் பணியைச் செய்கின்றன. மனித உரிமைகள் என்பது இப்போது பரவலாகப் பேசப்படுகிறது. நான் என்னுடைய உரிமைகளுடன் இந்த மண்ணில் வாழவேண்டும் என்ற உரிமையைத்தான் நாங்கள் கேட்கின்றோம். இப்போது மனித உரிமைகளின் [illegible]றது - என்றார். (ற-21)

# உரிமை மீறலை உணராதுவிடில் சூடு, சுரணையற்ற பிராணிகளே

## செல்வின் சுட்டிகாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.23

எம் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை உணர மறுத்தோமானால் அல்லது அதைத் தடுக்க முயலாது இருப்போமானால் நாம் ஒவ்வொருவரும் சுடு, சுரணையற்ற பிராணிகளே.

இவ்வாறு வடக்கு மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பெயர் பெற்றவரான செல்வின் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், மனித உரிமைகள் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றன. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாங்கள் சிறுவர் உரிமை மீறலைப்பற்றிப் பேசுகின்றோம். நாளாந்தம் நாங்கள் பார்க்கின்ற சிறுவர் உரிமை மீறல், மிகவும் மோசமான சிறுவர் உரிமை மீறல் எமது வீட்டில் இடம்பெறுகிறது. தாய், தந்தையர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு தலைக்கவசம் போடாமல், தங்கள் அதைப் போட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிளில் செல்கின்றனர். இது சிறுவர்கள் உயிர்வாழ்வதற்கான உரிமையை மறுத்தலாக அமைகின்றது. அடிப்படை அதுதான். அடுத்த இரண்டு வாரங்களுக்கு இங்கு ஒரு தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்கக் கூடாது என்று மட்டக்களப்பு மாநகர சபை கடந்தவாரம் தீர்மானம் எடுத்திருக்கிறது. நாங்கள் இங்கு என்ன செய்கின்றோம்?.


இப்போது எங்கள் முன்பாக உள்ள கேள்வி எங்கிருந்து ஆரம்பிப்பது இந்தப் பிரச்சினையை என்பதுதான். எங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

நாங்கள் மனித உரிமை மீறல்கள் என்றவுடன் யாரோ பெரிய நிறுவனங்கள் எங்களுக்கு இழைக்கிக்கிறன, அரசு எங்களுக்கு இழைக்கிறது, இராணுவம் எங்களுக்கு இழைக்கின்றது என்று நினைக்கின்றோமே தவிர நாங்கள் எங்களுக்கு எதிராக மனிதஉரிமை மீறல்களை இழைக்கின்றோம் என்பதை உணருவதில்லை. வறுமை ஒழிப்புத் திட்டம் தொடர்பில் இலங்கை அரசு பல திட்டங்களை முன்னெடுத்தும் இன்றுவரை வறுமை ஒழிக்ககப்பட்டதாக இல்லை. தனிநபர் அரசியல் அதிகாரப் போட்டிக்காக அரசமைப்பை, அதியுயர் நாடாளுமன்றை அவமதித்து, வாக்களித்த மக்களை கைகட்டி வேடிக்கை பார்க்க வைத்துள்ளது அரசு. இவை அனைத்துமே மனித உரிமைகள் மீறல்கள்" - என்றார். (ற-21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் மழை காரணமாக முடங்கியது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணக்குடாநாடு உட்பட வடக்குமுழுவதும்நேற்றுக்கன மழை பெய்துள்ளது. அதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்கள் வெள்ளக்காடாகக் காணப்பட்டன. தொண்டைமானாறுஏரியைஅண்மித்தஅச்சுவேலியின் பல கிராமங்களும், மருதங்கேணியின் பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்களும் அதிகம் பாதிக்கப்பட்டன என்று கூறப்பட்டது. கடுமையான மழை பெய்தவாறிருந்ததால் பலரும் வீட்டுக்குள் முடங்கியிருந்தனர். வழமையைவிட வீதிகளில்மக்களின்நடமாட்டம் மதியம்வரைகுறைந்துகாணப்பட்டது.







**தொண்டைமானாறு**
வெள்ளம் அதிகரித்ததால் தொண்டைமானாறு நீரேரியின்4வான்கதவுகள்நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன என்று தொண்டைமானாறு குடாக்கடல் நன்னீர்த் திட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் எஸ்.சர்வராசா தெரிவித்தார்.
அதன் தொடுவாய் நேற்று வெட்டிவிடப்பட்டுள்ளது. ஆற்றில் குளிப்பதுதடைசெய்யப்பட்டுள்ளது. ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம். நீரேரியை அண்டியுள்ள தொண்டைமானாறு, அச்சுவேலி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம் அதிகரித்தால் மேலும்பலகதவுகளைத்திறக்கவேண்டிவரும். மக்கள் அவதானமாகஇருங்கள் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.
இந்தஆற்றினூடாகவெயில்நாள்களில் கூட ஆற்றுநீர் அச்சுவேலிக் கிராமங்களில் தேங்கியதால் மக்கள் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர். தற்போதைய கடும் மழையால் அவர்களின் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

**வடமாராட்சி கிழக்கு**
வடமராட்சிகிழக்கில்நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மணற்காடு தொடக்கம் கேவில் வரையான பிரதேசங்களிலேயே வீடுகளுக்குள் வெள்ளம்புகுந்துள்ளது. பொற்பதி, குடத்தனை, நாகர்கோவில், மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, ஆகிய கிராமஅலுவலர்பிரிவுகளிலேயேஅதிகமான வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.
பருத்தித்துறை கேவில்வரையான போக்குவரத்து மதியம் இரண்டு மணிவரை தடைப்பட்டிருந்தது. இடம்பெயர்ந்தமூன்றுகுடும்பங்களைச்சேர்ந்தவர்கள் ஆழியவளை பொது மண்டபம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில்உள்ளவர்களுக்குக்குடும்பம் ஒன்றுக்கு 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேசசெயலர்தெரிவித்தார்.
வடமராட்சி கிழக்குக்கும் ஏ9 வீதிக்குமான குறுக்கு வீதிகளில் தாளைடி, புதுக்காடு தவிர்ந்த ஏனைய அனைத்தும் வெள்ளம் காரணமாக முடங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
பொதுமக்கள்சிரமங்களைஎதிர்கொண்டனர். அன்றாட வேலைகளைச்செய்ய முடியாதவாறுஅனைவருக்குமேமழை தடங்கலைஏற்படுத்தியிருந்தது. மதியத்துக்குப் பின்னர் இடையிடையே சில நிமிடங்கள் வெயில் எறித்தபோதும் மழையும் மந்தாரமுமாகவே வானம் காணப்பட்டது.
(4,26,11,70,160)

## மழை இன்றுடன் குறையும் நேற்று அதிக மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம் டிச 23
இலங்கைக்குத் தென்கிழக்காக வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக பெருமழை பெய்கிறது. இன்று மழை குறைவடைய வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக 89.3மில்லிமீற்றர்சாவகச்சேரிப்பிரதேசத்தில்பதிவாகியுள்ளது. கிளிநொச்சிமாவட்டத்தில்அதிகளவுமழைவீழ்ச்சியாக 220.1மில்லிமீற்றர் ஆனையிறவில் பதிவாகியுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அச்சுவேலியில் 70.4 மில்லிமீற்றரும்பருத்தித்துறையில்74.8மில்லிமீற்றரும்நயினாதீவுப் பகுதியில் 44.3 மில்லிமீற்றரும் கச்சேரிப் பகுதியில் 59.8 மில்லிமீற்றரும் திருநெல்வேலிப் பகுதியில் 69.3 மில்லிமீற்றரும்கோட்டைப்பகுதியில்36.7மில்லிமீற்றரும் நெடுந்தீவுப் பகுதியில் 40.9 மில்லிமீற்றரும் பதிவாகியுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பகுதியில் 158.2 மில்லிமீற்றரும் வள்ளிபுனம் பகுதியில் 195.3 மில்லிமீற்றரும் ஒட்டுசுட்டானில் 301 மில்லி மீற்றரும் பதிவாகியுள்ளது.
கிளிநொச்சிமாவட்டத்தின்இரணைமடுப்பகுதியில்237.3 மில்லி மீற்றரும் ஆனையிறவுப் பகுதியில் 220.1 மில்லி மீற்றரும் பதிவாகியுள்ளது - என்றார். (4,8)

## 77 குடும்பங்களைச்சேர்ந்த 281 பேர் வவுனியாவில்பாதிக்கப்பட்டுள்ளனர்

### மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 23
மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 77 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.
இரண்டு நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக வவுனியா வடக்கில் லைக்கா கிராமத்தில் 36 குடும்பங்களும். பெரியமடுக் கிராமத்தில் 05 குடும்பங்களும், நைனாமடுக்கிராமத்தில்11குடும்பங்களும், மன்னகுளம் கிராமத்தில் 25 குடும்பங்களுமாக 77 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களதுவீடுகளுக்குள்வெள்ளம்சென்றமையால்இந்தநிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளம்மாலையில்வடிந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைக் கிராம அலுவலர்கள் சேகரிக்கும்பணியில்ஈடுபட்டிருந்தனர். சிலபொதுஅமைப்புகள்நேற்றுப்பாதிக்கப்பட்டவர்களுக்குச்சிலஉதவிகளை வழங்கின. (4,110)

## மன்னாரில் 12 படகுகள் சேதம்



மன்னார், டிசெ. 23
மன்னார்வங்காலைக்கடற்கரையில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த மீனவர்களுடைய 12 படகுகளும் மழை மற்றும் காற்றால் சேதமடைந்துள்ளன என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.
மன்னார் மாவட்டத்தில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.
தலைமன்னாரில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான 'பெல்வேறி' கிராமத்தில் 38 குடும்பங்களைச்சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள்தலைமன்னாரில்உள்ள பொது மண்டபம் ஒன்றில் தங்கியுள்ளனர்.
அவர்களுக்குக் கிராம அலுவலர் ஊடாக உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளம்காரணமாகப்பாதிக்கப்பட்டமக்களுக்குஉடனடி நிவாரணங்களை வழங்குமாறும், அவர்களைப் பாதுகாப்பானஇடங்களில்தங்கவைக்குமாறும்அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (4, 56)

## ஆற்றில் நீராடிய இருவர் இறந்தனர்

கொழும்பு, டிசெ. 23
நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்குருஓயா மாப்பாகந்த பகுதியில் உள்ள ஆற்றில் நீராடச்சென்ற இரண்டு பேர் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
அட்டன் விஜிராபுரம் பகுதியை சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.
அப்துல் ரஹ்மான் (வயது 13), மொகமட் முஸ்தாக் (வயது - 42) ஆகியோரே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சடலங்கள் நாவலப்பிட்டி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (4)


MIGRATE TO CANADA
2019 ஆம் ஆண்டு கனடாவில்
குடும்பமாக/ தனியாக குடியேற
விரும்புவர்களுக்கான இறுதி சந்தர்ப்பம்
➤ 100% எழுத்து மூலமான உத்தரவாதம்.
➤ ஆகக்குறைந்த தகைமை A/L சித்தி. Diploma / Degree
➤ 40 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்.
➤ எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்
➤ இலவச விமான பயணச் சீட்டுக்கள்
விண்ணப்ப முடிவுதிகதி: 28.12.2018
Online மூலமாகவும்
விண்ணப்ப படிவங்களை அனுப்ப:
http://www.winstarjaffna.com.immigration-evaluation-form
WINSTAR CONSULTANTS PVT LTD.
45, VEMBADI STREET, JAFFNA.
021 300 4641
www.winstarjaffna.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சியில் கன மழை - இரணைமடு வான் கதவுகள் திறப்பு - மூன்று பிரதேச செயலர் பிரிவில் மக்கள் அவலம்**









# வெள்ளத்தில் மூழ்கின கிளிநொச்சியின் பகுதிகள்

## குளங்களின் வான் கதவுகள் திறப்பு, மக்கள் அவலம்




கிளிநொச்சி, டிசெ.23
வடக்கின்வன்னிப்பகுதியில்கடந்த இரண்டு நாள்களாக பெய்த கன மழைகாரணமாக, வன்னிப்பகுதியின் அனைத்து பெரிய, சிறிய குளங்களும் நீர் நிரம்பியதால், வான்கதவுகள்திறக்கப்பட்டுள்ளன. பல சிறிய குளங்கள் உடைப்பெடுத்துமுள்ளன.

கிளிநொச்சியில் பெய்து வரும் கடும்மழைகாரணமாகமாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வழமைக்கு மாறாக 225 தொடக்கம்370மில்லிமீற்றர்வரையான மழைபெய்துள்ளது. இதனால்பல இடங்களிலும் அதிக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும்வான்பாய்கின்றமையினால் வீதி போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சில கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, தொடர்புகள் துண்டிக்கப்பட்டநிலையில் காணப்பட்ட மக்களை படகுகள் மூலம் மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுப்பட்டுள்ளனர்.

வீடுகள் வியாபார நிலையங்கள் என்பவற்றுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

இரணைமடுக்குளத்தின்நீர்மட்டம் 38 அடியாக உயர்ந்துள்ளதோடு அனைத்துவான்கதவுகளும்திறக்கப்பட்டுள்ளன. மூன்றடிஅளவுக்கு வான் பாய்கிறது. இரணைமடு குளத்தின்நீர் கொள்ளளவுஉயரம் 36 அடிஎன்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல்முல்லைத்தீவில், மாங்குளம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, விசுவமடு போன்ற பகுதிகளில் உள்ள குளங்களின் நீர்மட்டமும்உயர்ந்துள்ளதோடுவீதிகளை மேவிப்பாயும் வெள்ள நீரால் அவசர போக்குவரத்து உட்பட்ட அன்றாடக் கருமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முதல் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 3 ஆயிரத்து 338 குடும்பங்களை சேர்ந்த 10ஆயிரத்து852பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்.


22 பாதுகாப்பு அமைவிடங்களில் ஆயிரத்து 105 குடும்பங்களைச் சேர்ந்த3ஆயிரத்து686பேர்தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**கரைச்சி பிரதேச செயர் பிரிவில்**
964 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்த 421 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 9 பாதுகாப்பான அமைவிடங்களில் 249 குடும்பங்களைச்சேர்ந்த [illegible] தங்கவைக்கப்பட்[illegible]வும், நான்கு வீடுகள் மோசமான பாதிப்புக்கும், நான்குவீடுகள்பகுதியளவிலும்பாதிக்கப்பட்டுள்ளன.

**கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில்**
ஆயிரத்து 361 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 968 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9 பாதுகாப்பான அமைவிடங்களில் 749 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 401 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர், இங்கு36வீடுகள்பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

**பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில்**
ஆயிரத்து 13 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 463 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பாதுகாப்பான அமைவிடங்களில்107குடும்பங்களைச்சேர்ந்த387பேர்தங்கவைக்கப்பட் டுள்ளனர். இதில் 72 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வெள்ளஇடரை எதிர்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார நேற்றுக்காலை பணித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்டசெயலர் சுந்தரம்அருமைநாயகம் தெரிவித்தார். [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கியது முல்லைத்தீவு பிரதேசம்

## மக்கள் அவலம், வயல் அழிவு, கால்நடைகள் இறப்பு

முல்லைத்தீவு,டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றும்,நேற்று முன்தினமும் பெய்துவரும் கடும் மழையால்,முல்லைத்தீவின் நகர்பகுதி, புதுக்குடியிருப்பு நகர்பகுதி, கைவேலி,தேவிபுரம்,விசுவமடு, மாணிக்கபுரம்,பேராறு,மன்னாகண்டல்,வசந்தபுரம்,முறிப்பு, செல்வபுரம்,வட்டுவாகல், கேப்பாபுலவு, பிரம்படி, புளியங்குளம்,கற்சிலைமடு,கருவேலன்கண்டல், போன்றதாள்நிலப்பிரதேசங்களில்,மக்களின்வாழ் இடங்களுக்குள் வெள்ளம் புகுந்துகொண்டதால், மக்கள் நேற்று அதிகாலை தொடக்கம் வீடுகளை விட்டு வெளியேறி மேட்டுநிலங்களுக்கு சென்றுள்ளனர்.மக்களின்,வயல் நிலங்கள் அழிந்தும்,கால்நடைகள் இறந்தும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.





இதனால் மக்களின் வீட்டுப்பொருள்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. புதுக்குடி யிருப்பு,கேப்பாபுலவு வீதி,ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதி,மாங்குளம் வீதி, முள்ளியவளை குமுழமுனை ஆகிய வீதிகளை மூடி வாகனங்கள் செல்லமுடியாத அளவிற்கு வெள்ளம் பாய்வதால் மக்களின் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

பேராறுபெருக்கெடுத்துஓடுவதால்அதனை அண்டிய பகுதி மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளார்கள்.

வசந்தபுரம் கிராமம் நீரில் மூழ்கியுள்ளது. 175 குடும்பங்கள் நீரில் மூழ்கி வெளியில் வரமுடியாதநிலையில்படையினர்மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் படகுகள் ஊடாக மக்களை மீட்டுள்ளனர்.



இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில்ஏற்பட்டமழை வெள்ளம் காரணமாக மூவாயிரத்து794குடும்பங்களைச்சேர்ந்த12ஆயிரத்து 651 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 25 தற்காலிகமுகாம்களில்ஆயிரத்து 240 குடும்பங் களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 805 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இடம்பெயர்வோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைகள் பொது மண்டபங்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவினை வழங்கும் நடவடிக்கையில் இடர் முகாமைத்துவ நிலையத்தினருடன், படையினரும்ஈடுபட்டுள்ளனர். இந்தவெள்ள இடரின்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளபலஆயிரம்ஏக்கர்வயல்நிலங்களை மழைவெள்ளம்மூடியுள்ளதுடன், பெருமளவானகால்நடைகளும்உயிரிழந்துள்ளன. இன்னும் சரியான விபரங்கள் கிராம அலுவலர்களூடாகஎடுக்கப்பட்டுவருவதாகஇடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ரி3,246)

# நீர் நிரம்பி வான்பாயும் முத்துஐயன் கட்டுக்குளம்

முல்லைத்தீவு.டிசெ.23

நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முத்துஐயன் கட்டுக்குளத்தின் நீர்மட்டம் 26 அடியாக உயர்ந்து வான்பாயத் தொடங்கியுள்ளது.

24அடிகொள்ளவுகொண்டகுளத்தின்நான்குவான்கதவுகளும் நேற்றுக் காலை நீர்பாசனத் திணைக்கள பொறியலாளரால் திறந்துவிடப்பட்டுள்ளன.

கடந்த2015ஆம்ஆண்டுஅறுநூறுமில்லியன்ரூபாசெலவில் சீரமைக்கப்பட்டகுளத்தின்நீர்மட்டம்கடந்தமூன்றுஆண்டுகளாக நீர்வரத்துக்குறைவாகக்கணப்பட்டமையால்நிறையவில்லை. கடந்தஇரவுபெய்தமழையினால்நீர்மட்டம்அதிகரித்துள்ளது. 26அடியாகஉயர்ந்து2அடிவான்பாய்ந்தநிலையில்,குளத்தின் நான்குகதவுகளில்3வான்கதவுகள்10அடிஆகவும்1வான்கதவு 20 அடியாகவும் திறந்துவிடப்பட்டுள்ளது. தற்போதும் குளத்துக்கானநீர்வரத்துஅதிகரித்துக்கொண்டேஇருக்கின்றது. குளத்தின்நீர்மட்டம்கடந்தசிலஆண்டுகளைவிடஇந்தஆண்டு பெய்த மழையினால் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (ரி3,500)



# வவுனியாவில் கடும் மழை

வவுனியா,டிசெ.23

நேற்று முன்தினம் வவுனியாவில் 88.6 மில்லிமீற்றர்மழைவீழ்ச்சிபதிவாகியுள்ளதாக வவுனியாமாவட்டவானிலைஅவதானநிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம்வவுனியாவில்பெய்தகடும் மழை தொடர்பாக வவுனியா பிரதேச வானிலை அவதானநிலையப் பொறுப்புஅதிகாரி ரி.சதாந்தனிடம் கருத்து கேட்டபோதே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வவுனியாவில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்துநேற்றுக்காலை8.30மணிவரையுள்ள 24 மணித்தியாலங்களில் வவுனியா மாவட்டரீதியில் 88.6 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதுடன், அதிகபட்சமாக நெடுங்கேணி பிராந்தியத்தில் 160 மில்லி மீற்றர் மழையும், செட்டிகுளம் பிராந்தியத்தில் 54 மில்லி மீற்றர் மழையும், உலுக்குளம் பிராந்தியத்தில்14.3மில்லிமீற்றர்மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. அத்துடன் ஒரு சில நாள்கள் வரை மழைவீழ்ச்சி தொடரும் எனவும் வானிலை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் மழையின் பாதிப்பால் பெரியளவிலான இடர்கள் எவையும் பதிவாகவில்லைஎன்றுதெரிவித்தவவுனியாமாவட்ட இடர் முகாமைதுவ பிரிவின் உதவிபணிப்பாளர் சூரியராயா, வவுனியா வடக்கின் ஏம்பன் குளத்தில் உடைவு ஏற்பட்டு, யூரியாபைகள் வழங்கபட்டு, இராணுவத்தின் உதவியுடன் குளத்தின் உடைவுகள் சீர்செய்யபட்டதாகவும் தெரிவித்தார். (110)

# இடரை எதிர்கொள்ள நடவடிக்கை மாவட்ட செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வெள்ள இடரை எதிர்கொள்ளும்வகையில்,ஏற்பாடுகளைமேற்கொள்ளுமாறுஇடர்முகாமைத்துவஅமைச்சர் ரஞ்சித்மத்துமபண்டாரநேற்றுக்காலைபணித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது: மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகளை எதிர்கொள்வதற்கு மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தயாராக உள்ளன.

வெள்ளத்தினால்இடம்பெயர்ந்துள்ளமக்களுக்கானமுதலுதவிகள்,சமைத்தஉணவுகள்வழங்குவதற்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருட இறுதி என்ற அடிப்படையில் மாவட்டச் செயலகத்தில் அதிக நிதி இருப்பில் இருப்பது இல்லை. ஆனாலும்எந்தநேரத்தில்இடர்களை எதிர்கொள்வதற்குஎவ்வளவுநிதியையும்பெற்றுக்கொள்ளும்நிலையில்இருக்கின்றோம்என மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஏழுநலன்புரிநிலையங்களில்229குடும்பங்களைசேர்ந்து858பேர்தற்போது(22ஆம் திகதி காலை வரையான தகவல்) வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இவர்கள் இரத்தினபுரம் பொது நோக்கு மண்டபம், கிளிநொச்சிமத்திய ஆரம்பவித்தியாலயம், பாரதிபுரம்மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மாவடியம்மன் ஜெப ஆலயம், திருமுருகண்டி இந்து வித்தியாலயம், உயதநகர் கிழக்குப் பொது நோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால்பாதிக்கப்பட்டுள்ளமக்கள்தங்கியுள்ளனர் என கரைச்சிப் பிரதேச செயலர் த. முகுந்தன் தெரிவித்தார்.

இதேவேளை கண்டாவளைப் பிரதேசத்தில் ஏழுமுகாம்களில்341குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து19பேர்தங்கியுள்ளனர்.முரசுமோட்டை அரசினர்தமிழ்க்கலவன்பாடசாலை, தம்பிராசபுரம்அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, குமாரசாமிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தர்மபுரம் பொது நோக்கு மண்டபம், தர்மபுரம்மேற்குபரிலூர்த்தேவாலயம், பிரமந்தனாறுமகாவித்தியாலயம். மயில்வாகனபுரம் மகாவித்தியாலயம்போன்றஇடங்களில்தங்கியுள்ளனர்எனக்கண்டாவளைபிரதேசசெயலர் ரீ.பிருந்தாகரன் தெரிவித்தார்.

பிரமந்தனாறு பகுதிகளில் இதுவரை (22 ஆம் திகதிகாலைவரை) கிடைத்ததகவல்களின்படி 18 மாடுகள்150 க்கு மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (214,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் பொறுப்பதிகாரி மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வி

வவுனியா,டிசெ.23
வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம்கனகராயன்குளம்பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிமீது இதுவரைஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்இ.சாள்ஸ்நிர்மலநாதன்கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா மாவட்டம் கனகராயன்குளம் பகுதியில்ஏ-9வீதியில் குத்தகை அடிப்படையில் பிறரின் காணியில் கடைநடத்தி வருபரால் அந்தக்காணிஉரிமையாளரானமுன்னாள் போராளிமற்றும்அவரதுமகள்உள்ளிட்டவர்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது இதுவரையில்எந்தநடவடிக்கையும்எடுக்கப்படாதது ஏன்?அந்தச் சம்பவம் இடம்பெற்று 4 மாதங்கள் கடந்துவிட்டபோதும், உரிய தீர்வு கிட்டவில்லை.

எனவேஇதுதொடர்பில்உரியதீர்வைவழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரை காங்கேசன்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஊடாகப்பெறப்பட்ட அறிக்கையில், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிக்குஎதிராகப்பெரும் குற்றச் சாட்டுக்கள் எவையும் கிடையா. அதனால் பெரும் நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் பொறுப்பதிகாரிக்கு ஓர் எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுஎனப்பிரதிப்பொலிஸ்மா அதிபர்பதிலளித்தார். (105)

# பேசாலைத் துறைமுக வேலைகள் மக்கள் எதிர்ப்பால் தடைப்படும் நிலை

**மன்னார்,டிசெ.23**
**ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பில், மன்னார் மாவட்டம் பேசாலைப் பகுதியில், 24.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்ட துறை முக வேலைகளை 3 ஆண்டுகளாக வரவேற்ற மீனவர்கள், தற்போது எதிர்ப்புத் தெரிவிப்பதனால் திட்டம் தடைப்படும் சூழல் நிலவுவதாக அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

மன்னார் மாவட்டம் பேசாலைப் பகுதியில் பெரியமீன்பிடிதுறைமுகத்தினை அமைப்பதற்காக, 2016 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு2017, 2018ஆம்ஆண்டுகளில், களப்பரிசோதனை, மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கருத்தாய்வு , பிரதேச மக்களின் கருத்து என்பன தனித்தனியே அறியப்பட்டது.

இதன்பின்னர்ஒருங்கிணைந்த அனைவரின்சம்மதம்கிடைத்தபின்பேதிட்டம்தயார் செய்யப்பட்டது. திட்டத்தில் துறை முகத்துக்குச் செல்வதற்கு தனியான பாதையும் அமைக்கத்திட்டமிடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் கடற்றொழில் அபிவிருத்திப்பணிகளைமேற்கோள்ளவேண்டும் என, 2015 ஆம் ஆண்டு முதன் முதலாக வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன், தலைமை அமைச்சரின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் தலைமையிலானசிறப்புஅபிவிருத்திக்குழுக்கூட்டத்தில்விடுத்தகோரிக்கையுடன், குறித்ததிட்டயோசனை ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான அமைச்சரவை அனுமதி2018 ஆம்அண்டுஓகஸ்ட்14ஆம்திகதிவழங்கப்பட்டது.

பேசாலைதுறைமுகம்2022ஆம்ஆண்டு முடிவடையவேண்டியதிட்டம். குறித்ததிட்டத்தினையேஇடைநிறுத்துமாறுபேசாலை உள்ளூர்மீனவ அமைப்பு ஒன்று மீனவர்களின் ஒப்பத்துடன் மணிலாவில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்துக்கு எழுத்துமூலம் கடிதம் அனுப்பியுள்ளது இதனால் பேசாலை துறைமுகப் பணி கேள்விக்கு உட்பட்டு நிக்கின்றது.

திட்டத்துக்குஎதிர்ப்புத்தெரிவிக்கும்பேசாலை மீனவர் சங்கத் தலைவர் ஜே.யோகராய் குரூஸ் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

"துறைமுகம் வருமானால் பாரம்பரிய தொழில் முறைகளான கரவலை , விடு வலை , பெப்பம், சிறுபாச்சுவலை , தூண்டில் போன்ற தொழில் முறைகள் பாதிப்படையும். இதனால்400மீனவக்குடும்பங்கள்பாதிப்படையும். கடல்பகுதியில்இருந்து 40ஆயிரம்கியூப்மண்வெளியேஎடுக்கும் போது பெரும் அரிப்புத் தன்மையும் ஏற்படும் - என்றார்.

இதேநேரம் மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் யஸ்ரின் சொய்சா இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது, "யாரோஒருநிறுவனம்கூறியது என்பதற்காகக் கற்பனையான விடயங்களைவைத்துஎதிர்க்கமுடியாது. இதனை தற்போது எதிர்ப்பவர்கள் ஆரம்பத்தில் கூறியிருந்தால் நாம் வேறு இடம் தொடர்பில் சிந்தித்திருக்க முடியும்" - என்றார்.

வடக்குமாகாணபிரதமசெயலர்அ.பத்திநாதன் தெரிவித்ததாவது;

இத் திட்டத்தை இன்று எதிர்ப்பவர்களுக்கு இத் திட்டம் ஆரம்பப் பணியில் இருந்தே அனைத்தும் தெரிவிக்கப்பட்டது. அப்போது இவர்களும்தமதுகருத்துக்களைதெரிவித்தனர். அதன்அடிப்படையிலேயேதிட்டம்தயாரிக்கப்பட்டது. தற்போது அதே மக்களே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். வடக்கு மாகாணசபையினதும், மத்தியஅரசினதும் துறைசார்திணைக்களங்கள், மீனவர்களின் ஒத்துழைப்புடனேயேதிட்டம்தயார்செய்யப்பட்டது. இருப்பினும்அந்தமக்கள்விரும்பாது திணித்து. ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தை மேற்கொள்ளாது . இதனால் இத் திட்டம் கைவிடப்படக் கூடிய சூழலும் ஏற்படலாம்" - என்றார். (105)

## பிரமந்தனாறு குளத்தில் மூழ்கி ஒருவர் சாவு



கிளிநொச்சி,டிசெ.23
கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தில் மூழ்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். கடந்த வியாழக்கிழமை காலை குளத்தில் மீன்பிடிக் கச் சென்ற 39 அகவையுடைய குமாரசாமிபுரம் விசுவமடு பகுதியினைச் சேர்ந்த செபஸ்ரியான்பிள்ளை திசைநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலம் தர்மபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் நீரில்மூழ்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி 3)




## நகரசபைத் தொழிலாளர்கள் மதிப்பளிப்பும் விருது வழங்கலும்

வவுனியா,டிசெ.23
வவுனியா நகரசபை தொழிலாளர்களை மதிப்பளித்து விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நகரசபை கலாசார மண்டபத்தின் விருந்தினர் விடுதியில் இடம் பெறவுள்ளதாக, தொழிலாளர்கள் நலன்புரிச்சங்கம் அறிவித்துள்ளது.

உழைக்கும் வர்க்கங்களின் உழைப்பால் நடத்தப்படும் தொழிலாளர்களின் நிகழ்வில், ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் கௌரவிப்பு, சேவையில் மூத்த தொழிலாளர்கள் கௌரவிப்பு, சேவையில் திறமையுள்ள வர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

பல பிரமுகர்கள் கலந்துகொண்டு விருது வழங்கவுள்ளதாகவும், நிகழ்வின் இறுதியில் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் நகரசபை தொழிலாளர்கள் நலன் புரிச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.


## கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் கிறிஸ்மஸ் விழா

கிளிநொச்சி, டிசெ. 23
கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தினால் கிறிஸ்மஸ் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு ,இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நத்தார் விசேட நிகழ்வில், அனுராதபுரம் மறை மாவட்ட ஆயர் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

பாடகர் குழுக்கள் நத்தார் கீதங்களை இசைத்தனர். இராணுவத்தினரின் நத்தார் பாடல் குழுவினரும் நத்தார் கீதங்களை இசைத்ததுடன், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன்போது சிறார்களை மகிழ்வித்து ,பரிசுகளையும் வழங்கினர். இந்த நிகழ்வில் பேராயர்,மதகுருமார், சர்வமதக் குருமார், கிளிநாச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி, படைப்பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

ஒன்பதாவது தடவையாக நத்தார் சிறப்பு நிகழ்வுகள் கிளிநாச்சி இராணுவ தலைமையகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



## சிறுவர் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



வவுனியா,டிசெ.23
வவுனியா தேக்கம் தோட்டம் பாரதி சிறுவர் கழகத்துக்கு தமிழ் விருட்சம் அமைப்பினூடாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கனடா "ராம் பவுண்டேசனின்" நிதி உதவியில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளிுக்கு அமைவாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் துடுப்பாட்ட உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறை நாள்களிலும் வியாபாரத்தில் ஈடுபடுங்கள்

## வர்த்தகர்களிடம் வணிகர் கழகம் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,டிசெ.23**

**பண்டிகை காலத்தில் பொதுமக்களின் நலன் கருதி விடுமுறை நாள்களிலும் யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.**

எதிர்வரும் நத்தார் ,புதுவருடம் மற்றும் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டே இந்தச் சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வணிகர் கழகத்தின் செயலர் சி.கேசவன் தெரிவித்துள்ளார்.
இன்று தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வரை உள்ள விடுமுறை நாள்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறும் அறிவித்துள்ளனர்.
முன்னைய காலங்களிலும் இதுபோன்ற சிறப்பு நாள்களை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. (ஐ)



யாழ்ப்பாணம் மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் செயல்பாடுகளை விரிவாக்கும் முகமாக இவ் ஆணைக்குழுவுக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மறைக்கல்வி நடுநிலைய வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது. இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நட்டுவைத்தார். (ஜ- 222)

## பரிசளிப்பும் மாநாடும்

யாழ்ப்பாணம்.டிசெ.23
பன்னாட்டு நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு ராகம அனுசரணையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் பரிசளிப்பு நிகழ்வும் மாநாடும் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## தவறான முடிவால் குடும்பப் பெண் சாவு

கொடிகாமம்.டிசெ. 23
தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை உடுவில் மல்வம் மயான வீதியில் இடம்பெற்றது.
இரண்டு பிள்ளைகளின் தாயான காளிதாஸ் செல்வராணி வயது 45 என்ற குடும்பத் தலைவியே உயிரிழந்துள்ளார். குடும்ப பிரச்சினை காரணமாக உயிரை மாய்த்துக்கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. திடீர் சாவு தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.
அறிக்கையினைப் பார்வையிட்டமல்லாக நீதிவான் நீதிமன்ற நீதிபதி திடீர் சாவு விசாரணை அதிகாரி ஜேக்கப் கிறிஸ்தோப்பர் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-159)

## மக்களுக்கான இலவச சேவை

கொடிகாமம்.டிசெ.23
சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு "உடல், உள ஆரோக்கியத்தை பாதிக்கும் உடற் பருமன்" எனும் தொனிப்பொருளில் மக்களுக்கான இலவச சேவை வழங்கப்படவுள்ளன.
கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள பழைய பிரதேச சபை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் மருத்துவக்கலாநிதி திருமதி சியாமளா துரைரட்ணம், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் கிராமிய சித்த மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி திருமதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
உடல் எடை, உயரம் அளவிடப்பட்டு ஆலோசனை வழங்கல், ஆரோக்கிய உடற்பயிற்சி நடை தொடர்பான விளக்கம், உடற்பருமனைக் குறைப்பதற்கு ரிய யோகாசனப் பயிற்சி, குருதி அமுக்கம், நீரிழிவு போன்ற நோய் அறிவுரைகள் வழங்கல் போன்ற இலவச சேவைகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-159)

## பண்பாட்டு பெருவிழா

வடமராட்சி,டிசெ.23
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச கலாசார பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தில் நாளை திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மருதங்கேணி பிதேச செயலர் க.கணேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.
இதன்போது மருதசாகரம் நூல்2 பிரதேசமலர் வெளியீடும், அம்பா பாடல் இறுவட்டு அறிமுக நிகழ்வும் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாட்டச் செயலர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராகப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி சி.சுஜீவா, யாழ்ப்பாண மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் கில்பேட் குணம், பொறியியலாளர் அ.ஜெசிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## சிறப்புக் கூட்டம்

சாவகச்சேரி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு அங்கீகரித்தல் தொடர்பான சிறப்புக்கூட்டம் பிரதேசசபையின் சபா மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று பிரதேச சபையின் செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-159)

## பொதுக் கூட்டங்கள்

கொடிகாமம், டிசெ. 23
கைதடி மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சரஸ்வதி வைர விழா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி சு. வினோதினி தலைமையில் நடைபெறும். மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலர் அறிவித்துள்ளார். (ஐ-159)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக அங்கத்தவர் ஒன்று கூடலும் கலந்துரையாடலும் இடம்பெற்று அதன் பின்னர் ஆசிரியர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையிலான நட்புறவுத் துடுப்பாட்டப்போட்டி நடைபெற்று தொடர்ந்து மதிய போசன நிகழ்வு இடம்பெறும். இறுதி நிகழ்வாக வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும். எனவே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சாவகச்சேரி நகரசபையின் பாதீடு நிறைவேற்றம்

சாவகச்சேரி,டிசெ.23
சாவகச்சேரி நகரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.
பாதீடு ஏற்றுக் கொள்வதற்கான சிறப்பு அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது வீதிகள் சீரமைப்புத் தொடர்பாக உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட திருத்தங்களுடன் பாதீட்டினை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.
அடுத்த வருடத்துக்கான உத்தேச வருமானமாக 19 கோடியே 74 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவும் உத்தேச செலவாக 19 கோடியே 73 லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் 9 ஆயிரம் ரூபா மிகையாகவும் காணப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது.
பாதீட்டில் அடுத்த வருடம் மைய, மாகாண அமைச்சுக்கள் மற்றும் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்படும் என எதிர்பார்ப்பு நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பாதீட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.
இதேவேளை நேற்றுமுன்தினம் உத்தேச பாதீடு தொடர்பாக்க தவிசாளர் அறிக்கையினைச் சமர்ப்பித்த வேளையில் உறுப்பினர் ம.நடனதேவன், சபையின் பாதீடு தொடர்பாக உறுப்பினர்களுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அனுப்பிவைத்திருந்தால் அதில் வட்டாரத்துக்குக் கிடைக்கக்கூடிய தேவைகள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடி முடிவு செய்து அமர்வில் எமது கருத்தினைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க முடியும். இன்றைய அமர்வில் நிதி அறிக்கையினைச் சமர்ப்பிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதவாறு தவிசாளர் பார்த்துக் கொள்ளவேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். (ஐ-9)

## முதியோர் சங்க நிர்வாகத் தெரிவு

அளவெட்டி,டிசெ.23
யாழ்ப்பாணம் மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஜே.144 பிரிவு கிராம அலுவலகத்தில் சங்க தலைவர் ந.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவர். செ..எட்வின் குணரட்ணம்,. உபதலைவர் அ. அற்புதம்.செயலாளராக.து.சரோயினிதேவி, உபசெயலாளர் த.கதிர்காம நாதன், பொருளாளர் தி.தெய்வசோதி ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக பெ.தர்மர், ஆ.சிவசம்பு, ஆர். கே.செல்லத்துரை, க.சின்னராசா. ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
நிகழ்வில் கிராம அலுவலர், சமுகசேவை அலுவலகர் சமுக அபிவிருத்தி அலுவலகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-63)

## டிப்ளோமா கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.23
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியில் டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அவையாவன தொலைத் தொடர்பு தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா , நிர்மாண தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா ,ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகன) தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா ,கணிய அளவையியல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா, கணக்கியல் தேசிய டிப்ளோமா , ஆங்கிலம் மற்றும் கல்வி டிப்ளோமா போன்றவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அத்துடன் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான 3 மாத அடிப்படை ஆங்கில கற்கை நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

see more news in NEWUTHAYAN.COM

# காய்ச்சல் என்று சேர்க்கப்பட்ட 9 ஆயிரம் பேரில் 1,448 பேருக்கு டெங்கு என்று உறுதியாகியுள்ளது

## யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

**காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்த ஆண்டு 9 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டனர். இதில் ஆயிரத்து 448 பேர் டெங்கு நோயாளர் என இனம்காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

"யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டின் மழை காலத்தின் பின்னர் ஏற்பட்ட நுளம்புப் பெருக்கம்காரணமாகடெங்குஅறிகுறியினா் தொகை சற்று அதிகரித்தே காணப்படுகின்றது. இதனால் நோயாளர் அனுமதியும் அதிகரிக்கின்றது.

இதேநேரம்யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில்ஆயிரத்து100நோயாளர்களை ஒரே தடவையில் பராமரிக்கும்வசதி காணப்படுகின்றது. இருப்பினும்கடந்தவாரம்காச்சல் காரணமாக அதிகமானவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இதன் காரணமாக ஒரு விடுதியில் 40 படுக்கை வசதிகள் மட்டுமே கானப்படும் நிலமையில் 50 முதல் 60 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் கடும் பாதிப்புற்ற நோயாளர்களுக்கு கட்டில் வசதியை வழங்கி ஏனையோரைத் தரையில் அமர்த்தும் நிலமையும் காணப்படுகின்றது. குறிப்பாக இந்த மாதம்நோயாளர்தொகைசடுதியாகஅதிகரித்தவண்ணமே காணப்படுகின்றது.

இந்தவகையில்தற்போதுநிலவும்மழையின் காரணமாகமேலும்நுளம்புபெருக்கம்ஏற்பட்டால் இந்த நிலமை நீடிக்கும்என்றே கருதப்படுகின்றது. இதனால் இதற்கான சிகிச்சை ஏற்பாட்டுக்கு நாம் தயார் செய்தாலும் தடுப்பு முறைகளைமக்களும்கருத்தில்கொள்வதன் மூலமே இதனை கட்டுப்படுத்த முடியும். "என்றார். (ஐ-105)



# ஒளிவிழா நிகழ்வுகள்

சாவகச்சேரி, டிசெ.23

தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டிலான ஒளிவிழா நிகழ்வுகள் வலயக் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றன.

தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி ஆலய போதகர் அருட்பணி என்.ரி. ஜெபநேசனின் ஆரம்பப் பிரார்த்தனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

வரவேற்றுபுரையைத் தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், ஆசியுரையை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நத்தார்தினச்செய்தியைசாவகச்சேரிபுனித லிகோரியார்ஆலயப்பங்குத்தந்தைஅருட்பணி றெக்ஸ் சௌந்தரா நிகழ்த்தினார்.

வலய அலுவலர்களின் கரோல் கீதங்களும் சாவகச்சேரி புனித லிகோரியார் இளையோர் மன்றத்தின் வில்லிசையும் இடம்பெற்றன. இறுதியாக நத்தார் தாத்தா அனைவருக்கும் பரிசில்களை வழங்கினார். (ஐ-159,9)

← ← ← ←



# வடலிகளைப் பிடுங்கினர் என கைதான இருவருக்குப் பிணை

சாவகச்சேரி. டிசெ.23

காணி துப்புரவின்போது அனுமதியின்றி வடலிகளைப் பிடுங்கினர் என்று குற்றம் சாட்டப்பட்ட இருவரைப் பிணையில் செல்லுமாறு சாவகச்சேரிநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

நாவற்குழி- கேரதீவு வீதியில் உள்ள பிணமுருங்கை மயானத்தை அண்டிய 10 ஏக்கர் காணியில் விவசாயம் செய்வதற்காகக் காணிஉரிமையாளர்கனரகவாகனங்கள்மூலம்துப்புரவுப்பணியை மேற்கொண்டிருந்தார்.

காணியில்காணப்பட்ட500க்கும் மேற்பட்ட பனை வடலிகள் பிடுங்கி அகற்றப்பட்டன என்று தெரிவித்து பொதுமக்களால் பனை அபிவிருத்திச்சபைக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்ற சபையினர் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவிடாமல் தடுத்ததுடன் அந்தப் பிரிவு கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும்அறிவித்தனர். பொலிஸார் அங்கு வந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்ட இரு வாகனங்களின் சாரதிகளையும் கைதுசெய்ததுடன்வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இரு சாரதிகளையும் வாகனங்களையும்கடந்தசெவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில்முற்படுத்தியபோதுசாரதிகளை 5 லட்சம் ரூபா ஆட்பிணையில் வாகனங்களை 25 லட்சம் ரூபா பிணைமுறியிலும் செல்லுமாறு உத்தரவிட்டு வழக்கைஎதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ-9)

# கடைத் தொகுதிகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபை உறுப்பினர் கோரிக்கை

வேலணை,டிசெ.23

வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கடைத்தொகுதிகளைமீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றுவேலணைப்பிரதேச சபை உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச சபையின்மாதாந்தஅமர்வுசபையின் சபா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

"எமது பிரதேசசபைக்குரிய கடைகள் பல தனி நபர்களுக்குக்கடந்தகாலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுள்அநேகமானகடைகள்பாழடைந்துகாணப்படுகின்றன. இவ்வாறு பாழடைந்து காணப்படும் கடைகளால்நகர்ப்பகுதிபொலிவிழந்ததாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் எமது பிரதேசத்தின் நகரப்பகுதியை அபிவிருத்திசெய்யும் முகமாக குறித்த கடைகளை புதுப்பித்து அதை நவீன கடைத்தொகுதிகளாக மாற்றி அமைப்பதுடன் அக் கடைகளைஏற்கனவேசபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கு மீள் ஒப்பந்தம்மூலமோஅல்லது புதிய ஒப்பந்தம் மூலமோ வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம்நகரைஅபிவிருத்தி செய்வதுடன் சபையின் வருமானத்தையும் அதிகரிக்கமுடியும்என்பதை இச்சபையில் ஒரு தீர்மான வரைபாக முன்வைக்கின்றேன்" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மரங்கள் நடுகை



சாவகச்சேரி,டிசெ.23

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 69ஆவதுஅண்டுநிறைவையொட்டி கைதடி நகரப் பகுதியில் உள்ள வீதிகளில் கடந்த செவ்வாய்கிழமை 69 மரக்கன்றுகள் நடப்பட்டன.

கைதடி தமிழரசுக் கட்சியின் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் விருந்தினராகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார். (ஐ-9)







சாவகச்சேரி,டிசெ.23

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தின்ஒளிவிழாநிகழ்வுகள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை சங்கத் தலைவர் இ.இராஜசுதாகர்தலைமையில்இடம்பெற்றன. நத்தார் ஒளியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தூய ஆவியானவரின் பாடல், ஆரம்பச் செபம் வேதாகம வாசிப்பு செயலகப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயப் பங்கின் சிறுமிகளால் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

சாவகச்சேரிபுனிதலிகோரியார்ஆலயபங்குத் தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சௌந்தரா கிறிஸ்மஸ் செய்தியையும் ஆசியுரையையும் வழங்கினார்.

பிரதேச செயலக அலுவலர்களின் குழுப்பாடல், அசெம்பிளிஒவ்கோட்மாணவியின் நடனம், சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய மாணவிகளின் வில்லுப்பாட்டு, சியோன்தேவாலய மாணவியின்நடனம் என்பன இடம்பெற்றன. நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களுக்கு நத்தார்ப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் நத்தார்த் தாத்தாவால் பார்வையாளர்கள் விருந்தினர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நன்றியுரையைப் பிரதேச சமுர்த்தி அலகின்தலைமையகமுகாமையாளர்இ.அன்ரனி நிகழ்த்தினார். (ஐ-9)

# கலைவிழாவும் வழியனுப்பும் நிகழ்வும்

சாவகச்சேரி, டிசெ.23

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு வேரக்கேணி கலைமகள் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவும் அடுத்த வருடம் பாடசாலைகளில் இணையவுள்ளமாணவர்களுக்குவழியனுப்பும் நிகழ்வும் முன்பள்ளியில் கடந்த செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்றன.

முன்பள்ளிஅபிவிருத்திச்சங்கத்தலைவர்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர்திருமதிசிவமங்கைஇராமநாதன்கலந்து கொண்டார். (ஐ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி நேர வேலைக்கு ஆள் தேவை**

சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
கடமையாற்றக்கூடிய
சிங்களம் சரளமாக எழுத, வாசிக்க,
பேச தெரிந்தவர்கள்
அடிப்படை கணினி அறிவுடையவர்கள்
தேவை.
26.12.2018 புதன்கிழமைக்கு முன்
தொடர்புகொள்ளவும்.

076 746 6666, 021 223 2616

**எங்கள் அன்புநிறைந்த வாடிக்கையாளர்களே!**

எங்களிடம் அற்லஸ், சீபிறா, ஸ்கூல்மற், ரட்ணா, எல்லாக் கொப்பிகளுக்கும் 25% கழிவு வழங்கப்படுகிறது. அத்துடன் பாடப் புத்தகங்கள் உபகரணங்களுக்கும் 10% கழிவு வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம்.

A.C.D
No. 212, 214, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C 8802/15/17)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்தி Ambal Bakery இற்கு அருகாமையில் பெரிய 5 Bedrooms, 3 attached bathrooms, முற்றிலும் Tiles பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
NGO, நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 524 2086 / 077 824 5527

**வீடு, காணி தேவை**

திருநெல்வேலி, யாழ் பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவபீடம் சார்ந்த பிரதேசங்களில் காணிகள், வீடுகள் விற்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 374 1780

**தேவை**

அனுபவமுள்ள Salesman, அனுபவமுள்ள முச்சக்கர வண்டி ஓட்டுனர் தேவை.

T.P: 077 546 0028

**வீடு விற்பனைக்குண்டு**

நல்லூரில் சகல
நவீன வசதிகளுடன் கூடிய
**மேல்மாடி வீடு**
விற்பனைக்குண்டு.

தொடர்பு - N அருள்
077 088 8603

**போட்டோ பிரதி இயந்திரம் விற்பனைக்கு**

- றொசிபா France Used Black & White 256,306
- றிக்கோ கலர் மெசின் C2050,C2051,C3002
- ஜெராக்ஸ் (Colour & Black&White) 5890,5865

றியு ஸ்றொக் (நிமிடத்திற்கு 95 கொப்பிகள்)
1 வருட உத்தரவாதம் (2Free Service)

கந்தர்மடம் ஆலடிச்சந்தி,
யாழ்ப்பாணம். 077 418 9217
(Repearing செய்து கொடுக்கப்படும்)

**எங்கள் அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!**

எங்கள் நிறுவனத்தால்
நத்தார், புதுவருட சோடினைப் பொருள்கள், நத்தார்மரங்கள், நத்தார் உடைகள் மற்றும் அன்பளிப்பு பொருள்கள் என்பவற்றிற்கு 30% கழிவுகள் வழங்கப்படும். இவை 24 ஆம் திகதிவரை மட்டுமே என்பதனையும் அறியத்தருகின்றோம்.

A.C.D
NO-212,214 K.K.S Road, Jaffna

**சாரதி தேவை**

கொழும்பில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு 30 வயதுக்கு உட்பட்ட **இலகு வாகனம் செலுத்தக் கூடிய சாரதி உடன் தேவை.**
**சம்பளம் 40,000/-**
**தங்குமிட வசதி இலவசம்.**

077 623 1295

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி (லண்டன்)



பிறப்பு 14.02.1943 இறப்பு 17.12.2018

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய நாகரத்தினம் இரத்தினேஸ்வரி 17.12.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான இரத்தினம் காசுவதிதம்பதிகளின்அன்புமகளும்காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும்காலஞ்சென்றநாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சிறிரங்கேஸ்வரன் (சிறி - இந்தியா), தனேஸ்வரி (ஈஸ்வரி - லண்டன்), கேதீஸ்வரி (பேபி -லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்), காலஞ்சென்ற லோகேஸ்வரன் (ராசன்), சத்தியேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவலட்சுமி (கொழும்பு), தயாளினி (இந்தியா), ஸ்ரீகணநாதன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), எழிலரசி (லண்டன்) ஆகியோரின்அன்பு மாமியாரும் புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகலிங்கம், கலைவாணி, குகனேஸ்வரி (சீட்டு) ஆகியோரின் மைத்துனியும் நாகம்மாவின் அண்ணியும் நவரூபன் (லண்டன்), பானுஜா, பதுஜா (இந்தியா), ஸ்ரெப்பான், சந்துரு, சந்துவி, சங்கவி, சந்துஜன், சாகசன், ஹரீஸ், அருண், ஆரணி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆரன், ஆசன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி 9.45 am - 12.30 pm மணிவரை Goldrs Green Crematorium 62 Hoop Ln, London NW 11 7NL,UK எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக லண்டன் நேரப்படி 12.30 pm மணிக்கு நடைபெறும். அன்றையதினம் அவரின் சகோதரனின் மண்கும்பான் வில்வராசாவின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
சிறி

(cs 22005)

## கண்ணீர் அஞ்சலி

ரங்கநாதன் அவர்களின்
பாசமிகு தந்தை

### இராமலிங்கம் செல்லையா



அன்னரின் பிரிவால் துயரடையும்
குடும்பத்தினருக்குஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


திருமதி கந்தசாமி குடும்பம்
நிதன் (கனடா),
ரூபன் (கனடா)

கைதடி கிழக்கு,
கைதடி.

(cs 13390) (13,17)

## மரண அறிவித்தல்

### கந்தையா தவராசா (தவம்)



பிறப்பு 05.04.1956 இறப்பு 19.12.2018

மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மணியர்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராசா (தவம்) கடந்த (19.12.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - திருமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகபாக்கியத்தின் அன்புக் கணவரும் முரளிதரன் (கொலன்ட்), சிந்தூரி (கனடா), கேசவன்(பீப்பிள்லீசிங், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமல்ராஜ் (கனடா), நயோமி (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நெவ்றிசாவின் (கொலன்ட்) அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தவமணி, மாணிக்கம், பரஞ்சோதி, மகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, இராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் ஆறுமுகம், மார்க்கண்டு, பாலசுப்பிரமணியம், கருணாமூர்த்தி, சின்னத்துரை, மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது நெளுக்குளம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மணியர்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெளுக்குளம்,**
**வவுனியா.**
**077 873 0804**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 448/15/17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 30.09.1927 இறப்பு 19.12.2018

### திருமதி செல்லம்மா மாணிக்கவாசகர்

யாழ். இருபாலை கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நீராவியடி, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா மாணிக்கவாசகர் 19.12.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், சிவபாலன், இராசநாயகி, கைலைவாசன், பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கண்ணம்மா, சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மல்லிகாதேவி, கனகலிங்கம், யசோதரா, உருத்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான நீலதாட்சி, வல்லிபுரம், அப்புத்துரை, கதிரவேலு, வள்ளியம்மை, கண்மணி மற்றும் தயலக்ஷ்மி, மாணிக்கம், சின்னச்சாமி, சுந்தரம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், றஜனி சிவராஜ், ஜனனி ரஜீகரன், றயந்தன் ஜெஸ்மின், சுரேகா சிவநேசன், சுஜீகா சுதாகர், சுஜீவன் பிரியா, பிரதீபன் சுகன்யா, பிரவீனா கிரக், பிரதீபா, பரிசன், சுதர்சன் வெட்ரிசிசா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், ஆதவன், ஆதித்தியா, அமரன், ஆதிரா, சயூத், சஜந், சஜிந், சுருதி, ஆரிஎலா, ஆதித்தியா, ஜேடின், எலினா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2018) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் இரங்கல நிகழ்வு இருபாலையில் உள்ள செ.விக்னேஸ்வரன் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: செ.விக்னேஸ்வரன்
(இருபாலை)

(cs14355)(13,17)

**077 561 7081, 076 467 8361**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arunthathee

மாற்று மோதிரம்

DECEMBER
28 29 30
CHELVA PALACE, JAFFNA

# திருமண கண்காட்சியும்

அழகு சாதனப் பொருட்கள் மற்றும்
புடவைகளின் மலிவு விற்பனையும்

Arunthathee
JAFFNA DISTRICT BEAUTICIAN ASSOCIATION
இணைந்து வழங்கும்

பிரபல அழகுக்கலை நிபுணர்

Sajeeka

Sajeeka of Sajeeka beauty Parlor Switzerland
வழங்கும் Air brush Makeup workshop
30.12.2018 at 11.00AM
பதிவுகளுக்கு 076 182 8522 077 7712604

## BRIDAL FASHION SHOW & COMPETITION

December 29th மாலை 4.00 மணி முதல்

**Bridal show Competition**
18 வயதிற்கு மேற்பட்டவர்கள்
மணபெண் முக அலங்காரம்
(45 நிடத்தில்)
பதிவுக்கட்டணம் 2000/=

முதல் மூன்று வெற்றியார்களுக்கு
தங்க பென்டன்
பரிசாக வழங்கப்படும்

**Bridal Fashion Show**
பதிவுக்கட்டணம் 5000/=

அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பங்கு பற்றலாம்
தொலைகாட்சியில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்

Closing Date for Registration
23rd of December

Further information 076 182 8522

MAIN SPONSOR: JEEVAN STUDIO JAFFNA | CO SPONSOR: Chelva Palace WEDDING HALL | OFFICIAL PHOTOGRAPHY: SUREN PHOTOGRAPHY | SAREE PARTNER: Kamaleswary Tex | DECORATION PARTNER: Evergreen Celebrations | PRINT PARTNER: ANDRA | ORGANIZED BY: Arunthathee




Pearson | BTEC | UNIVERSITY OF WOLVERHAMPTON | UNIVERSITY AT ALBANY | UNIVERSITY OF CANBERRA | RICS | CIOB

HND — **BUSINESS MANAGEMENT MARKETING | HRM** — Leading to BA (Hons) from the UK Universities

HND — **QUANTITY SURVEYING** — Leading to BSc (Hons) from the UK Universities

HND — **COMPUTING** — Leading to BSc (Hons) from the UK Universities

HND — **BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY** — Leading to BSc (Hons) from the UK Universities

HND — **CIVIL ENGINEERING** — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LLB — **LAW** — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Recognized TVEC Approved

# BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318



Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Employer Brand Award 2017 | Asia's Training Excellence Award 2017

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

**Mount Campus** 54, Galle Road, Mt. Lavinia. T : 011 272 8082
**Kandy Campus** 344, Peradeniya Road, Kandy. T : 081 222 4731
**Kalmunai Campus** 392/1, Main Street, Kalmunai. T : 067 222 6899
**Corporate Office** 32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

0212219910 | 0112597217 | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDEAL FIRST CHOICE - யாழ்ப்பாணம்




இலங்கையில் மோட்டார் வாகன துறையில் முன்னணி வகிக்கும் ஐடியல் குழுமமானது அனைத்து வகையான மோட்டார் வாகனங்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவைகளை நாடு பூராகவும் வியாபிக்கும் முகமாக தனது பிராந்திய சேவை நிலையத்தை தற்போது உங்கள் நகரத்திலும்.

**நவீன தொழில்நுட்பத்தினுடாக வாடிக்கையாளர்களின் மனம் திருப்தியடையும் வண்ணம் வாகனங்களை சீரமைத்து கொடுக்கப்படும்**

**எங்கள் சேவைகள்**

- வாகன உடல் மற்றும் பெயிண்ட் திருத்தங்கள்
- வாகன டீட்டையிலிங் மற்றும் கழுவுதல்
- அசல் உதிரிப்பகங்கள்
- விபத்து சம்பந்தமான பழுதுபார்த்தல்
- ஏசி மற்றும் மின் திருத்தங்கள்
- வாகன ஸ்கேனிங்
- லுப்பிரிக்கன்ட் சேவைகள்
- இயந்திர திருத்தங்கள்
- வீல் அலைன்மெண்ட் சேவைகள்

இல.63, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் | தொடர்பு இலக்கம் - 021 221 6363 | 077 566 9602 | 076 724 5433

Mahindra TOYOTA Audi TATA RENAULT PERODUA KIA SSANGYONG SUZUKI

IDEAL FIRST CHOICE TOTAL AUTO CARE SOLUTIONS



Hero

# ஹீரோ வழங்கும் பண்டிகைக்கால தள்ளுபடிகள்

**ஹீரோ மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு ரூ. 15,000/- வரை விசேட தள்ளுபடி!**

5 WARRANTY*

BS IV STANDARD

Pleasure | MAESTRO EDGE | HF-Deluxe



| Pleasure | Maestro Edge | HF-Deluxe |
|---|---|---|
| 100cc | 110cc | 100cc |
| ~~ரூ. 245,000/-~~ | ~~ரூ. 260,000/-~~ | ~~ரூ. 229,500/-~~ |
| விசேட விலை ரூ. 230,000/- | விசேட விலை ரூ. 245,000/- | விசேட விலை ரூ. 219,500/- |
| ரூ 15,000/- தள்ளுபடி | ரூ 15,000/- தள்ளுபடி | ரூ 10,000/- தள்ளுபடி |

இந்த சிறப்பு விலைகள் குறுகிய காலத்திற்கானது.

*நிபந்தனைகள் உண்டு. விலைகள் முன்னறிவித்தலின்றி மாறலாம்.

☎: 011 5 777 000

Abans AUTO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழனியானந்தன் சனச
# 75 ஆவது ஆண்டுவிழ







## பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் சித்திர மேழி தமிழர் பாரம்பரியம், தமிழர் பண்பாடு தழைத்தோங்கிய தமிழ் ஊர், யாழ்ப்பாணம் கல்வியில் உயர்ந்த தேசமெனும் பெருமைக்குச் சித்திரமேழியும் பெயர் பெற்ற ஒரு நிலமாகும்.

சைவமும் தமிழும் தம்மிரு விழிகளாய்ப் பேணிப் பாதுகாத்து தமிழர் நாகரிகத்தை எட்டிய சிற்றூரானாலும் கல்வியிலும், பலதுறைகளிலும் மேம்பட்டு உழைப்பால், அறிவால், ஆற்றலால், ஆளுமையால் சான்றாண்மை பெற்ற பேர் ஊராகும். நிகழ்காலத்தில் கல்வித்துறையிலும் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றிய பாரம்பரியத்தில் சைவப்புலவர் செல்லத்துரை முதலானோரை நினைவு கூரலாம். தொழில் துறையில், மருத்துவத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களில் மருத்துவ கலாநிதி பேரானந்தராசா முதலானோரையும் குறிப்பிட வேண்டும்.

இன்னும் கூறுவோமானால் வேளாண்துறையில், உழவுத்துறையில் முன்னோடிகளாய், மாடு என்றாலே செல்வந்தான் அந்த மாட்டுச் செல்வமும் பல தொழில்களில் வியர்வை சிந்தி உழைத்துப் பொருள் வளமும் பெற்று வாழும் மக்கள் நிறைந்த ஊர் சித்திரமேழியாகும். அத்தோடு தமிழர் ஆளும் தமிழரசுக் கொள்கைப் பிடிப்பும், இலட்சியப் பற்றும் நிறைந்த மக்கள் வாழும் தமிழ் நிலம் சித்திரமேழி. இளமைக் காலமுதல் இவ்வூரை ஓரளவுக்கு அறிந்திருக்கின்றேன். தந்தை செல்வநாயகத்துடன் வருகை தந்து கொள்கைக் கூட்டங்களில் உரையாற்றியிருக்கின்றேன். சித்திரமேழி, சித்திரைமேழி இரண்டும் நன்றாகவேயிருக்கிறது.

இத்தனை பின்புலமும், மாண்பும் பெற்றுவரும் சித்திரமேழியில் பழனியானந்தன் சனசமூக நிலையம் எழுபத்தைந்து (75) ஆண்டுகள் வாழ்வுற்றுப் பவளவிழாக் கொண்டாட முயற்சிப்பது அதுவும் இளைஞர் சமூகம் முன் வந்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது. இளைஞர் தலைமைத்துவப் பண்புகள் பெருமை தருகிறது.

சித்திரை மேழியூர் இளைஞர் சமூகம் வாழ்வில் வலுவிழந்தோர், ஏழ்மையில் வாடுவோர் மத்தியில் தம்மை அர்ப்பணித்து வளமுடையோரிடம் உதவி பெற்று நலிந்தோர் நல்வாழ்வுக்காகத் தொண்டாற்றுவது அதிலும் மாணவர்களைக் கல்வியில் வைப்பதில் உதவி புரிவது மற்றும் முக்கிய நிகழ்வுக் காலங்களில் இரத்தானம் செய்வது பாராட்டுக்குரியதாகும்.

சித்திரமேழி சனசமூக நிலையத்திற்கான கட்டடம் அமைப்பதற்காக இளைஞர்களின் வேண்டுகோளைக் குறிப்பாக மருத்துவ கலாநிதி பேரானந்தராசாவின் எண்ணத்தை ஏற்று கிராம எழுச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 1.5 மில்லியன் ரூபாவை 2018 இல் சிபார்சு செய்திருந்தேன். ஆனால் அத்திட்ட வரண்முறைக்குள் இத்திட்டம் உட்படவில்லை என்பதால் அந்நிதி கிடைக்கவில்லை என்பது எனக்கு மிகுந்த கவலை தருகின்றது. வேறு ஒழுங்கைச் செய்யலாம் என்றால் நாட்டில் ஏற்பட்ட அரசியலமைப்பு நெருக்கடி இடம் தருவதாயில்லை. இருப்பினும் சித்திர மேழியில் முன்பள்ளி நிறுவ வேண்டும் எனும் இளைஞர் வேண்டுகோளை 2019 வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் கணிசமான நிதியை ஒதுக்கித் தரலாம் என எண்ணியிருக்கின்றேன். சித்திரமேழி சனசமூக நிலையத்தின் பவள விழா சிறப்புறவும், இளைஞர் சமூகத்தின் முயற்சிகள் வெற்றிபெறவும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ மாவை சோ.சேனாதிராசா**
**நாடாளுமன்ற உறுப்பினர்**



## கௌரவ அதிதியின் வாழ்த்துச்செய்தி

இன்றும் சமூகங்களிடையே எமது கலாசாரங்களும் விழுமியங்களும் அழிந்துவிடாதவகையில் ஒற்றுமையும் சமூக சேவை மனப்பாங்குகளும், பேணப்பட்டு வருகின்றது. என்றால்அவை நீண்டகாலமாக நல்நிலையில் செயற்பட்டுவரும் சனசமூக நிலயங்களாலேயே என்பது மிகையாகாது அந்த வகையில் இன்று சித்திரமோழி பழனியானந்தன் சனசமூக நிலையம் 75 ஆண்டுகளை பூர்த்தியாக்கி விழாக்காண்கின்றது என்பது உண்மையில் ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம்.

அடிப்படைக் கல்வி என்பது ஒரு மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாகும். அவ்வாறான அடிப்படைக் கல்வியினை சனசமூக நிலையத்தின் முன்பள்ளி ஊடாக முன்னெடுப்பது மிகச்சிறந்த செயற்பாடாகும். அத்துடன் முன்பள்ளி மாணவர்களை மகிழ்விக்கும் முகமாக அவர்களை ஒன்றிணைக்கும் வகையில் வருடம்தோறும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படுவதும் கலைவிழாக்கள் மற்றும் பரிசளிப்பு விழாக்கள் நடத்தப்படுவதும் பாராட்டுக்குரியதாகும். முன்பள்ளிச் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது இன்றய காலகட்டத்தில் மாணவ பருவத்தில் முதல் படிக்கல்லாக மட்டுமன்றி பெரிய ஓர் தடைதாண்டல் பரீட்சையாக உருவெடுத்திருக்கின்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி மாணவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பினை வழங்குவது எதிர்காலத்தில் ஓர் அறிவு மிகு சமுதாயத்தினை உருவாக்க வழிவகுக்கும் செயற்பாடாக காணப்படுகின்றது.

அத்துடன் இன்றைய தலைமுறையினர் அறிந்திராத தமிழர் பாரம்பரியங்களை கட்டிக்காக்கும் வகையில் வருடாந்தம் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி. உண்மையில் வரவேற்கத்தக்க விடயங்களாகும். தானங்களில் சிறந்த தானமான இரத்ததானத்தினை வருடாந்தம் உயிர்காக்கும் செயற்றிட்டமாக தாங்கள் முன்னெடுப்பது வரவேற்கத்தக்கது. இவ்வாறான செயற்றிட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்போதே மக்களிடையே இரத்ததானம் பற்றிய ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டு கூடுதலான இளைஞர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஆர்வமாக செயற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இன்று பவளவிழா காணும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் பெரிய வளர்ச்சிகளுடனும் சிறந்த சமூக சேவைகளுடனும் நூற்றாண்டு காண வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கௌரவ. அ.ஜெபநேசன் (தவிசாளர்),**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.**

## பழனியானந்த…

"மேழி பிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும் கை…
எமது ஊரின் பெயராக முன்னோர்களால் முடிசூட்ட…
"மேழி" என்றால் வயல் உழும் கலப்பையின்…
அமையப்பெற்றது போற்றுதற்குரியது… எம் ஊரில்…
ஞான வைரப்பெருமானின் அருட்… சத்தினால்…
வருவதனால் எம் ஊருக்கு சித்திர மேழி என்ற நாம…
அந்தவகையில் எந்த ஊரிலும் இல்லாத சிறப்பு எ…
கிடைத்தற்குரிய மாவுடன் நெல்லியும் அதன் சே…
வயல்வெளியும், பண், பலநோக்கு கூட்டுறவுச்சா…
தோற்றத்துடன் பழனியானந்தன் சனசமூக நிலை…
இன்று எமது நிலையமானது தனது 75 ஆ…
இந்நிலையமானது 1943 ஆம் ஆண்டு திரு.வேலு…
ஆண்டுகளைக் கடந்து வெற்றியுடன் வீறு நடை போ…
தனது கடந்த காலங்களில் நடைபெற்ற விழாக்க…
செய்து இன்று தலை நிமிர்த்தி பவளவிழா நாயகனா…
இந் நிலையம் முன்னோரின் வழிநடத்தலில் இன்…
ஆற்றுகின்றன.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற வாக்…
கிராமங்கள், பாடசாலைகள் என பணியாற்றி வருகி…
அந்த வகையில் பழனியானந்தன் சனசமூக நிலை…
சவாரி நடத்தினார். இதனை விட "தானத்தில் சி…
முகாமை வருடாவருடம் நடத்துகின்றார்கள்…
வருகின்றார்கள் அவ்வாறே பணிகள் மேன்மேலும்…



## செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

சீரும் திருவும் நிறைந்த சித்திரமேழிக் கிராமத்தில் மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட சன சமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் ஆத்ம பலம் தரும் ஆன்மீக ஆலயங்களும், அறிவுப்பலம் தரும் அறிவாலயங்களும் மிகவும் முக்கியத்துவம் பெறுவது அனைவரும் அறிந்ததே. பண்பும் பாரம்பரியமும் நிறைந்த பழம் பதியாகிய சித்திரமேழியில் சனசமூக நிலையத்தை எழுபத்தைந்து ஆண்டு களுக்கு முன் தோற்றியவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். காலம் காலமாக சனசமூக நிலையத்தை நிர்வகித்த நிர்வாக சபையினரை நாம் என்றும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். அறிவு மிகு சேவையில் இன்றும் அக்கறையுடன் உழைக்கும் இன்றைய தலைமுறையின் ஆர்வம் மகிழ்வைத் தருகின்றது. இருபத்தோராம் நூற்றாண்டைச் சந்தித்துள்ள எம் சமூகம், பல சமூக பொருளாதார சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சனசமூக நிலையங் கள் சூழலுக்கு ஏற்ப புதிய பரிமாணம் பெற வேண்டியுள்ளமை காலத்தின் கட்டாயமாகும். அவ்வகையில் சமூகத்தை ஆற்றுப்படுத்தும் இந்நிலையம் புதிய அத்தியாயத்தை நோக்கிப் பயணிக்க வாழ்த்தி எனது நல்லாசிகளைச் சமர்ப்பிக்கின்றேன். சூரிய சந்திரர் உள்ளவரை இச் சனசமூக நிலையம் நிலைபெறத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**



## தலைவரின் வாழ்த்துச் செய்தி

சித்திரமேழி பழனியானந்தன் சன சமூகநிலையமானது ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ் ஆண்டில் தலைவராக செயற்படு வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இச் சனசமூகத்தில் இருந்து பல்வேறு பட்ட செயற் பாடுகளை செய்து வருகின்றோம். அந்தவகையில் வருடத்தில் ஒருமுறை உயிர்காக்கும் உன்னத பணியான இரத்ததானமுகாமும், மாட்டு வண்டிச் சவாரியும் நடைபெற்று வருகின்றது. அத்துடன் வறிய பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றது. அத்துடன் ஏனைய பல்வேறு உதவித்திட்டங்களும் நடைபெற்று வருகின்றது.

இன்றைய யுகம் ஆதீத வளர்ச்சி அடைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இவ்வாறு மிக வேகமாக முன்னேறிச் செல்லும் உலகிலே நாம் பல சவால் களுக்கு முகம் கொடுத்து முன்னேற வேண்டியிருக் கின்றது.பல்வேறு இடர்களுக்கு மத்தியில் பழனியானந் தன் சனசமூக நிலையம் வளர்ச்சி அடைந்து 75 வருடங்களைக் கடந்து நிமிர்ந்து நிற்கின்றது.

இந்த பழனியானந்தன் சனசமூக நிலையம் இன்னும் பல்லாண்டு புகழ் பெற்றுத் திகழ ஞான வைரவப் பெருமான் அருள் புரிவாராக.

**திரு.வி.பிரசீலன்**
**தலைவர்**
**பழனியானந்தன் சனசமூக நிலையம்.**

## வாழ்த்துரை

"ஏர் பூத்த சித்திரமாமேழி வாழும்
எந்தை வைரவ ரூஞ்சலிசை யான் பாட"

என்பது சித்திரமேழி ஞானவைரவர் கோயில் ஊஞ்சற்பாவின் காப்பு. இந்த ஊஞ்சற்பாடல்கள் யாரால் எப்போது பாடப் பெற்றவை என்பது அறியமுடியவில்லை. ஆனால் ஏனைய ஊஞ்சற் பாடல்களை விடச் சிறப்பானது. தனித்துவம் மிக்கது. பாடல்களின் இறுதியிலே ஊரும் அந்த ஆலய மூர்த்தியின் பெயரும் இடம்பெறுவது மரபு. இப்பாடல்களில் " சித்திரமாமேழி வாழும் ஆவதோத்தாரணரே " ஆடீருஞ்சல் என இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இதுபோல் ஊரின் சிறப்பு ஏதாவது ஒரு ஊரின் பெயர் முடிவோடு வேறு ஊரின் பெயர் முடிவும் அமைந்திருக்கும். மானிப்பாய் - சண்டிலிப்பாய், கீரிமலை – சுதுமலை, மாதகல் - குருணாகல் சித்திரமேழி "மேழி" என்ற முடிவிலே ஊர் எதுவும் இல்லை.

ஏர் பூத்த சித்திரமாமேழி அழகுமிகுந்த சித்திரமேழி என்று பொருள். ஏர் என்பது அழகு, கலப்பை எனப் பொருள்படும். மேழி என்றாலும் கலப்பை. " ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது ஔவையார் வாக்கு. நீர் வளம் உள்ள ஊர் அழகு மிகுந்திருக்கும். பசுஞ்சோலையும் பயன்தரு மரங்களும் நிறைந்திருக்கும்.

செந்நெல்விளை வயலும் சிறு தானியப்பயிரும் பசுக்களும் உள்ள இடமாக விளங்குவது. ஊருக்கு அழகுதானே.

ஊரின் நடு நாயகமாய்த் திகழும் ஞானவைரவர் கோயிலின் அருகே நெல்லி மர நிழலிலே பழனியானந்தன் சனசமூக நிலையம். கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாகச் சமய சமூக சேவை புரிந்து வருகிறது. புகழ்பூத்த அறிஞர்களை உருவாக்கியது இந்நிலையம். சிறுவர்கள், இளைஞர்களது ஆற்றலை வெளிக்கொணர, அறிவை வளர்க்கக் களம் அமைத்த இந்த பழனியானந்தன் சனசமூக நிலையம் இன்றும் பல்லாண்டு புகழ் பெற்றுத் திகழ்ந்து நூற்றாண்டும் கண்டு வீறு நடைபோட ஞானவைரவப் பெருமான் அருள்புரிய வேண்டி வாழ்த்துக் கூறுகின்றேன்.

**சைவப்புலவர் சித்தாந்தச் செம்மணி**
**செல்லையா நவநீதகுமார் (MA)**




**Sree Ram Jewellers**
158, 193, Kasthuriyar Road, Jaffna.
021 222 8334
Tel: 077 165 1729

**Narmatha**
Gold Center & Money Exchange Pvt.Ltd
187, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 1933, Fax : 021 222 4779
Email: narmathagc187@gmail.com
187, Power House Road, Jaffna
**Narmatha**
Gold Center
151, Sea Street, Colombo -11
Tel: 021 238 9282, Fax : 011 239 9541
Email :narmathagc151@gmail.com

**புதிய யாழ். வைத்தியசாலை**
315, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.
தொ.பே: 021 222 3533, 021 222 1011

**சன்றைஸ் மெடிக் கிளினிக்**
மருத்துவ ஆய்வுகூடச் சேவை
386 1/1, (Old No 388)
வைத்தியசாலை வீதி, யாழப்பாணம்,
(யாழ். பஸ்நிலை வைரவர் கோயில் முன்பாக)
(யாழ் பேபி நீட்ஸ் அண்ட் பார்மசி மேல் மாடி)
021 222 6069 / 021 222 8460
**யாழ் பேபி நீட்ஸ் அன் பார்மசி**
386 1/1,(Old No 388)
வைத்தியசாலை வீதி, யாழப்பாணம்,
(பஸ்நிலை வைரவர் கோயில் முன்பாக)
(ரட்ணம் பார்மசி அருகில்)
Tel: 021 222 8013


**Vani Tex**
T.P: 021 222 5578 / 021 222 9286
No.81, Grand Bazzar Roa…
Jaffna.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
23.12.2018

கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி



# ஒலித்து ஓய்ந்த தேர்தலுக்கான கூக்குரல்!

இலங்கைத் தலைமை அமைச்சருக்கான உத்தியோகபூர்வ அலுவலகத்தைப் பயன்படுத்தாத, நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் கொண்டிராத, 50 நாள் பதவியில் இருந்த தலைமை அமைச்சர் தனது கதிரையைக் காலிபண்ணிவிட்டுச் சென்றுவிட்டார். அரசமைப்பிலிருந்த துளைகளைப் பயன்படுத்தி இரகசியமாக உள்வந்த அவர், போகும்போது ஆடம்பரமாகவும் கொண்டாட்டமாகவுமே வெளியேறியிருக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டதையடுத்து கொழும்பு அரசியலரங்கில் இதுவரை நாளும் அடித்து வந்த சுனாமி, சூறாவளி மற்றும் அடைமழை என்பன ஓய்வடைந்திருக்கின்றன. இப்போது எஞ்சியிருப்பதோ வெறும் தூவானம் மட்டும் தான். அந்த தூவானம் அடுத்த தேர்தலை நாடு எதிர்கொள்ளும் வரை தொடரும் போன்றே தோன்றுகிறது.

அடுத்தடுத்த வெள்ளி இரவுகளில் நாட்டில் நடந்த அதிரடிகள், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களது திருவிளையாடல்கள், அதைத்தொடர்ந்த நீதித்துறையின் தாய்ச்சி மறிப்புகள் என்பவற்றால் சேதாரம் என்னவோ புதிய மைத்திரி -மகிந்த கூட்டணிக்குத்தான். ஒருவகையில் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிப் படுகாயம் அடைந்திருக்கிறார் மைத்திரி. அவர் குழப்பிய குட்டையில் சுறா பிடிக்க முனைந்த மகிந்த, கிடைத்த நெத்தலி மீன்களுடன் பின்வாங்கி யிருக்கிறார். இந்தப் பின்னணியில் மைத்திரிமகிந்த தரப்பினரால் ஓங்கி ஒலிக்கப்பட்ட பொதுத் தேர்தலுக்கான அறைகூவல் இரகசியமாக அடக்கம் கண்டிருக்கிறது.

(அடுத்த பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காத்திருக்கும் மூன்று தேர்தல்கள்**

சும்மா கிடந்த சங்கை மைத்திரி ஊதியதை அடுத்து, தம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய தேவை இலங்கையின் நீதித்துறைக்கும் தேர்தல் திணைக்களத்துக்கும் ஏற்பட்டிருந்தது. அரசமைப்புக்குப் புறம்பான அரச தலைவரின் நடவடிக்கைகளைக் கேள்விக்குட்படுத்திய மனுக்களில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார். எனினும் குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் தேசப்பிரிய உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிவதற்கு முயற்சித்திருக்கவில்லை. மகிந்த தேசப்பிரியவின் கருத்துப்படி, 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முன்னான காலப்பகுதியில் இலங்கை மூன்று தேர்தல்களை எதிர்கொள்ளவிருக்கிறது. ஏற்கெனவே நடைபெற்றிருக்கவேண்டிய மாகாணசபைக்கான தேர்தல் தள்ளிப்போய்க் கொண்டே இருக்கிறது. அது நடைபெற வேண்டும். அடுத்த பொதுத்தேர்தல் 2020ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நடந்தாக வேண்டும். புதிய அரச தலைவரைத் தெரிவதற்கான தேர்தல், அடுத்த வருடம் டிசெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டும்.

**மகிந்த தரப்பினரின் அவசர கோரிக்கை**

இலங்கையின் தற்போதைய 15ஆவது நாடாளுமன்றம் தனது முதலாவது அமர்வினை 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி நடத்தியிருந்தது. அதனது சட்ட பூர்வ பதவிக்காலமானமானது 5 ஆண்டுகள் ஆகும். கடந்த பெப்ரவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொது ஜன பெரமுன கட்சி மாபெரும் வெற்றியைச் சம்பாதித்ததை அடுத்து, உடனடியாகப் பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை மகிந்த தரப்பினரால் விடுக்கப்பட்டி ருந்தது. நாட்டில் தமக்கு ஆதரவான அலை அடிப்பது துலாம்பரமாக வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அதைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவே அந்த அழுத்தம் கலந்த அழைப்பு விடப்பட்டிருந்தது. தமது ஆட்சிக்காலத்தின் போது இவ்வாறு தேர்தல்களை முன்கூட்டியே நடத்தி தமது இருப்பைப் பலப்படுத்திக் கொண்டவர் மகிந்த.

ஆனால், அந்தப் பொறிமுறை 2015ஆம் ஆண்டு ஜனவரியில் அவரைக் கவிழ்த்திருந்தது. அண்மைய குழப்பத்தின்போது பொதுத்தேர்தல் ஒன்றுக்கு நாட்டை இட்டுச்செல்லும் வகையில், அரச தலைவர் செயற்பட்டிருந்தார். அது பின்னர் உயர் நீதிமன்றினால் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்தது.

மகிந்த - மைத்திரி கூட்டணியினர் பொதுத்தேர்தலுக்கான அறிவிப்புக்களில் ஈடுபட்டிருக்க அதற்கு மறுத்தானாக அரச தலைவர் தேர்தலுக்கு அழைப்பு விட ஐக்கிய தேசியக்கட்சித் தரப்பு ஆர்வம் காட்டியிருந்தது.

**நீதிமன்றத் தீர்ப்பில் குற்றம் கண்டுபிடிப்பு!**

அதிகாரக் கைப்பற்றலுக்கான பின்கதவு நுழைவு மற்றும் அதற்குச் சார்பான நிறைவேற்றதிகாரப் பயன்பாடுகள் என்பவற்றுக்குத் தேர்தலைக் கோரும் நடவடிக்கையின் மூலம் ஜனநாயகச் சாயம் பூசும் எத்தனிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. முதிர்வுக்கு முந்திப் பொதுத்தேர்தலுக்காக விடுக்கப்பட்ட அழைப்பை, நீதிமன்றம் நிராகரித்ததனை அடுத்து, தமக்குச் சாதகமான சூழல் பாதகமாக மாறுவதைக் கண்ட மகிந்த பதவியைத் துறந்தார். எனினும் அதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட அறிக்கையில் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்திருந்தார். அதாவது, மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் நடந்துள்ளதாக அவர் குற்றம் சாட்டியிருந்தார். அத்தோடு அரச தலைவரினால் விடுக்கப்பட்ட தேர்தலுக்கான அழைப்புக்கு எதிராக நீதித்துறையை நாடியிருந்த தரப்புக்களையும் அவர் சாடியிருந்தார். அந்தத் தரப்புக்கள் தேர்தலைக் கண்டு பயங்கொண்டு ஓடுவதாகத் தெரிவித்த அவர், வரவிருக்கும் அரச தலைவர் மற்றும் பொதுத்தேர்தல் என்பனவும் உரியகாலத்தில் நடைபெறாது அல்லது பிற்போடப்படும் எனச் சாரப்பட முழக்கியிருந்தார். தமக்கு ஆதரவாக அமைந்த புறச்சூழல் கை நழுவியிருந்த நிலையில், அதற்கு ஒத்துழைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட ஏனைய தரப்புக்களையும் மகிந்த தமது உரையில் கடுமையாக விளாசியிருந்தார்.



**அரச தலைவருக்கெதிரான குற்றப் பிரேரணையும் ஓய்ந்துவிட்டதோ?**

அரச தலைவருக்கான தேர்தலுக்கு அழைப்பினை விடுக்குமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் சவால் விடுத்திருந்த ஐக்கிய தேசியக்கட்சித் தரப்பு தற்போது அதனையும் கைவிட்டு அரச தலைவருக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரக்கூடியதான குற்றப் பிரேரணை தொடர்பிலும் மௌனம் காக்கிறது. அரச தலைவர் அரசமைப்புச் சட்டத்தை மீறினார் என்பது ஏழு நீதிபதிகளைக் கொண்ட குழாமால் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், நாடாளுமன்றில் குற்றப் பிரேரணையாக அதை முன்கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டவில்லை. அவ்வாறானதொரு குற்றப் பிரேரணையை வெற்றிகொள்ள நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஐக்கிய தேசியக் கட்சி வைத்திருப்பது அசியம். ஆனால், நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கை கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மனோ தரப்புக்கள், இந்த விடயத்தில் ஏலவே கை விரித்து விட்டன.

**குழப்பத்துக்கு முற்றுப்புள்ளியிடப்படவில்லை**

அரச தலைவர் மைத்திரிபால தனது பிடிவாதத்திலிருந்து விலகி ரணிலைத் தலைமை அமைச்சராக்கியதிலிருந்தும் தொடர்ந்து அமைச்சரவையை ஏற்படுத்தியதிலிருந்தும் மேலே சொன்ன தூவானத்துடன் கூடிய நிலைவரத்தினை நோக்கிக் கொழும்பு அரசியல் நிலைவரம் நகர்கிறது. எனினும், தற்போதைய சூழல், குழப்பத்துக்கான காற்புள்ளியே தவிர முற்றுப்புள்ளி அல்ல. நாடாளுமன்றம் தனது நான்கரை வயதினைப் பூர்த்தி செய்யும் மணித்துளியைக் கணக்கிட்டே ஆளும் மற்றும் எதிர்த்தரப்புக்கள் இயங்கிவருகின்றன. நீதிமன்றத் தீர்ப்பினையடுத்துத் தேர்தலுக்கான கூக்குரல் தற்காலிக ஓய்வுக்கு வந்திருந்தாலும், அடுத்த தேர்தலை இலக்கு வைத்து இயங்கப்போகும் இரு தரப்பினரினதும் குறிப்பாக ஆளும் தரப்பின்ரூபவ் நடவடிக்கைகள் அதிகம் மக்கள் நலனை இலக்கு வைத்ததாக அமையுமென எதிர்பார்க்கலாம். அது அவ்வாறே அமையுமெனில், நன்மையில் முடியும் கலகங்களை நாரதர் மாத்திரமல்ல அரச தலைவர் மைத்திரிபாலவும் நிகழ்த்துவார் என இலங்கையர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.



> **அரச தலைவருக்கான தேர்தலுக்கு அழைப்பினை விடுக்குமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் சவால் விடுத்திருந்த ஐக்கிய தேசியக்கட்சித் தரப்பு தற்போது அதனையும் கைவிட்டு அரச தலைவருக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரக்கூடியதான குற்றப் பிரேரணை தொடர்பிலும் மௌனம் காக்கிறது. அரச தலைவர் அரசமைப்புச் சட்டத்தை மீறினார் என்பது ஏழு நீதிபதிகளைக் கொண்ட குழாமால் வெளிப்படுத்தப்பட்ட நிலையில் நாடாளுமன்றில் குற்றப் பிரேரணையாக அதை முன்கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்



# நாட்டைக் குலுக்கிய 48 நாள்கள்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி, மகிந்த ராஜபக்சவை அந்தப் பதவிக்கு நியமித்தார். இதன் மூலம் நாட்டில் பெரும் அரசியல் குழப்பநிலை உருவாகியது. அதையடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அமைச்சரவை உருவாக்கப்பட்டது. இவை நாட்டின் அரசியல் நிலைமையை மேலும் மோசமாக்கின. நீதிமன்ற நடவடிக்கைகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், ஊடக சந்திப்புக்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள் எனப் பல்வேறு முனைகளிலும் இந்தக் குழப்பத்துக்கு எதிர்ப்புகள் இடம்பெற்றன. நாடாளுமன்றத்தில் பொலிஸாரின் துணையுடனேயே சபாநயகர் உட்பிரவேசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. பொலிஸாரும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் காயமடையுமளவுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகள் அராஜகமான முறையில் அமைந்திருந்தன. அதேவேளை மறுபுறத்தில் அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் அக்குவேறு ஆணிவேறாகச் சட்டத்தரணிகளாலும் சட்டமா அதிபராலும் நீதிமன்றில் வியாக்கியனத்துக்கு உட்படுத்தப்பட்டது.

**நீதிமன்றத் தீர்ப்புடன் முடிவுக்கு வந்தது குழப்பம்**

ஒக்ரோபரின் முடிவிலிருந்து நீடித்த குழப்பநிலை, நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரச தலைவர் விடுத்த வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகது என்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் முடிவுக்கு வந்திருக்கிறது. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவியை விடுத்து அப்பால் நகர்ந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேராக் கோரினாலும் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சராக்கப் போவதில்லை எனச் சூளுரைத்த அரச தலைவர் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சராக அங்கீகரித்தார். அதன் காரணமாக 48 நாள்களாக நாட்டைக் குலுக்கிய மோதல்களும், குழப்பங்களும் தற்காலிகமாக ஓய்ந்தன.

**புதிய குழப்பம் ஒன்று உருவானது**

நீதிமன்றத் தீர்ப்புடன் ஒக்ரோபரில் ஏற்பட்ட குழப்பம் முடிவடைந்த நிலையில் நாடாளுமன்றம் கூடியபோது புதிய குழப்பம் ஒன்று உருவானது. அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரச கட்சிக்கு அடுத்த பெரும்பான்மையைக் கொண்டிருந்த நிலையில் சபாநாயகர் கருஜெயசூரிய மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்தார். 2017ஆம் ஆண்டில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த நிலையில், 2018ஆம் ஆண்டு தலைமை அமைச்சராவதற்குத் தீர்மானித்த மகிந்த, அந்த முயற்சியிலும் தோல்வியையே தழுவினார். தற்போது அவர் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மகிந்த ராஜபக்ச சிறீலங்கா சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேறி ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூட அரசமைப்பின்படி அவர் இழந்துவிட்டதாக மேற்குறித்த இருவரும் வாதிட்டனர். இவர்களுடைய வாதத்துக்குப் பிறது இது தொடர்பாகத் தான் ஆராய்ந்து முடிவு சொல்வதாகச் சபாநாயகர் தெரிவித்தார்.

**சம்பந்தனின் கருத்தும் மக்களின் கருத்தும்**

மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தபின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தன்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்காமல் இன்னொருவரை நியமித்தமை அரசமைப்புக்கு விரோதமானது எனவும் தற்சமயம் நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டி னார். அதாவது 48 நாள்கள் நிலவிய தலைமை அமைச்சர் பதவிக்கான மோதல் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான மோதலாக மாறியுள்ளது. ஆனால், தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருந்து எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வகித்து வந்தாலென்ன, அரசமைத்துள்ள கட்சியின் பக்கம் இருந்தால் என்ன எல்லாமே ஒன்றுதான் என்ற கருத்தே நிலவுகிறது. கடந்த மூன்றரை வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உத்தி யோகபூர்வ எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய போதும் அரசுக்குப் பரிபூரண ஆதரவையே வழங்கி வந்தார். தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக அரசுக்குத் தமது நாடாளுமன்றப் பலத்தைப் பாவித்து அழுந்தம் கொடுப்பதைத் தவிர்த்தே வந்துள்ளார். அப்படித் தாங்கள் அழுத்தம் கொடுத்தால் மகிந்த தரப்பினர் அதைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவார்கள் எனக் காரணம் கூறப்பட்டது. அதனால் புதிய அரசமைப்பு உருவாகச் சாத்தியமற்றுப் போய்விடுமெனவும் கூறப்பட்டது.

**புதிய அரசமைப்புக்கு மகிந்த தரப்பின் ஆதரவு இன்றியமையாதது**

அரசில்பங்குவகித்தஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவின் தலைமையை ஏற்றுக்கொண்டு விட்டனர். இப்போது மகிந்தவுக்கு ஆதரவாக நாடாமன்றில் 100 உறுப்பினர்கள் உண்டு. அதே வேளையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு அண்மையில் இணைந்த மூவருடன் 109 உறுப்பினர்கள் உண்டு. புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் 150 உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து வாக்களித்தாலும் கிடைக்கப்போவது 124 வாக்குகள் மட்டுமே. இந்த நிலையில் மகிந்த தரப்பினரின் ஆதரவின்றிப் புதிய அரசமைப்பு நிறைவேறுவது சாத்தியமில்லை.

**அரசமைப்பு விவகாரத்தில் பெரும்பான்மையினரின் நிலைப்பாடு**

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவியிலிருந்து அகன்ற பின்பு உரையாற்றியபோது குறிப்பிட்ட ஒரு விடயத்தைக் கவனத்தில் எடுக்காமல் விடமுடியாது. அதாவது புதிய அரசமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறை இல்லாமலாக்கப்படும் எனவும் நாடு ஒன்பது சுயாட்சி அதிகாரமுள்ள பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் துண்டாடப்படடு விடுமெனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார். அடுத்த நாள்முதலே 5 முன்னாள் மாகாண முதலமைச்சர்கள் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டனர். அதாவது மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர்கள் எதிர்த்தனர். அதேவேளை அரச தலைவரின் அதிகாரத்தை நீக்கவேண்டு மென்ற பிரேரணையை முன்வைத்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வடக்கு கிழக்கு இணைக்கப்படுவதைத் தாங்கள் எப்போதுமே அனுமதிக்கப் போவாதில்லையெனவும் ஒற்றையாட்சிக்குள்ளேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமெனவும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். அப்படியானால் எவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கம் சாத்தியமாகும் என்பது கேள்வியாகிறது.

**குழப்பத்தால் கூட்டமைப்புக்கே கூடியளவு பாதிப்பு**

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதைக் காரணம் காட்டியே கடந்த மூன்றரை வருடங்களாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கியது. தற்சமயம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முற்றாகவே அரசை விட்டு வெளியேறிய பின்பு அரசமைப்பை நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது சாத்தியமற்றதாகிவிட்டது. அதாவது நாட்டைக் குலுக்கிய 48 நாள்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மட்டுமல்ல புதிய அரசமைப்பு பற்றிய எதிர்பார்ப்பையும் புரட்டிப்போட்டு விட்டது. அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த நகர்வு என்ன? மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு முண்டு கொடுப்பதா? அல்லது அடுத்த நகர்வை நோக்கிச் செல்வதா? என்பதுதான் மக்கள் மத்தியில் எழும் கேள்வியாகும். நாட்டைக் குலுக்கிய 48 நாள்களால் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாதது உண்மையென்றபோதிலும், குறித்த குழப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பைப் புரட்டிப் போட்டு அதை அரசியல் வெற்றிடத்துக்குள் தள்ளிவிட்டதென்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.




சம்பந்தன் தன்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்காமல் இன்னொருவரை நியமித்தமை அரசமைப்புக்கு விரோதமானது எனவும் தற்சமயம் நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டி னார். அதாவது 48 நாள்கள் நிலவிய தலைமை அமைச்சர் பதவிக்கான மோதல் இப்போது எதிர்க்காட்சித் தலைவர் பதவிக்கான மோதலாக மாறியுள்ளது. ஆனால், தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருந்து எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வகித்து வந்தாலென்ன, அரசமாத்துள்ள கட்சியின் பக்கம் இருந்தால் என்ன எல்லாமே ஒன்றுதான் என்ற கருத்தே நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உண்மையில் தோற்றதா?

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புக்கு எதிரான போர் வெற்றிபெற்றுள்ளது என்று அறிவித்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தமது நோக்கம் நிறைவேறி விட்டதால் சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் விரைவில் விலக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். ட்ரம்பின் கருத்துக்கு பல்வேறு தரப்பிடம் இருந்தும் கண்டனங்கள் குவிந்துள்ளன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து கடந்த வருடம் முழுவதுமாக விடுபட்டது ஈராக். எனினும் சிரியாவில் தொடர்ந்தும் அந்த அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வந்தது. சிரியாவின் ரக்கா, இட்லிப், அலெப்போ, டமஸ்கஸ், பல்மைரா நகர்களில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். விரட்டியடிக்கப்பட்டாலும் புறநகர்ப் பகுதிகளிலும் சிரியப் பாலைநிலங்களிலும் அந்த அமைப்பின்பிடிநிலைபெற்றது. கடந்த வாரம் வரையில் அந்த அமைப்புக்கு எதிரான போர் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டது என்று குறிப்பிட்ட ட்ரம்ப் சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறும் திட்டத்தையும் வெளியிட்டார்.

ட்ரம்பின் கருத்துக்கு பிரிட்டனும், பிரான்ஸும் தமது எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சிரியாவில் தோற்கடிக்கப்படவில்லை. அமெரிக்காவின் முடிவால் அந்த அமைப்பு புத்துயிர்ப்புப் பெற வாய்ப்புண்டு என்று குறிப்பிட்டுள்ளது பிரிட்டன். ட்ரம்பின் அறிவிப்பு முட்டாள்த்தனமானது என்று குறிப்பிட்டுள்ளனர் ட்ரம்ப் சார்ந்த குடியரசுக் கட்சியினர். அமெரிக்காவின் பரம வைரி நாடான ரஷ்யா ட்ரம்பின் கருத்தை வரவேற்றுள்ளது.

**'எத்தகைய அறிவிப்போ யாமறியோம்...'**

## ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்

# புடினிடம் அலைபேசி இல்லை! இப்படிச் சொல்கிறது கிரம்ளின்



ரஷ்ய அதிபர் புடினிடம் அலைபேசி இல்லை என்று தெரிவித்துள்ளது ரஷ்ய அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான கிரம்ளின்.

உலகமெங்கும் அலைபேசி உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. அடுத்த ஆண்டு உலகளவில் அலைபேசி உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை 468 கோடியை எட்டிவிடும். 2020ஆம் ஆண்டு 478 கோடி ஆகிவிடும் என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன. ஆனால் உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷ்யாவின் அதிபர் புடின் அலைபேசியை உபயோகிக்கவில்லை. அவரிடம் அலைபேசி கிடையாது என்ற அதிர்ச்சி கொடுத்துள்ளது கிரம்ளின். அதே நேரம் கிரம்ளினின் கூற்றுத் தவறென்று குறிப்பிட்டுள்ள பன்னாட்டு ஊடகங்கள், அவர் அலைபேசி பயன்படுத்துவது போன்ற ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளன.

**'ரஷ்ய அதிபர் என்ற வகையில் இது இமாலய ஆச்சரியமே...'**

# விலகினார் மேட்டிஸ்



அமெரிக்காவின் இராணுவத்துறை அமைச்சர் ஜிம் மேட்டிஸ் நேற்றுமுன்தினம் பதவி வலிகினார்.

தான் என்ன காரணத்துக்காக பதவிவிலகுகிறேன் என்று மேட்டிஸ் அறிவிக்கவில்லை. "ட்ரம்ப் தகுதியான ஒருவரை இந்தப் பதவிக்கு நியமிப்பதற்கு இதுவே தருணம்" என்று மேட்டிஸ் குறிப்பிட்டுள்ளார். சிரியாவில் இருந்து அமெரிக்க இராணுவத்தைத் திரும்பப் பெறும் முடிவை ட்ரம்ப் அறிவித்து சில நிமிடங்களிலேயே மேட்டிஸ் பதவி விலகினார். இதனால் சிரியா விவகாரத்திலேயே இவர்கள் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.


**'வெள்ளை மாளிகையில் மற்றொரு பிளவு...'**

# தாய்மைக்கு சாவில்லை!

இறந்த பெண்ணின் கருப்பையைக் கொடையாகப் பெற்ற பிரேசில் பெண்ணுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. சாவடைந்தவரின் கருப்பையைப் பொருத்தி குழந்தை பிறந்திருப்பது இதுதான் முதல் முறை.

2016ஆம் ஆண்டில் தனது 45ஆவது வயதில் உயிரிழந்த பெண்ணிடமிருந்து கருப்பையை கொடையாகப் பெற்று 36 வயதுப் பெண்ணுக்குப் பொருத்தப்பட்டது. இப்போது அவருக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. இதற்கு முன் அமெரிக்கா, செக்குடியரசு, துருக்கி ஆகிய நாடுகளில் இறந்தவர்களிடமிருந்து கருப்பையை கொடையாகப் பெற்றவர்கள் கருவுறுவதற்கு முயற்சிக்கப்பட்டது. பத்து முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், மருத்துவச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் பிரேசில் மருத்துவர்கள்.

**'தாய்மைக்கு மற்றொரு மகுடம்...'**






ஆபிரிக்க நாடான காங்கோவில் எபோலாவின் தாக்கம் தற்போது மிகத் தீவிரமாக உணரப்பட்டுள்ளது. இந்த நோயால் உயிரிழந்த 3 மாதமேயான குழந்தையை வைக்கப்பட்டுள்ள சவப்பெட்டியின் ஒளிப்படமே இது. சமூக வலைத் தளங்களில் இந்த ஒளிப்படம் வைரலாகப் பரவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## சீற்றம் சீற்றம்



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசக் கிராமங்களில் கடல் சீற்றம் அதிகரித்துள்ளது. சுனாமி இடர் நினைவுதினம் நெருங்கி வரும் நிலையில் ஏற்பட்ட உக்கிர கடல் சீற்றம் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஒலுவில் மீன் பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட கடலரிப்பு மூலம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அயல் பிரதேசங்களான மாட்டுப்பளை, அட்டப்பள்ளம், நிந்தவூர் முதலான பிரதேசங்கள் தற்போதைய கடல் சீற்றம் காரணமாகப் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. ஒலுவில் துறைமுகத்தின் குறித்த தாக்கத்தினால் இதுவரை நிந்தவூர்ப் பிரதேச செயலக பிரிவில் சுமார் 140 ஏக்கர் காணிகள் (தென்னம் தோட்டங்கள், நெற் காணிகள்) கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகத் தகவல்கள் மூலம் அறிய வருகின்றது.

**கடல் விழுங்கும் நிந்தவூரின் எதிர்காலக் கதி தான் என்னவோ?**

## எமக்கும் ஒன்று வேண்டும்

புதிய அமைச்சரவையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்படவேண்டுமென அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
அமைப்பின் செயலாளர் ஐ. எவ். எம். பாறூக் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இதனை வலியுறுத்தியுள்ளதுடன், அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களிருப்பதாகவும் இவர்களில் ஒருவருக்கு அமைச்சு பதவி வழங்க அரசு முன்வரவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

**நடக்குமா இது?**

## இன்று பேராளர் மாநாடு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் தோன்றிய ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் முதலாவது பேராளர் மாநாடு இன்று (23.12.2018) கிழக்கிலங்கையில் நடைபெறவிருக்கின்றது.
முஸ்லிம்கள் மத்தியிலான இந்த அரசியல் கட்சியின் இன்றைய முதலாவது பேராளர் மாநாடு காத்தான்குடி 'பீஜ்வே ஹோட்டல்' அரங்கில் நடைபெறும்.
மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பிற்கானது. பிரார்த்தனை இடம்பெறுவதுடன் கட்சியின் புதிய உயர் பீட உறுப்பினர் அறிமுகம் செயற்குழு உறுப்பினர்கள் பற்றிய அறிவித்தல் செயலாளர் நாயகத்தின் ஆண்டறிக்கை பேராளர்களின் கருத்துரைகள் என்பன இடம்பெறவுள்ளன.
எதற்காக ஆரம்பித்தோமோ அதற்காகவே ஒன்றுபடுவோம், முஸ்லிம் தேசியத்தை மீட்டெடுக்கும் நம் பயணம் எனும் கோஷத்துடன் பறக்கும் இந்த வண்ணத்துப் பூச்சி சிலர் வயிற்றைக் கலக்கத்தான் செய்யும்.

## கண்காணிப்புடன் மாதாந்த அமர்வு

கல்முனை மாநகர சபையின் ஒன்பதாவது மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் கிழக்கு மாகாண உயரதிகாரிகள் இருவரது கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றது.
இதுவரையான மாதந்த அமர்வுகளில் பெரும்பாலான அமர்வுகளில் பெரும் களேபரத்துடனும் கூச்சல் குழப்பங்களுடனும் முடிவுறுத்தப்பட்டு வந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனம் இந்த மாநகர சபையின் பக்கம் திரும்பியுள்ளதாகத் தெரிய வருகின் றது.
இதன் காரணமாகவே கடந்த ஒன்பதாவது மாதாந்த சபை அமர்வை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் முதலமைச்சர் அலுவலக சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி றிபா உம்மா ஜலீல் ஆகியோர் நேரில் வருகை தந்து அமர்வு நிறைவடையும் வரை சபை நடவடிக்கைகளைக் கண்காணித்தனர்.
மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் சபை அமர்வு அமைதியாக இடம்பெற்ற போதிலும் சில சந்தர்ப்பங்களின் வழமையான கூச்சல் குழப்ப மேற்படாமலும் இல்லை.

**கல்முனை மாநகரசபையே இப்படியும் ஒரு நிலை வேண்டுமா? கேட்கிறார்கள் வரியிறுப்பாளர்கள்**

## புதிய கட்டளைத் தளபதி



பாதுகாப்புப் படையினரின் புதிய கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனுர ஜெயசேகர தமது உத்தியோகபூர்வ பயணமொன்றை அம்பாறை மாவட்டத்துக்கு மேற்கொண்டார்.
இதன்போது நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு வருகை தந்த கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனுரஜெயசேகர அங்கு அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முக்கியஸ்தர்கள் மற்றும் நிந்தவூர் ஜும் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுடனான சந்திப்பிலும் கலந்துரையாடலிலும் கலந்து கொண்டார்.
கலந்துரையாடலின்போது சில நிமிடங்கள் தமிழிலும் உரையாற்றிய கட்டளைத்தளபதி தமது பயணத்தின் ஞாபகார்த்தமாக நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எஸ்.எம்.பி. பாறூக்கி டம் நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார்.
அமைதியான சூழ்நிலையில் பிரச்சினைகள் ஆலோசனைகளைக் கேட்டறிவது வலுவானது என்ற கருத்தை அவர் வெளியிட்டார்.

**நல்லது நடக்கட்டும்**

## இடமாற்றம்

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வருட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்த ஆசிரியர் இடமாற்றங்கள் (2018) யாவும் எதிர்வரும் ஜனவரியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார். கிழக்கிலுள்ள 17 கல்வி வலயங்களிலிருந்தும் எல்லாமாக 760 ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு உள்ளாகவுள்ளதாவும் தெரியவருகின்றது.

**இனிப்பும் கசப்பும்தான்.**

## வருகிறது பட்ஜெட்

கல்முனை மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் சபையின் 10ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அறிவித்தார். தற்சமயம் குறித்த வரவு - செலவுத் திட்டமுன் மொழிவுகள் மாநகர சபையின் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாகவும் மேயர் றகீப் தெரிவித்தார்.
வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறுவது கேள்விக்குறிதான் என்கிறார்கள் அவதானிகள்.

## அனுதாபப் பிரேரணை

வவுணதீவில் படுகொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவுகூர்ந்து கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வில் அனுதாபப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்தக் கொலைகள் மிலேச்சத்தனமான செயலெனப் பிரேரணை மீது உரையாற்றிய மேயர் ஏ.எம். றகீப் குறிப்பிட்டதுடன் ஈனத்தனமான இந்தச் செயலின் பின்புலம் கண்டறியப்படவேண்மெனவும் கூறினார். உறுப்பினர்கள் பலரும் அனுதாப உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதியாயர் காண்டத்து மேடைகள்



மேடை - 11

தையிட்டி அ.இராசதுரை

ஒரு பக்கம் விடியிது விடிய முன்னம் கணக்காக வலுவேளைக்கே ஜே.பியின் சிவில் அலுவலக வாகனமானது உறுமி. இரைந்து கொண்டே வந்து கரடியாரின் தொங்கு பறிவுப் படலையடியில் 'அற்றென்ஷனில்' நின்றும் விடு கின்றது. டைகரின் அட்டகாசத்தோடு கரடியாரும் வெருளிமாடு தலையைத் தூக்கிவிட்ட கணக்காய் உஷாரடைந்து "இந்த நாசமறுப்பான் வேசம் குலைவான் இண்டைக்கென்ன மதிகேட்டிலை ஓடி வந்தவன்?" கரடியார் மனைவியாரைப் பார்த்து இப்படியாய் அடித் தொண்டையினால் அணுங்கிச் சிணுங்கிவிட்டு ஒரு மெத்த நல்லபிள்ளையாய் வாகனத்தடிக்கு விழுந்து கட்டி ஓடிக்காட்டியும் தான் விடுகின்றார். டைகரும் "யாரடா மனிதனிங்கே" என்று கேட்டுவிடுவது போல் வாகனத்தடிக்குக் குரைத்துப் பிடுங்கியபடியே ஓடிப் போய்விடுகின்றது. அந்த இராணுவ ஜீப் வாகனத்திலிருந்து முதலாளாய் ஜே.பியின் டைகரை "அடிக் அடிக்" என்றபடியே இறங்கிவிடுகின்றார். அடுத்த இரண்டு அந்தச் சிவில் அலுவலகத்து சிங்கள ஊழியர்களும் டைகருக்குப் பயந்து வாகனத்துக்குள்ளேயே தம்மிட்டுப் போனவர்களாய் அந்த வாகனத்து சீற்றிலையே குரங்குகளாய்க் குந்திக் கொண்டிருந்தார்கள்.

"இந்தாரும் கந்தையர்... உந்த நாயை அங்காலை எப்பன் வெருட்டிவிடுமென். அந்தாக்கள் இறங்கிறதுக்கு" என்று ஜே.பி அவசரப்பட்டதும் அவசரப் படுத்தியதும் "டைகர் சும்மா நில் சும்மா நில் அடிக்" என்று உறுப்பியதும் எஜமானுக்கு மரியாதை செய்வது போல் வாலையாட்டிக் கொண்டே வீட்டுக்குள் ஓடிவிடுகின்றது. இந்த 'டைகர்' என்ற வார்த்தையானது ஜே.பிக்கு ஒரு தென்பைக் கொடுத்து விடுகின்றது.



அந்தச் சிவில் அலுவலகத்துப் பியோன் 'பண்டார' டைகரென்று பெயர் சொல்லிக் கூப்பிட்டது பிடிக்காமலுக்கு மூஞ்சையை முப்பத்திரண்டு முழத்திலை நீட்டிக் கொண்டே ஒரு சிறந்த இனக் காய்ச்சல்வாதியாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தான். இந்தப் பாழாய்ப் போன தெமிள் FELLOWS ஒக்கம தங்கடை நாய் பூனையினங்களுக்கெல்லாம் டைகர்... டைகர் நேம் வைச்சா கூப்பிட்டா என்றெல்லாம் டைகர் பிறஷர் மூளைக்காய்ச்சலாய் மூளையையும் அற்றாய்க் பண்ணி செத்தேபோய்விட்டவனாய்.. அடுத்தவனான அந்தச்சிவில் அலுவலகத்துச்செக்கூறிட்டிவேலையிலுள்ள கப்ரின் 'அரவிந்த' எதனையும் அலட்டிக் கொள்ளாதவனாய் ஏ.ஜீயே கேணல் சொல்லிப் புளுகில கரடியாரின் கோலத்தினையே குளோலுப்பில் என்ஜோய் பண்ணி ஒரு சுப்பரான சுகதேகியாய் கரடியாரோடு முட்டிக் கொண்டும் நின்றான்.

✦ ✦ ✦

ஜே.பி தாம் வந்த அந்த முக்கிய ஸ்ரோறியைச் சொல்லிவிடவென்று வாய் திறக்குது. திறக்க முன்னமாய் டைகர் மறுபடியும் வீட்டு வெளிவிறாந்தையிலுள்ள கரடியார் பகலில் படுக்குமந்தப் பெட்டி வாங்கிலுக்குமேலேறி நின்று அட்டகாசம் வைக்கத் தொடங்கியும் விடுகின்றது. ஜே.பி.யின் அவதி, அந்தரம் இன்னும் கூடிவிடுகின்றது. அடுத்த றிப்பாக இதேகதையைக் கொண்டு இளவாலையிலுள்ளவர்களுக்கும் சொல்லப் போக வேண்டுமென்று துருதுருத்த ஜே.பி, "டேய் டைகர் சும்மா நில்ல டாப்பா எல்லுப் போலை... ஆக்களைக் கதைக்கவிடேன்" என்று டைகரை ஒரு செல்லக் கோபமாய் அதட்டியதும் வைரவப் பெருமானின் மேன்மைகொள் வாகனமான அந்த ரைகரானது விளங்கியோ என்னவோ திடுகூறாய் அந்த வாங்கிலிலிருந்து நிலத்தில் குதித்துக் குந்தியிருந்து கொண்டே அந்த பண்டாரவையே வெறிக்க வைத்தும் பார்த்துக் கொண்டிருந்தது. பற்றாக் குறைக்குத் தங்களுடைய இந்தச் சிவில் ஒவ்வீஸ் ஜே.பியும் 'ரைகர்' என்று கூப்பிட்டு விட்டமைக்காக அந்த ஹெவி வெயிற்றை ஒரு கொஞ்சமேனும் தாங்கிக் கொள்ள முடியாதவனாய் உயிரோடையே செத்து மணக்கவும் தொடங்கிவிட்டவனாய் அப்படியே விம்மிப் பொம்மிக் கொண்டும் வாகனத்தோடு சாய்ந்தபடியே நின்று கொண்டிருந்தான். காற்சட்டைப் பொக்கற்றினுள்ளிருக்கும் பிஸ்ற்றலை எடுத்து இந்த ரைகரை வெளுத்துவாங்கினாலும் தான் 'கடிக்கப் பாய்ந்து வந்த டைகரை தற்காப்பின் நிமித்தமாய் சுட்டதென்று வலுஈசியாகவும் முடித்தும் விடலாமென்ற? வந்தலுவலை முடித்துக் கொண்ட ஜே.பி கரடியார் வைத்த கழிவு மாட்டிறைச்சியினால் நல்லாய்க் கொழுத்துப் போய் நிற்குமந்த ரைகருக்கும் கையசைத்துக் காட்டிவிட்டு வாகனத்துக்குள்ளோடிப் போயேற பண்டாரவின் NOICE மனம் போல வாகனமும் உறுமிக் கொண்டே வெளிக்கிடுகின்றது.

✦ ✦ ✦ ✦

வாகனம் ஆவளைச் சந்தியை எட்டும் நேரம் வரையும் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு ஒருவித தற்காலிக ஆறுதல் மனதோடு உள்நுழைந்த கரடியாரை ஜே.பி.யின் வந்த கதை தொடர்பாக விடுத்து விடுத்து மனோன்மணியார் கேள்விக்கு மேல் கேள்வியாய்க் கேட்டுத் தள்ளிப் பிய்த்துப் பிடிங்கித் தள்ளிக் கொண்டிருக்க காலையில் ஆமிக் காம்பிலுள்ளவர்கள் கொடுக்குமந்த பாண்துண்டின்நீச்சபொச்சங்களையில் கௌவிக் கொண்டு வந்து ரைகர் அதனை வாசற்படியில் போட்டுவிட்டு ஒரு தண்டசீருக்குச் சொறிந்து விறாண்டி அவதிப்பட்டு மாய்ந்து கொண்டிருக்க இன்னொரு வந்தான் வரத்தான் நாய் அதனைக் கண்டுவிட்டுத் தூக்கவர. இரண்டுக்குமிடையில் நாய்ப்போர் மூண்டு பெரும் பலிப்பிரியை உண்டாக்கிவிட மனைவியாரின் ஆய்க்கினை தாங்கமாட்டாமல் கரடியார் பெரிய கல்லுத்தூக்கியெறிந்து அந்த நாயை ஓட ஓட வெருட்டித் தள்ளிவிட அந்தக் கடிபட்ட நாயானது அந்த மினிக்காம்ப் பக்கமாய் போவதையும் கரடியாரின் பழக்கப்பட்ட பார்வை பதிவு செய்து கொண்டு விடுகின்றது. இந்தப் புலிகளின் அதிரடி வரத்துப் போக்குகளையெல்லாம் வலு நுட்பமாய்த் தெரிவித்திடுமோர் ரெட் சிக்னல்களாய்க் கணித்து வைத்துக் கொண்டு போற போற நாய்களையெல்லாமிந்த இராணுவத்தினர் அணைத்தும் வைத்தும் கொண்டு அரசு கப்பல் கப்பலாய் குவிக்கிற சிந்தாகுத்தமான சாப்பாட்டினால் அந்தப் புலிக்காவல் நாய்களையும் கொழுக்க வைத்து அவற்றையும் தங்களோடொரு தங்களான சிப்பாய்கள் போலுமாக்கி...

என்றெல்லாம் தம்முடைய ஆமிக்காரர்கள் இந்தப் புலிப்பயம் கொண்டு இந்தத் துவக்கு நிகர் டோக்குகளையெல்லாம் சிக்காரான சாப்பாடு போட்டு வளர்க்குமிந்த பேர்சனால்ற்றியை இந்தக் கரடியான கரடியார் நினைவுகூர்ந்து ஒரு ஆமிநேசனாய் ஒரு வளர்த்தி வளர்ந்து கொண்டபோது அந்த நேரம் பார்த்துத் தான் தன்னைப் போட்டந்த ஆமி நாய் கடித்துப் பிடுங்கிய அவலத்திலிருந்து தன்னை SAFE பண்ணிவிட்டமைக்காக கரடி எஜமானாரைப் பாராட்டி வாழ்த்துவது போல ஒரு புளுகத்தில் டைகர் ஓடடாவனமோடிப்போய் கரடியாருக்கு மேலே தொங்கிப் பாய்ந்து சாஷ்டாங்கம் பண்ணி தன்னுடைய எஜமான் மரியாதையைத் தெரிவித்தும் விடுகின்றது!

டைகர் கால்போட்டுப் பாய்ந்துவிழுந்த நேரத்தில் டைகரின் கால் நகம் கொளுவியிழுத்து கரடியாரின் தெந்தி பொந்தறியென்று கட்டியிருந்த சாரமும் அப்படியே முழுமையாக உரிந்து பாட்டத்தில் விழுந்தும் விடுகின்றது. இந்த என்னம்பொரு நாய் மரியாதையினால் தம்முடைய மானமே பறிபோச்சுதென்றவாறாய் கூச்சப்பட்டும்போன கரடியார் இந்தப் பெறுமதியான நாய் மரியாதைக்கு இந்தப் பெறுமதியில்லாத டேற்ரி மனித மரியாதையினாலேயே பதிலும் கொடுத்துவிட்டாற்போல "அடிக் நரகாலியே" என்றெல்லாம் திட்டிக் கொண்டே அந்த நன்றியுள்ள வம்சம் அந்த அப்படியாம்பட்ட எஜமானுக்கு முன்னாலேயே அந்த நரகாலி தாவி எல்லாவற்றையும் தான் உதறிவிட்டு எங்கமுன்னாலேயே ஓடிப் போய்விடுகின்றது.

இனி இந்த டைகர் இப்படியே காம்பிலேயே போய்த் துலையட்டுமென்று அந்த நன்றியைக் கொட்டிவிடும். ஐடியாவை வளர்த்துக் கொண்டுவிட்ட கரடியார் இராத்திரில அமளியோடு அரைவாசிக் கொடியோடு அறுத்தக் கொண்டு இன்ன இடமென்றில்லாமலுக்கு ஓடித்தப்பிய பாசத்தோடு பிள்ளைபோல் வளர்த்த அந்த செள்ளைத் தங்கச்சி மாடு ஒரு குறையுமில்லாமல் வீடு வந்து என்று கண் கலங்க வேண்டிக் கொண்டபோது வெள்ளைத் தங்கச்சியின் கொடியைத் தனது வாயில் கௌவியபடியே 'டைகர்' அதனைக் கூட்டி வருமந்த இறைவன் வகுத்த தத்தரூபமான காட்சி...

(தொடரும்)

# புது வருடத்தில் புது மகனாய்....

சின்னச் சின்ன வயதினிலே
வண்ண வண்ணக் கற்பனைகள்
நான் வளர்த்தேன் உன்னிடத்தில்
என் எண்ணமதைத் திசைமாற்றி
நீ நல்லவழி தவறிவிட்டாய்– என் மகனே

என் கற்பனைக்கு அளவில்லை
சின்ன வயதினிலே
உன்னைப் பள்ளிக்கூடம்
கூட்டிச் செல்கையிலே
உன்னுடன் கூட வந்த நேரமெல்லாம்
என் கற்பனைகள் சிந்தனைகள்–
உன்னோடுதான்

என் மகன் ஓர் ஆசிரியனாய்
என் மகன் ஒரு சட்டத்தரணியாய்
என் மகன் ஒரு நீதிவானாய்
என் மகன் சமூகத்துக்குச் சேவை செய்யும்
ஒரு நல்லாசானாய்
என்று கற்பனை செய்தேன்
அத்தனையும் இன்று
சிலை வடிக்கக் கல் எடுத்து
சிற்றுளியால் செதுக்கையிலே
தலைவெடித்துப் போன கதை
ஆகிவிட்டது – என் மகனே


நீதான் என்ன செய்வாய்
உன்னைச் சொல்லிக் குற்றமில்லை
நீ போகின்ற பாதையிலே போதைவஸ்து
நீ திரும்பும் திசையெல்லாம் வாள்வெட்டு
நீ நடக்கின்ற பாதையிலே கொலை, கொள்ளை
நீ வருகின்ற பாதையிலே
லஞ்சம் வாங்கும் அதிகாரிகள்
எப்படி மகனே நீ
நல்லாசானாய் நீ வருவாய்

பெரியோரை மதிக்காமல் வாழும் இளையோர்
முதியோர் என்றாலே கேலி செய்யும் கூட்டம்
குருத்தோலை ஒரு நாள்
காவோலை ஆகிவிடும் என்று தெரியாமல்
கூத்தடிக்கும் கூட்டம்
நான் தான் பெரியவன் என்று
மார்பு தட்டி ஓலம் போடும் அவர்கள்
இந்தச் சமூக கலாசாரத்தில்– எப்படி மகனே
நல்லாசானாய் நீ – வருவாய்

பிறக்கப் போகும் புத்தம் புது வருடத்தில்
நித்தம் நித்தம் – உனை நினைத்து
ஏங்கும் பெற்றோரின் மனம் நெகிழ
தன் மானம் உள்ள – தமிழ் மகனாய்
தரணியிலே போற்றப்படும் நல்மகனாய்
நீ மாற வேண்டும்– அதைப் பார்த்து
என் மனம் நெகிழ வேண்டும்– உன் பெயர் சொல்லி
ஊரே திகழ வேண்டும்
புது வருடத்தில் புதுமகனாய் நீ வாழ்வாய்!

கவிதை

வேலணையூர் பொன். நகுலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

நெடுந்தீவு மகேஷ்

# கடலோடு போனவன்

கோபம் நிரந்தரமானதல்ல. நெருங்கிய நட்பின் முன்னேயும் பின்னேயுமே கோபம் துள்ளி எழுந்து விருப்பற்ற விதத்தில் கூத்தாடுகிறது. கோபம் விரிந்தபோது விளையும் வேண்டாத செயல்களும் வீணான வார்த்தைகளும் அர்த்தமற்றவை. மரியாம்பிள்ளையை அவை உறுத்தின.

அந்திவானம் சிவந்திருந்தது. நீலக்கடலின் அலை ஓசை அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தது. கடற்கரை மணலில் அமர்ந்திருந்த பலரின் பார்வைகளில் கடல்மீது எங்காவது ஒரு புள்ளியில் அந்தப் படகின் வரவு தோன்றாதா? என்ற ஏக்கம் நிறைந்திருந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் எங்கும் அலையின் அணிவகுப்பே தெரிந்தது. படகை அடையாளம் காட்டும் ஒரு கரும்புள்ளியையேனும் எவராலும் காண முடிவில்லை.

மரியாம்பிள்ளையின் கண்களில் கண்ணீர் வெள்ளமிட்டது. அவன் அழுவது வேறு எவருக்குமே தெரியவில்லை.

நேற்று மாலையில் படகைக் கொண்டு கடலுக்குப் போன ஆபிரகாம் திரும்பி வராமையே இந்தக் கடற்கரையோரச் சனக் கூட்டத்தின் கவலைக்கும் தேடலுக்கும் காரணம்.

தூரத்து உறவினர்களான மரியாம்பிள்ளையும் ஆபிரகாமும் நண்பர்கள். அத்துடன் இருவரும் சேர்ந்தே தொழில் செய்து வந்தனர். ஆபிரகாமுடன் சேர்ந்து கூடிக் களித்துக் கடற்பரப்பில் இருவருமே குதூகலித்த நாள்கள் மரியாம்பிள்ளையின் நினைவில் வந்து மோதின.

படகுக்குச் சொந்தக்காரனான ஆபிரகாம் சில தினங்களாகத் தனியாகவே படகை ஓட்டிச் சென்று தொழில் செய்து வருவான். அவ்வாறே நேற்றும் சென்றிருந்த ஆபிரகாம், இன்று பலமணி நேரமாகியும் கரை திரும்பவில்லை. அவன் வரவை எதிர்பார்த்தே பலரும் அங்கே கரையில் காத்துக் கிடப்பதாகத் தெரிந்தது.

அந்தக் கூட்டத்தின் மத்தியில் நின்ற சிமியோன், அங்கே முகம் வாடிநின்ற மரியாம்பிள்ளையக் கண்டதும் "வள்ளத்தில் நீ நேற்று ஆபிரகாமுடன் போகவில்லையா? ஏன்?" என்று கேட்டு நின்றான். ஆனால் மரியாம்பிள்ளைக்கோ, சிமியோன் கேட்ட கேள்விக்கான பதிலை ஒரு வார்த்தையில் சொல்லிவிட முடியாதென்பது தெரிந்திருந்தது. எனினும் அவன் "போகவில்லை" என்றே ஒரு சொல்லில் பதிலைச் சொன்னான். அவனது மனமோ அவன் சொன்ன பதிலுக்கும் மேலான ஒரு பதிலைத் தன்னுடன் வைத்துக் கொண்டு வேதனைப்பட்டது.

மரியாம்பிள்ளை ஆபிரகாம் இருவருமே தமது உறவுக்கும் அப்பால் பள்ளித் தோழர்களாக இணைந்து வளர்ந்தவர்கள் அவர்கள்தம் கல்வியால் தொழில் வாய்ப்புக்கள் பெற இயலாத நிலையிலேயே இருவரும் இணைந்து கடற்றொழிலில் ஈடுபட்டார்கள். தொழிலுக்குச் செல்லாத நாள்களிலும் அவர்களைப் பிரித்துப் பார்ப்பது கடினந்தான். எங்கே சென்றாலும் இருவரின் பயணங்களும் ஒன்றாகவே இருந்தன.

இன்று மரியாம்பிள்ளையைக் கரையில் கண்டவர்கள் ஆபிரகாமுடன் அவன் செல்லாமைக்கான காரணத்தை அறிய விரும்பினார்கள். ஆனால் அது பற்றிய விசாரணையில் ஈடுபட அந்த நேரம் பொருத்தமற்றதென்பதை அனைவருமே அறிந்திருந்தனர்.

ஆபிரகாம் இன்னமும் கரையேறாமையை எண்ணிய மரியாம்பிள்ளைக்கு நேரம் செல்லச் செல்ல வருத்தும் உள்ளத்தைச் சுமந்த அவனது உடலும் துடித்தது.

ஆபிரகாமின் வள்ளத்தையே தனது தொழிற்படகாகச் சொந்தம் கொண்டு செயற்பட்ட மரியாம்பிள்ளைக்குச் சொந்தமாக ஒரு படகில்லாத நிலையில் கரையேறியிருந்த பல படகுகளில் ஒன்றைக் கேட்டு எடுத்துக் கொண்டு ஆபிரகாமைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது.



கோபம் கொள்ளுதல் அர்த்தமற்றது. மரியாம்பிள்ளை சிந்தித்தான் கோபத்தின் உச்சத்தில் மாறி மாறி வீசப்படும் சொற்கள் யாவுமே அர்த்தமுடையவை அல்ல. அவை யாவுமே அழுக்கானவை வலிந்து அழுக்காக்கப்பட்டவை.

அருகிலே நின்ற சிமியோனின் படகை அவனிடம் கேட்டு அதனை எடுத்துச் செல்ல மரியாம்பிள்ளை விரும்பினான் உடனேயே அவனிடம் தனது விருப்பத்தை வெளியிட்டான்.

ஆனால் காற்றும் கடலும் கொந்தளித்துக் குமுறும் இந்த வேளையில் படகை எடுத்துப் போவதற்குச் சிமியோன் உடனேயே சம்மதிக்கவில்லை அதிகமாகத் தயங்கினான். அங்கு நின்ற பலரும் ஆபிரகாம் திரும்ப வேண்டும் என்ற ஆவலோடிருந்தனர். இருப்பினும் மரியாம்பிள்ளை சொல்வதுபோல் கடலுக்குச் சென்று ஆபிரகாமைத் தேடுவதில் ஆபத்திருப்பதாகவே எண்ணினர். அத்துடன் பகல் கலைந்து இருள் சூழ்ந்தது.

மரியாம்பிள்ளை தனது முயற்சியை ஆறப்போட விரும்பவில்லை. தொடர்ந்து சிமியோனை வற்புறுத்தினான். "படகைத் தருகிறேன் ஆனால்....!" என்று எதையோ சொல்ல வந்த சிமியோனைப் பார்த்து "பயப்படத் தேவையில்லை நான் உன்னுடைய படகோடு கரைக்கு மீண்டு வருவேன்!" என்றான்.

தனது படகைப் பற்றியே சிந்திக்காமல் படகைத் தனியாகச் செலுத்திச் செல்லத் துணிந்த மரியாம்பிள்ளையைப் பற்றிய சிந்தனையோடிருந்த சிமியோன் "அதில்லை மரியான் நீதான் கவனம்!" என்றான்.

"எதற்கும் பயப்பட வேண்டாம் நான் ஆபிரகாமுடன்தான் திரும்புவேன்" என்று சொன்ன மரியாம்பிள்ளை, இரைச்சலிடும் அலைகடலையும் கிழித்துக் கொண்டு விரையும் படகைச் செலுத்திச் செல்வது தெரிந்தது.

கரையில் நின்றிருந்த பலரும் மரியாம்பிள்ளையின் துணிச்சல் பற்றியே பேசிக் கொண்டார்கள். இருள் சூழ்ந்த கடற்கரையில் ஆங்காங்கே சிறு வெளிச்சங்கள் தெரிந்தன. பலரும் தூக்கமின்றிக் கரையில் சாய்ந்திருந்தனர்.

நேரம் விரைவது தெரியவேயில்லை.

அந்தக் கடற்கரையில் மீண்டும் கிழக்குத் திசையில் ஒளி பரவப் பொழுது விடிந்தது அந்த நேரத்திலேதான் இரண்டு படகுகளும் கரையேறியிருந்தன. அவற்றோடு கரையெறியிருந்த ஆபிரகாம் மரியாம்பிள்ளை இருவருமே மகிழ்ச்சியோடு தமது சுற்றத்தவரைச் சந்தித்தனர்.

அவர்கள் உறவினரோடு கட்டிக் கொஞ்சிக் கதைத்து மகிழும் காட்சி அந்தப் பிர தேசத்தையே உற்சாகத்தில் ஆழ்த்தியது.

மரியாம்பிள்ளையைப் பல மணி நேரமாக உறுத்திக் கொண்டிருந்த ஆபிரகாம் மீது அவன் உமிழ்ந்த ஒரு வார்த்தை, அவனது நினைவுக்கு வந்தது. அந்தச் சொல்லின் சூடு இப்பொழுது தணிந்திருப்பதாக அவனுக்குத் தெரிந்தது.

கோபம் கொள்ளுதல் அர்த்தமற்றது. கோபம் தோன்றும் வேளைகளில் ஏற்படும் முரண்பாடுகளால் செய்யப்படும் செயல்களும் சொல்லப்படும் சொற்களும் எவ்வளவு கொடுமையானவைகள். அவன் ஆபிரகாம் மீது கொண்ட கோபத்தின்போது அவன் செய்த செய்கைக்காகவும் சொன்ன சொற்களுக்காகவும் வருந்தினான். எதற்கும் கோபத்தைத் தவிர்ப்பதே சிறப்பானது.

மரியாம்பிள்ளை சிந்தித்தான் கோபத்தின் உச்சத்தில் மாறி மாறி வீசப்படும் சொற்கள் யாவுமே அர்த்தமுடையவை அல்ல. அவை யாவுமே அழுக்கானவை வலிந்து அழுக்காக்கப்பட்டவை.


எனினும் மரியாம்பிள்ளையோ "நீ கடலோடு போவாய்!" என்று திட்டியபோது தோன்றாத தவறு! பின்னர் ஆபிரகாம் தனியாகவே கடலுக்குச் சென்று திரும்பாததை நினைந்த நிலையில் "கடலோடு போய்விடுவானோ?" என்று எண்ணியபோதெழுந்த நட்பின் முன்னே தலை குனிந்தது.

கோபம் நிரந்தரமானதல்ல. நெருங்கிய நட்பின் முன்னேயும் பின்னேயுமே கோபம் துள்ளி எழுந்து விருப்பற்ற விதத்தில் கூத்தாடுகிறது. கோபம் விரிந்தபோது விளையும் வேண்டாத செயல்களும் வீணான வார்த்தைகளும் அர்த்தமற்றவை. மரியாம்பிள்ளையை அவை உறுத்தின.

அனைத்தும் தவறென உணர்ந்து இப்பொழுது. அந்தப் பரந்த கடல் மணற்பரப்பில் ஆபிரகாமும் மரியாம்பிள்ளையும் கைகோர்த்து நடந்து செல்வதைப் பார்த்துக் கடற்கரையில் நின்றோர் மகிழ்வோடு அவர்களைப் பற்றியே சிரித்துக் கதைப்பது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமர்த்தியம்



பேருந்துநிலையத்தில்பழவியாபாரம்செய்யும் முதியவர் ஒருவர் பழக் கூடையுடன் பேருந்துஒன்றில்ஏறினார். "ஐந்துபழங்கள் பத்து ரூபாய்" என கூவி விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. பழங்களை சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கிவிட்டார். உடனே பழக்கூடைஒன்றுடன்இளைஞன்ஒருவன் இதேபேருந்தில்ஏறினான். "ஆறுபழங்கள் பத்துரூபாய்"எனக்கூவினான். அவனுக்கு நல்ல விற்பனை நடந்தது.

மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர் அங்கும் "ஐந்து பழங்கள் பத்து ரூபாய்" என்று கூறி விற்க முயன்றார். அவரும் பயன் கிடைக்காது போக கீழே இறங்கிவிட்டார். அடுத்து அந்தப் பேருந்தில் ஏறிய அதே இளைஞன்நிறையபழங்களைவிற்பனை செய்தான்.

இந்தக் காட்சிகளை அந்தப் பேருந்து நிலையத்தில்சிலமணிநேரம்தரித்துநின்றமிகப் பெரும் தொழில் நிறுவனம் ஒன்றின் விற்பனை ஆலோசகரான ஒருவர் கவனித்துக் கொண்டிருந்தார். முதியவரில் அவருக்கு ஒரு அனுதாபம் ஏற்பட்டது. உடனே அந்த முதியவரைதன்னிடத்தில்அழைத்துஐந்து பழங்களை பத்து ரூபா கொடுத்து வாங்கியதுடன் "ஐயா பெரியவரே அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே. அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய்க்கு விற்றால் தானேஉங்களுக்கும்வியாபாரம்நடக்கும். அதிக கொள்முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி இலாபத்தைக் குறைத்து அதிக பொருள்களை விற்பனை செய்ய பழகுங்கள்" என்று தனது ஆலோசனைகளை அள்ளிவிட்டார். முதியவரோ சிரித்தபடி "சும்மா போ தம்பி அவன் என் மகன்தான்.

இந்தப் பழங்களும் அவனுடையவை தான்" ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால் உள்ளே வாங்குவதற்கு மக்கள் விரும்பார். அதனால்தான்ஐந்துபழம்பத்து ரூபாய் என்று கூறிக் கொண்டு போனேன். என் பின்னால் அவன் ஆறு பழம் பத்து ரூபாய் என்று கூறியதும் அடடே இவனிடத்தில் இலாபமாக இருக்கிறதே என்று மக்கள் உடனேயேதாமதிக்காதுபழங்களைவாங்குவார்கள்.


அவன்தான் தம்பி உண்மையான வியாபாரி" என்றார் பெரியவர். ஆலோசனை கூறியவிற்பனைஆலோசகரோவாயடைத்துப் போய் நின்றார்.

## வர்ணம் தீட்டுவோம்





## மனிதனின் அழிவுக்குப் பின்னும் வாழும் கரப்பான் பூச்சி



அணுக்குண்டு ஒன்று வெடித்து பெரும் உயிர் அழிவு ஏற்பட்ட பின் சுடுகாடாக மாறியிருக்கும் பிராந்தியத்தைப் பார்க்கக் கூடிய ஒரு உயிரினம் உண்டு என்றால், அது வீட்டில் வாழும் கரப்பான் பூச்சிதான். இந்தப் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர்வீச்சைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது.

மனிதன் அழிவின் பின்னரும் வாழப் போகும் இவை தோன்றியது மனித இனம் தோன்றுவதற்கு முன்னரே ஆகும். அதாவது 358 மில்லியன் வருடங்களுக்கு முன்பே இவை தோன்றின. உலகின் துருவப் பகுதி ஜேர்மனி என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தற்போது உலகில் 3 ஆயிரத்து 490 கரப்பான் பூச்சி இனங்கள் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. கரப்பான் பூச்சி தலை, நெஞ்சு, வயிறு என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு 3 சோடிக் கால்களும் ஒரு சோடி உணர் கொம்புகளும் உள்ளன.


இவற்றுக்கு முதுகெலும்பு கிடையாது. இரண்டு அல்லது ஒரு சோடி சிறகுகள் காணப்படுகின்றன. இவற்றின் சிறகுகள், தலை துண்டிக்கப்பட்டா லும் இவற்றால் சுவாசிக்க முடியும்.

உலகின் மிகப் பெரிய கரப்பான்பூச்சி இனம் ஆஸ்திரேலியாவில் காணப்படுகிறது. 9 சென்ரிமீற்றர் வரை இதன் அளவு இருக்கும். எடை 30 கிராமை விட அதிகமானதாக இருக்கும். இதன் உணர் கொம்புகள் சூழலை உணர உதவுகின்றன. இரவின் இருட்டில் உணவு தேடும். இவை எல்லா உணவுகளையும் வெட்டியும் அரைத்தும் உண்ணுகின்றன. இவற்றுக்குச் சவர்க்காரம், காகிதம் என்பனவும் உணவாகின்றன. வீடுகளில் அதிக அளவில் கரப்பான் பூச்சிகள், எலிகள் இருந்தால் அவற்றை உடனடியாக அழிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இவற்றின் மூலம் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, ஒவ்வாமை நோய்கள் ஏற்படுகின்றன.

## மரபுச் சொற்களும் அவற்றின் விளக்கங்களும்

1. அறக்கப் பறக்க- மிக விரைவாக
2. முகம் மலர்தல்- மகிழ்ச்சியடைதல்
3. இலவு காத்த கிளி- காத்திருந்து ஏமாறுதல்
4. தாளம் போடல்- வறுமையால் வாடல்
5. நுனிப்புல் மேய்தல்- மேலெழுந்தவாரியாகப் படித்தல்
6. வாட்டசாட்டம்- சிறப்பான தோற்றப் பொலிவு
7. கண்ணும் கருத்துமாய்- முழுமையான கவனத்துடன்
8. பொடிவைத்துப் பேசுதல்- தந்திரமாகப் பேசுதல்
9. ஏட்டிக்குப் போட்டி- விதண்டாவாதம் புரிதல்
10. ஏட்டுச்சுரக்காய்- அனுபவமற்ற கல்வியறிவு
11. கடன் கழித்தல்- மனமின்றிச் செய்தல்
12. நட்டாற்றில்விடுதல்- ஆபத்து வேளையில் கைவிடல்
13. குரங்குப்பிடி- பிடிவாதமாய் இருத்தல்
14. பூசி மெழுகுதல்- குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
15. முகம் கொடுத்தல்- எதிர்கொள்ளல்

## இடைவெளி நிரப்புவோம்




## மற்றவர்களிடத்தில் நன்மதிப்புப் பெற...

1. தேவையானஇடத்தில்தேவையானவிடயத்தை மட்டும் பேசுவோம்.
2. எந்த விடயத்திலும் பெறுமையைக் கடைப் பிடிப்போம்.
3. பெரியவர்களிடத்தில்மரியாதைஉள்ளவர்களாக இருப்போம்.
4. எல்லாம்எமக்குத்தெரியும்என்றுஅலட்டிக்கொள்ளாது சமயம் வரும்போது அறிவுபூர்வமான திறமையை வெளிக்காட்டுவோம்.
5. எங்கள் கடமை பொறுப்புக்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதில் ஆர்வமுடையவராக இருப்போம்.
6. கூடியவரை மற்றவர்களிடம் கோபப்படுவதை குறைப்போம்.
7. அடுத்தவரின் தனிப்பட்ட விடயங்களில் அவசியமின்றித் தலையிடாதிருப்போம்.
8. பிறர் பற்றி குறைகூறுவதைத் தவிர்ப்போம்.
9. அடுத்தவரைப் பழிவாங்கும் எண்ணங்களை மனதிலிருந்து அகற்றுவோம்.
10. எமக்குப் பொருத்தமான நிறங்களிலும் செல்லும் இடத்துக்குப் பொருத்தமான வகையிலும் அடக்கமான ஆடைகளை அணிவோம்.
11. சக நண்பர்களின் முன்னேற்றத்துக்கு இயன்றவரை உறுதுணையாக இருப்போம்.
12. நாம் அறியும் விடயங்களைத் தேவை ஏற்படின் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமர்சனம்

# சீதக்காதி

நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் படத்தின் மூலம் திரும்பிப் பார்க்க வைத்த பாலாஜி தரணிதரனின் அடுத்த படம் இது. விஜய் சேதுபதிக்கு இது 25வது படம். விஜய் சேதுபதியின் வயதான தோற்றமும் சேர்ந்துகொள்ள பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது 'சீதக்காதி'. படத்தில் வரும் எந்தப் பாத்திரத்துக்கும் சீதக்காதி எனப் பெயர் கிடையாது. 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்ற பழமொழிதான் படத்தின் அடிப்படை.

**கதை**

தமிழில் நாடகக் கலை உச்சத்தில் இருந்தபோது புகழ் பெற்று விளங்கிய அய்யா ஆதிமூலம் (விஜய் சேதுபதி), தன்னுடைய கண் முன்பே அந்தக் கலைக்கு மதிப்பில்லாமல் போவதைப் பார்க்கிறார். குடும்பத்தில் பணத் தேவை தொடர்பான நெருக்கடிகளும் அதிகரிக்கின்றன. ஒரு நாள் நடித்துக்கொண்டிருக்கும் போதே அவர் இறந்துவிடுகிறார். ஆனால், அவரது கலை இறப்பதில்லை. அது எப்படி நடக்கிறது, அதனால் நடக்கும் விசித்திரங்கள் என்ன என்பதையே எதிர்பாராத விதத்தில் சொல்கிறது படம். இந்த மாதிரியான ஒரு கதையை யோசிக்கும் துணிச்சலுக்காகவே இயக்குநரை ஒரு முறை பாராட்டிவிடலாம். படம் ஆரம்பித்துக் கிட்டத்தட்ட அரை மணி நேரம்வரை விஜய் சேதுபதியின் நடிப்பில் நீள நீளமான நாடகக் காட்சிகள் வருவதும், மிக மோசமான, எதிர்பார்க்கத் தக்க பின்னணி இசையுடன் சோகமான சம்பவங்கள் நடப்பதும் பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றன. ஆனால், ஆதிமூலம் பாத்திரம் இறந்தவுடன் முற்றிலும் மாறான திசையில் படம் செல்கிறது.

அதுவரையிலான திரைக்கதையும் பின்னணி இசையும் முழுவதும் உடைபட்டு, வேறு ஓர் அனுபவத்துக்குக் கூட்டிச் செல்கிறது படம். இதுதான் இந்தப் படத்தின் மிகப் பெரிய பலம்.

**பலவீனங்கள்**

படத்தில் சில பலவீனங்களும் இருக்கின்றன. படம் ஆரம்பித்து நீண்ட நேரத்துக்குப் படத்தின் திசையே புரியாமல் சோர்வளிக்கிறது. பிறகு வரும் பல காட்சிகளில் நம்பகத்தன்மை இல்லாமல் போகிறது. ஆனால், இதைத் தனது கலகலப்பான, எதிர்பாராத திருப்பங்களால் சரிசெய்கிறார் இயக்குநர்.

**பாத்திரங்கள்**

படத்தில் குறைந்த நேரமே வருகிறார் விஜய் சேதுபதி. எந்த ஒரு முன்னணி நடிகருமே மிகச் சாதாரணமாக நடித்துவிட்டுப்போகக்கூடிய பாத்திரம் அவருடையது. விஜய் சேதுபதியும் அதைச் செய்திருக்கிறார். ஆனால், படத்தில் வரும் பல சிறிய பாத்திரங்கள் பின்னியெடுக்கிறார்கள். அர்ச்சனா, மௌலி, புதிய நடிகர்களாக நடிப்பவர்கள், இயக்குநர் மகேந்திரன், ரம்யா நம்பீசன் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு காட்சியில் முத்திரை பதிக்கிறார்கள்.

**இசை, காட்சியமைப்பு,**

'96' படத்துக்கு இசையமைத்த கோவிந்த் வசந்தா, இந்தப் படத்திலும் தனித்துத் தெரிகிறார். முன் பாதியில் ஒரு பாணியிலும் பிற்பாதியில் வேறு பாணியிலும் ஆச்சரியப்படுத்துகிறார். பல காட்சிகள் சிறியதாக இருந்திருக்கலாம். படம் கிட்டத்தட்ட 3 மணி நேரம் நீள்கிறது. ஆனால், நிச்சயம் பொறுமையாக, நினைத்து நினைத்து இரசிக்கக்கூடிய திரைப் படம்தான் 'சீதக்காதி'.



**மேடை நாடகக் கலைஞர்களின் வலியை, மேடை நாடகத்துக்கும், சினிமாவுக்குமான முரண்களை இப்படம் பேசியிருக்கிறது. அது தொடர்பான விவாதங்களையோ கவன ஈர்ப்புகளையோ கோரியிருக்கிறது. ஆனால், பெரும்பகுதி படம் நம்பியிருக்கும் அந்த `அய்யா வருகை' ஒரு கட்டத்துக்குப் பின் அயர்ச்சியை உண்டாக்குவது என்னவோ, உண்மை.**

## இரசிக்கலாம்



# வந்திடும் தைப்பெண்ணே வாழ்த்து...

கவிதை

வயலூரான் செ.சுதாகரன்



சந்ததம் துன்பமே சந்திக்கும் எங்களின்
முந்தைத் தமிழினம் முன்னேறி - இந்நிலத்தில்
எந்நிதியும் பெற்றிங்கு ஏற்றமுற வாழ்ந்திட
வந்திடும் தைப்பெண்ணே வாழ்த்து

பந்தங்கள் தம்மையிப் பாழான போரிலே
தந்துமே தாழ்ந்த தமிழரும்- இந்நிலத்தில்
சொந்தங்கள் கூடிச் சுகத்துடன் வாழ்ந்திட
வந்திடும் தைப்பெண்ணே வாழ்த்து

தந்திடும் போதையில் தன்னிலை இல்லாமல்
நொந்திடும் செயலதால் நோக்கொண்டு- எந்நாளும்
வந்திடும் வாலிபர் வாழ்வாங்கு வாழ்ந்திட
வந்திடும் தைப்பெண்ணெ வாழ்த்து

செந்தமிழர் சிந்திடும் செங்குருதி தன்னாலே
வந்திடும் துன்பத்தை வாட்டியே- இந்நாட்டில்
எந்நாளும் இங்கவர் பேதமின்றி வாழ்ந்திட
வந்திடும் தைப்பெண்ணே வாழ்த்து

நிந்தனைப் பட்டிந்த நீள்புவி தன்னிலே
எந்நாளும் இடருளும் எம்மவர் முந்தியினி
எந்நாளும் இன்பமொடு ஏற்றமுற வாழ்ந்திட
வந்திடும் தைப்பெண்ணே வாழ்த்து

# ஊரெல்லாம் அவள்...

நல்லூரில் நானவளை
கன்னியாய் காண்கையிலே
கட்டுவன் அவளையென்று
இளவாலைக் கனவினிலே
இதயம் நனைந்தேன்

வடலி அடைப்பாலே
வதன மதி பூக்கையிலே
நிலா வரையாள் உலாக் கண்டு
அளவெட்டி நடக்கையிலே
அலை பாய்ந்து நின்றேனே

பொன்னாலை கொடி- காமம்
கட்டுடைக்க வேண்டுமென
இடைக்காடு தரிசிக்க
தண்ணீரூற்றாகத்
தவங்கிடந்து கைத்) தடியாய்
தளர்ந்தே மெலிந்தேனே

கந்தரோடை வள்ளியுடன்
இருபாலைக் கனவொன்று
இடையிலே புகுந்தனால்
ஊரெழுந்த போராலே
உயரப் பறந்தாளே
கிளிநொச்சி மரம் தாண்டி
புத்தூர்க்குப் பறந்ததுவே

உடையார் கட்டுவதை
உளத்திலே கொண்டாளே
சத்துருக் கொண்டானை
சாகசத்தால் மணந்துவிட்டாள்
கொக்குவில்லாய் வளைந்து
கொத்திச் சென்றுவிட்டாள்
மயிலங்காட்டினையும்
மன்னனுக்கே காட்டிவிட்டாள்
சாவகச்சேரியினை
சந்ததமும் நாடுகிறேன்

கவிதை

மேகதூதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விராட் கோக்லிக்கு ஆதரவும் எதிர்ப்பும்



இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியின் ஆக்ரோசம் சரியானதா அல்லது தவறானதா என்பது தொடர்பான விவாதங்கள் சமூக வலைத்தளங்களில் சூடுபிடித்து வருகின்றன.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் என்றாலேயே அனைத்துக் கமராக்களின் பார்வையும் கோக்லியில்தான் மையம் கொண்டிருக்கும். நடைபெற்று வரும் தொடரிலும் இது விதிவிலக்கல்ல. ஒன்றன் பின்னர் ஒன்றாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்தவண்ணம் உள்ளன. அதிலும் இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிம் பெய்னை கோக்லி வம்புக்கிழுத்தமை பெரும் சர்ச்சையாகியுள்ளது. இதற்கு பல தரப்புக்களிலும் இருந்து எதிர்ப்பலைகள் ஏற்பட்டுள்ளன.

மிச்சல் ஜோன்சன், சப்பல் உள்ளிட்ட சிலர் கோக்லியின் முடிவு தவறானது என்று விமர்சித்துள்ளனர்.

ஆனால் வேறுசிலர் கோக்லிக்கு ஆதரவும் தெரிவித்துள்ளனர். "கோக்லியின் ஆக்ரோசம் கிரிக்கெட்டுக்குத் தேவை" என்று ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் போர்டர் பாராட்டியுள்ளார்.

"கோக்லி எது சரியோ அதைச் செய்கிறார். ஒரு தலைவராக அணியின் வெற்றிக்கு எது தேவையோ அதையெல்லாம் செய்கிறார். இதில் விமர்சிக்க ஒன்றுமில்லை" என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அக்தர்.

## சதங்கள் தந்த உயர் ஏற்றம்!



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் வீரர்களான மத்தியூஸ், குசல் மென்டிஸ் இருவரும் சதங்களைப் பதிவுசெய்த நிலையில் அவர்கள் இருவரும் டெஸ்ட் தரப்படுத்தலில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளனர். குசல் மென்டிஸ் 20ஆவது இடத்தில் இருந்து 18ஆவது இடத்துக்கு முன்னேறினார். மத்தியூஸ் 24ஆவது இடத்தில் இருந்து 16ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

விளையாட்டு

பிரகாஸ்



எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் கட்டாரில் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான கட்டுமானங்கள் கிட்டத்தட்ட 50 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன என்று அறிக்கை விடுத்துள்ளது கட்டார்.

## வந்தார் பாண்டியா

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் சகலதுறை வீரர் பாண்டியா சேர்க்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கருதப்படுகிறது.

ஆசியக் கிண்ணத் தொடரின்போது காயம் காரணமாக தொடரில் இடைநடுவில் விலகினார் பாண்டியா. இதையடுத்து அவர் தொடர்ந்து ஓய்வில் இருந்து வந்தார்.

தற்போது காயம் குணமடைந்ததை அடுத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் பாண்டியா சேர்க்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது.



## எனது தலைமையின் தோல்வி; மனம் திறந்தார் ஸ்ரீவ் சிமித்!

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரம் எனது தலைமையிலான தோல்வி என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித்.

ஆஸ்திரேலிய ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.


'உண்மையில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்துக்கும் எனக்கும் தொடர்பில்லை, நான் அந்தத் தவறை செய்யவில்லை. ஆனால், பந்தைச் சேதப்படுத்தும் திட்டம் தீட்டப்படுவதை நான் ஓய்வறையில் அறிந்தேன். ஆனால், அந்த விவரத்தை நான் காதில் வாங்கிக்கொண்டு கண்டுகொள்ளாமல் சென்றதுதான் என் தவறு. ஒரு தலைவராக நான் அப்போதே அதைத் தடுத்திருக்க வேண்டும். நான் தடுக்கவில்லை என்பது, என் தலைமையின் தோல்வி என்பதை ஒப்புக்கொள்கிறேன். என் தவறை நான் ஒப்புக்கொண்டதால்தான் நான் மேல்முறையீட்டுக்குச் செல்லவில்லை. செல்லவும் விரும்பவில்லை. அந்த தவறை கடந்து வரவே விரும்புகிறேன். அந்தத் தவறு நடக்காமல் தடுக்க எனக்கு வாய்ப்புகள் இருந்தபோதிலும்கூட நான் பந்தைசேதப்படுத்தும் சம்பவம் நடக்காமல் தடுக்க தவறிவிட்டேன். அந்த தவறுக்கு நான் பொறுப்பேற்றேன்' என்று சிமித் மேலும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இறுதியாக தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது தென்னாபிரிக்க அணி பெரியளவில் ஆதிக்கம் செலுத்தியது. தென்னாபிரிக்காவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தும் விவகா ரத்தைக் கையிலெடுத்தது ஆஸ்திரேலிய அணி. இது பன்னாட்டு ஊடகங்களால் கவனிக்கப்பட்டு விடயம் பெரிதுபடுத்தப்பட்டது. இதையடுத்து சதித் திட்டம் தீட்டியவரான வோர்ணர், அதை நடைமுறைப்டுத்திய பான்குரொப்ட், அதை அனுமதித்த சிமித் மூவருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தடை விதித்தது. வோர்ணர் சிமித்துக்கு தலா ஓர் ஆண்டும் பான்குரொப்ட்டுக்கு 9 மாதங்களும் தடை விதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பு...



படைப்பாற்றலே உன் புகலிடம் எங்கே?
நடைபோடுமே என் பாதச் சுவடுகள் அங்கே...

உந்தன் வரையறை தேடி அலைந்தேன்.
இணையத்தின் கரைவரை ஓடித் தொலைந்தேன்.
கிட்டவில்லை... கிட்டியும் எட்டவில்லை.

சிந்தித்தேன்...
வந்துதித்தாய் என் சிந்தையில்
செதுக்கினேன்...
சிற்பியாய் என் சித்தத்தில்

படிப்பாற்றல் மட்டும் போதுமா?
படிப்பாற்றலோடு புதுப்படைப்புகள்
படைக்க வேண்டும் என்ற
துடிப்பாற்றல் வேண்டும்
படைப்பாற்றலுக்கு.

தனித்தனியாய் சிந்தித்தல் படைப்பாற்றலா?
தனித்துவமாய் சிந்தித்தலே படைப்பாற்றல்.
அறிவுப்பூர்வமாய் சிந்தித்தல் படைப்பாற்றலா?

அறிவுக் கோட்டையின் உள்ளே
அமைதியாய் அமர்ந்து
பூட்டைப் போட்டுக் கொள்வதா
படைப்பாற்றல்?

அறியாமைக் கோட்பாடுகளின்
பூட்டுகளை உடைத்தெறிந்து
ஆர்த்தெழுவதே படைப்பாற்றல்.

கற்பித்தலில் வருவதன்று படைப்பாற்றல்.
கற்றலோடு கற்பனையை
வளர்ப்பதில் வருவதே படைப்பாற்றல்.

கல்வியில் பிறப்பது கற்பனை
கற்பனையில் பிறப்பது படைப்பாற்றல்
படைப்பாற்றலில் பிறப்பது புதுமை.

உலகில் புதுமைகளின்றி
உவகைகள் இல்லை.

இலக்கியத்தில் புதுமை புதுக்கவிதை
இருட்டில் புதுமை மின்விளக்கு
வானில் புதுமை வானூர்தி
வாழ்வில் புதுமை அறிவியல் வளர்ச்சி
பட்டினில் புதுமை பசுமைப் புரட்சி
பார்ப்பதில் புதுமை தொலைக்காட்சி
கேட்பதில் புதுமை வானொலி
தகவல் தொழில்நுட்பத்தில் புதுமை தொலைபேசி

படைப்பாற்றலில்
புதுப்படைப்பு எதுவாயினும்
புதுமைதான்.

புத்தியைத் தீட்டி
பழமைகள் புரட்டி
புதுமுறைகள் புகுத்தி
மனிதப் பதுமைகள்
படைக்கும் பிரம்மனைப்போலே
புதுமைகள் படைப்போம்...
வெறுமைகள் துடைப்போம்.

கவிதை

மாதவி உமாசுதசர்மா

## சொற்சிலம்பம் போட்டி இல: 551

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | ■ | |
| ■ | ■ | 22 | | | | | |

**அனுப்புபவர் பெயர்:..............................................**
**முழுமையான தபால் விலாசம்: ..........................**
**.....................................................**
**கையொப்பம்:.................................................**

### இடமிருந்து வலம்

1. சீதையை மணக்க இராமன் முறித்த வில்
5. பெரியோர் தரும் வாழ்த்து
7. நஞ்சு
8. கோமாதாவைக் கொல்வதை இப்படிச் சொல்வர்
10. கனிதல்
11. புகழ், கீர்த்தி, பெருமைக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு
13. சாப்பிடு
15. மூப்புக்கு முன்னறிவிப்பது செய்வது
16. தூங்கு
17. முகத்துக்கு நேரே செய்யும் உபகாரம்
19. இடம்
20. குழு
21. போன்று
22. (கடவுள்)சிலை

### மேலிருந்து கீழ்

1. ஓர் மிருகம்
2. ஒரு திசை
3. கணவன்- மனைவி
4. அபிமன்யுவின் தாய்
5. அவா
6. பிரேதம் தீ மூட்ட அடுக்கியுள்ள விறகுக்கும்பி
9. பிதாவின் மகன்
12. இரப்பவன்
14. சமூகத்தில் தனி ஆளுக்கு அடுத்த தனி அலகு
15. நல்ல
16. சில அல்ல
17. மலையின் உச்சி
18. இல்லாள்
19. விடிய

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 548 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) விகடகவி (5) உப (7) வடு (8) வழிபடல் (10) சாம்பார் (12) தின் (13) சதம் (14) பாவி (16) கனல் (17)கடுகு (18) உரம் (19) உரு (20) தண் (21) கரும்பு (23) விடிவெள்ளி (24) கைமை

**மேலிருந்து கீழ்**
(1) விவசாயி (2) கடும் (3) கவர்தல் (4) விழி (5) உடன்பாடு (6) பல் (9) பதி (11) பாசனம் (15) விகுதி (16) கரண்டி (17) கரும் (18) உதவி (19) உருளி (21) கள் (22) புகை

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.551**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (02.01.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 549இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**மயில்வாகனம் சிவராசா,**
கரப்புக்குத்தி,
கனகராயன்குளம்.

**2 ஆம் பரிசு**
**ஶ்ரீஸ்கந்தராஜா லக்ஷன்,**
ஆண்டு 11 D,
யாழ். மத்திய கல்லூரி.

**3 ஆம் பரிசு**
**தேவிகா பத்மராஜா,**
மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.

**4 ஆம் பரிசு**
**திருமதி சி.மனோகரி,**
இல4, 1ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**த.கணேசன்,**
மே/பா. பொ.கதிர்காமநாதன்,
வாரப்பற்று, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி ப.செல்லத்துரை,**
புலோலி தென்மேற்கு,
புலோலி.

**செல்வி. ஆர்த்திகா,**
சுவேந்திரன், தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

**அ.அமிர்தநாயகம்,**
சாந்தசோலை,
அல்வாய்.

சொற்சிலம்பம் போட்டி இல.551 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.01.2018ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 548 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனம்




கிரிக்கெட்டில் இந்தியாவை வெல்ல வைத்து அப்பாவின் கண்ணீரைத் துடைப்பேன் என்ற இலட்சியத்துடன் போராடும் மகளின் கதையே 'கனா' என்று இந்தப் படத்தின் கதையை ஒரு வரியிலும் சொல்லலாம்.

**கதை**

குளித்தலை என்கிற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி முருகேசனுக்கு (சத்யராஜ்) கிரிக்கெட் என்றால் உயிர். எந்த வேலை இருந்தாலும் அப்படியே போட்டு விட்டுத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட்டைப் பார்க்கப் புறப்பட்டு விடுவார். ஒரு நாள் மகளுடன் சேர்ந்து கிரிக்கெட் பார்க்கும்போது இந்திய அணி தோற்றுவிடுவதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அழுகிறார். சுமார் 10 வயதில் இருக்கும் அவரது மகள் கவுசல்யா (ஐஸ்வர்யா ராஜேஷ்) அப்பாவைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காகக் கிரிக்கெட் கற்றுக்கொள்கிறார். ஆனால், அவர் கிரிக்கெட் விளையாடுவதற்குத் தடைகள் மட்டுமே சூழ்கின்றன. தடைகளை அவர் தாண்டினாரா? இந்திய அணியில் இடம் பிடிக்க முடிந்ததா? அப்பாவை சந்தோஷப்படுத்த முடிந்ததா? எனப் பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**பாத்திரங்கள்**

பாடலாசிரியர், நடிகர் அருண்ராஜா காமராஜ் கனா படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகம் ஆகியிருக்கிறார். முழுப் படத்தையும் ஐஸ்வர்யா ராஜேஷ் தாங்கி நிற்கிறார். வெகுளிப் பெண்ணாக இருந்து கொண்டு கிரிக்கெட் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்தும் இடங்களிலும், வறுமை நிலையிலும் அம்மாவின் எதிர்ப்பை மீறி அடம் பிடிக்கும் தருணங்களிலும் அட்டகாசமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். ஒரு காட்சியில் கூட மிகைத்தன்மை எட்டிப்பார்க்காத அளவுக்குப் பாத்திரமாகத்துக்குத் தேவையான நிறைவான, இயல்பான நடிப்பை வழங்கியுள்ளார். கதாநாயகியை மையமாகக் கொண்ட படம் என்றால் இனி ஐஸ்வர்யா ராஜேஷின் பெயரும் தவறவிடக்கூடாத பட்டியலில் இடம்பெறும் என்று நம்பலாம். விவசா யத்தின் வீழ்ச்சியைக் கண்டு நொந்துபோகும் சத்யராஜ் தன்னுடைய மகளை ஆளாக்கிப் பார்க்கும் கனவுகளைச் சுமக்கும் போது பொறுப்பான தந்தையைக் கண்முன் நிறுத்துகி றார். ஆண்களுடன் விளையாடச் செல்லும் மகளைக் கண்டிக்கும் கண்டிப்பான அம்மாவாக ரமாவின் நடிப்புப் பாராட்டத்தக்கது. மகளின் தடைக்கல்லையே படிக்கல்லாக மாற்றிப் போடும்போது அவர் பாராட்டு பெறுகிறார். சோர்ந்துபோன சத்யராஜை மிகச் சாமர்த்தியமாகத் தேற்றி நம்பிக்கையூட்டும் கதாபாத்திரத்தில் இளவரசு இதயத்தில் இடம் பிடிக்கிறார். சச்சின் டெண்டுல்கராக வரும் சவரி முத்துவும் ஆண்டனி பாக்யராஜும் நகைச்சுவை என்ற பெயரில் அலட்டிக் கொள்கிறார்கள். முனீஸ்காந்த் ராம்தாஸ் பதற்றம், பரபரப்பு என்ற பெயரில் வெளிக்காட்டும் உணர்வுகள் படத்துக்கு அந்நியமே. தன்னம்பிக்கையை விதைக்கும் பயிற்சியாளராக சிவகார்த்திகேயன் சிறப்புத் தோற்றத்தில் நடித்திருக்கிறார். அவரின் கனவும் அதற்கான காரணங்களும் படத்துக்கு வலுச் சேர்க்கின்றன.

**காட்சித்தொகுப்பு, இசை, ஒளிப்பதிவு**

தினேஷ் கிருஷ்ணன் நிலம் சூழ் கிராமத்தையும், கிரிக்கெட் விளையாட்டையும் மிகச் சிறப்பாகப் படம் பிடித்துள்ளார். திபு நினன் தாமஸ் இசையில் பாடல்கள் படத்தின் கதையோட்டத்தில் சேர்ந்து பயணிக்கின்றன. பின்னணி இசையில் காட்சிகளுக்கு உயிரூட்டி இருக்கிறார் திபு நினன் தோமஸ்.

**பலம் -பலவீனம்**

நடுத்தரக் குடும்பத்திலிருந்து ஒரு பெண் கிரிக்கெட் விளையாடப் போனால் ஊர் என்ன பேசும், அக்கம் பக்கத்தினர் என்ன பேசுவார்கள். அதுவும் ஆண்களுடன் ஒரு பெண் விளையாடினால் சமூகத்திலிருக்கும் அந்த நாலு பேர் என்ன சொல்வார்கள் போன்றவற்றை யதார்த்தம் மீறாமல் காட்சிப்படுத்தி இருக்கிறார் இயக்குநர் அருண்ராஜா காமராஜ். விளையாட்டில் சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்குப் பெற்றோரால் ஏற்படும் தடைகள், குறிப்பாக அம்மாவால் ஏற்படும் எதிர்ப்புகள், சுதந்திரம் இல்லாமல் கட்டுப்படுத்தப்படும் சூழல், அந்த வேலிகளை உடைக்க செய்ய வேண்டிய வழிமுறைகள் என அனைத்தையும் மிக இலாவகமாகப் பதிவு செய்திருக்கிறார். கிரிக்கெட் - விவசாயம் என்ற இரண்டு நேர்க்கோடுகளில் கதை செல்கிறது. இதனால் படத்தின் மையம் எது என்ற குழப்பம் வந்துவிடுகிறது. அந்தக் குழப்பம் இயக்குநருக்கும் இருப்பதால் எதற்கு முக்கியத்துவம் அளிப்பது என்று தெரியாமல் திரைக்கதை தடுமாறுகிறது. ஒருவழியாகச் சுதாரித்து கிரிக்கெட்டை மையப்பொருளாகக் கொண்டு விவசாயத்தை துணைப்பொருளாகத் தொடர்ந்தாலும் சில காட்சிகள் படத்தைப் பலவீனப்படுத்துகின்றன. இதற்கிடையே சிவகார்த்திகேயன் வந்ததும் படம் அவர் பக்கம் திரும்பிவிடுகிறது. பயிற்சியாளருக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் இது கிரிக்கெட் வீராங்கனைக்கான படமா? கிரிக்கெட் பயிற்சியாளருக்கான படமா? என்ற சந்தேகம் எழுந்துவிடுகிறது. இப்படிச் சில பலவீனங்களுடன் பொழுதுபோக்கத்தக்க ஒரு சினிமாவாகத் தென்னிந்தியச் சினிமாக்க ளுக்குள் கனாவும் இடம்பிடிக்கிறது.

> “ சிவகார்த்திகேயன் வந்ததும் படம் அவர் பக்கம் திரும்பிவிடுகிறது. பயிற்சியாளருக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் இது கிரிக்கெட் வீராங்கனைக்கான படமா? கிரிக்கெட் பயிற்சியாளருக்கான படமா? என்ற சந்தேகம் எழுந்துவிடுகிறது. இப்படிச் சில பலவீனங்களுடன் பொழுது போக்கத்தக்க ஒரு சினிமாவாகக் தென்னிந்தியச் சினிமாக்க ளுக்குள் கனாவும் இடம்பிடிக்கிறது.



**கவிதை**

## விண் மண்ணை முத்தமிட்ட நாள்...

அபிர்ராஜன் அன்ரனி பீற்றர்

உலகை இறைவன் படைத்தபோது
தன்னுருவின் சாயலில் மனிதனைப் படைத்தான்
அலகை செய்த சூழ்ச்சியில் அகப்பட்டு
உண்ணாதே என்ற கனியை உண்டான்
கலகம் செய்யவில்லை கட்டளைதனை மீறினான்
கடவுள் அன்பை இழந்த பாவியானான்
காலம் நிறைவினில் கன்னிமரி மைந்தனாய்
உலகினில் பிறந்த மீட்பரே இயேசு

விண்வந்து மண்ணை முத்தமிட்ட நாள்
விமலன் இயேசுவின் பிறந்தநாள்
உன்னதங் களிலே தேவனுக்கு மகிமை
உலகினில் நன்மனத்தோர்க்கு அமைதி யென்று
பண்கொண்டு பாடியே வாழ்த்திசை முழங்கினர்
விண்ணாளும் வேந்தனின் காவல் தூதர்கள்
மன்னவனாய்ப் பிறந்த பாலகன் இயேசுவை
மன்னரும் ஆயரும் பணிந்து வணங்கினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நித்திய சுகம்

404

உடலே கோயில்

# டெங்கு நோய்த் தொற்றிலிருந்து விடுபடுதல்!

## ஆலோசனை வழிகாட்டலும் சிகிச்சை முறையும்



மருத்துவர் பி.யோண்சன்

எம்மிடையே மிக விரைவாகப் பரவி வருகின்றநோய்வகையாக டெங்குக்காய்ச்சல்விளங்குகிறது. நோய்ப் பரம்பலின் வழி பல உயிர்களையும் டெங்குக் காய்ச்சல்காவுகொண்டுள்ளது. டெங்குக் காய்ச்சல் 'டெங்கு வைரஸ்' எனப்படுகின்ற 'பிளாபி வைரஸ்' இனத்தைச் சேர்ந்த ஒரு வகையான வைரஸ் கிருமியால்ஏற்படுவதாகும். இந்தவைரசில் முதன்மையான நான்கு வகை பிறபொருள்களைக் கொண்ட வைரஸ் வகைகளும் உள்ளன.

இந்த நோய்க்குரிய வைரஸ் முக்கியமாக பகல் வேளையில் கடிக்கின்ற 'Adesac gypti' என்ற ஒரு வகை நுளம்பால், ஒரு நோயுள்ள மனிதனில் இருந்து இன்னொரு சுகதேகிக்கு தொற்றை ஏற்படுத்துகின்றது. பொதுவாக டெங்குக் காய்ச்சல் ஏற்பட்ட ஒரு நோயாளி, அவருக்குக் காய்ச்சல் தொடங்கி முதல் மூன்று நாள்களுக்கு அவரின் குருதியில் உள்ள வைரஸ் கிருமி அவருக்குக் கடிக்கும் நுளம்பால் உள்ளெடுக்கப்படுகிறது. வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு நோய்க்குரிய அறிகுறிகள் 5 தொடக்கம் 6 நாள்களுள் தென்படும்.

**நோய் அறிகுறி**

டெங்குக் காய்ச்சலை முக்கியமாக இரண்டு வகைப்படுத்தலாம்.

•சாதாரண டெங்கு காய்ச்சல்.
•குருதிப் பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல்.

இந்த நோய்க்குரிய அறிகுறிகளாக, "உயர் காய்ச்சல், சோம்பல், தலையிடி, முகம் சிவந்து இருத்தல், கண்ணின் பின்புறம் நோ, கண் மடலின் உட்புறம் சிவந்துஇருத்தல், உடல்நோ, குமட்டல், வாந்தி, வாய்காய்தல்"போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். சில சந்தர்ப்பங்களில் நிணநீர்க் கணுக்களில் வீக்கம், வயிற்றோட்டம், தலைசுற்று போன்றனவும் ஏற்படலாம்.

குருதிப் பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சலில் முக்கியமாக வயிற்றுநோ, சிவப்பு நிறப் புள்ளிகள், உடலிலும், வாயின் உட்புறத்திலும், கண்மடலின் உட்புறத்திலும் ஏற்படுகிறது. சிலருக்கு குருதியாகவாந்தியோ, கோப்பிநிறவாந்தியோ அல்லது கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், குருதி அமுக்கம் குறைதல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன. இவை மிகவும் ஆபத்தான நோய் அறிகுறிகள் எனக் கருதப்படுகின்றன.

சாதாரணமாக டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டஒருவருக்கு3தொடக்கம்5நாள்கள் வரைகாய்ச்சல்நீடிக்கும். பின்னர்காய்ச்சல் குறைவடைகின்ற போது நோய்க்குரிய அறிகுறிகளும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. எனவே காய்ச்சல் குறைந்த பின்னரும் சோம்பல், சாப்பாட்டுக்கு மனம் இன்மை, தலைச்சுற்று, வயிற்றுநோ என்பன தொடர்ந்தும் இருந்தால் அவையும் ஆபத்தான அறிகுறிகளாகவே கருதப்படும்.

**பிற பரிசோதனைகள்!**

காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாள்களின் பின்பும் காய்ச்சல் தொடருமாயின் அல்லது மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் ஏதாவது ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரின் உதவியை நாடி குருதிப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம்டெங்குநோயைஏனைய வைரஸ் நோய்களில் இருந்து வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடிவதுடன் அவற்றுக்கான உரிய சிகிச்சை முறைகளையும் நோய்த் தொற்று அதிகப்படுவதற்கு முன்னதாக ஆரம்பிக்கலாம்.

குருதிப்பரிசோதனையில்முதலாவதாக 'முழுக் குருதி ஆய்வு' (Full Blood Count) என்ற பரிசோதனை செய்யப்படுகிறது. இதன்போது டெங்கு நோய்க்குரிய மாற்றங்களாகவெண்குருதிச்சிறுதுணிக்கைகளின் அளவு முதலில் குறைவடையும். பின்னர் குருதியில் உள்ள குருதிச் சிறுதட்டுக்கள் குறைவடையும். அதேவேளையில் 'பி.சி.வி' (PCV) என்ற அளவும் உயர்வடையும். இந்த மாற்றங்களைக் கொண்டே டெங்கு நோய்த் தொற்று உண்டென்பதுபிரித்து அறியப்படுகிறது. டெங்குக் காய்ச்சல் என்பதை சரியாக உறுதிப்படுத்தப்பலபரிசோதனைநடைமுறைகள் உள்ளன. அவை வருமாறு.

•டெங்கு Antibody test.
•டெங்கு Virus PCR test.

இந்தப் பரிசோதனைக்கான செலவுகள் அதிகம் என்பதால் தேவை ஏற்படும் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே மருத்துவர்கள் மேற்படி பரிசோதனை நடைமுறைகளை மேற்கொள்வர்.

**சிகிச்சை முறைமை!**

இந்த நோய்த் தொற்றுக்கு உட்பட்டவர்களுக்கு எந்தவிதமான விசேட மருந்துகளும்இல்லாதபோதிலும்நோயாளியை மிகுந்த அவதானிப்புக்குஉட்படுத்துவர். அவர் குடிக்கும் தண்ணீரின் அளவையும் வெளியேறும் சிறுநீரின் அளவையும் அவதானிக்க வேண்டும்.

சாதாரணமானடெங்குக்காய்ச்சல்மேற்குறிப்பிட்ட மருத்துவமுறைகளால் சரிசெய்யப்படுகின்றபோதிலும், சிலநோயாளர்கள்குருதிப்பெருக்குடன்கூடியநோய் நிலைக்குச் செல்கின்றனர். இவர்களில் சிலரே உயிரிழந்தும் போகின்றனர்.

இந்த அதி தீவிர நிலையை அடையும் நோயாளர்களுக்கு விசேட மருத்துவக் கவனிப்பும் நீண்ட அவதானமும் தேவைப்படும். சில வேளைகளில் நோயின் தீவிரத் தன்மையைக் கருத்தில் கொண்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளிலும் நோயர்கள் வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர்.

**நோயாளர்கள் கவனிக்க வேண்டியவை!**

நோயாளர்கள் விடுதியில் இருக்கும்போது மருத்துவர்களின் அறிவுரைக்கு ஏற்றபடி ஒழுங்காக குடிக்கும் பானவகைகளின் அளவையும் வெளியேறும் சிறுநீரின் அளவையும் அளந்து, மருத்துவருக்கோ அல்லது தாதியருக்கோ அது குறித்துத் தெரியப்படுத்த வேண்டும்.

விடுதியில் பொதுவாக 'ஜீவனி' அருந்தக் கொடுக்கப்படுகிறது. விடுதியில்உள்ளோரில் நீரிழிவு நோய் இல்லாதவர்கள் தண்ணீர்அருந்துவதைவிடவும்'ஜீவனி' அருந்துவது நன்று. நீரிழிவு நோயாளர்களுக்கு கஞ்சி, சூப் போன்ற கலவை உணவுகள் உகந்தவை. விடுதியில் இருக்கும்போது எந்தவிதமான சிவப்பு நிறப் பானங்களையும் அருந்தக் கொடுக்க வேண்டாம்.

நோய்நிலை குறைவடையும்போது, விடுதியில் இருந்து நீங்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டால் விசேடமாகக் கவனிக்க வேண்டிய சில செயல்நிலைகள் உள்ளன. அவை வருமாறு,

•நீங்கள்வீடுசென்றுபோதுமானஅளவு (3 தொடக்கம் 4 நாள்கள்) ஓய்வு எடுக்க வேண்டும். ஏனெனில் சில நோயாளார்களுக்கு 'myocarduns' என்ற நோய் நிலை இதயத்திலும் சிறிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு விசேடமான மருந்துகள் தேவையில்லை. ஓய்வு எடுத்தாலே போதுமானது.
•நோயாளர்கள் விடுதியில் தங்கியுள்ள போது கவனிக்க வேண்டிய விடயங்களில்தவறாமல்உங்களுடைய கட்டிலுக்குரிய நுளம்பு வலையை உபயோகிப்பதன் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

**நோய்த் தடுப்பு முறைகள்!**

டெங்கு நோய் ஏற்படுவதிலிருந்து தப்பிப்பதற்கு இலகுவான முறைகளைக் கைக்கொள்ளலாம். குறிப்பாக, நுளம்புக்கடி யிலிருந்து விடுபட உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நோய்க்குரிய வைரஸ் கிருமித் தொற்று ஏற்படுவதைத் தடுக்கலாம். எமது வீட்டையும் சுற்றுப்பு றச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நுளம்புகள் பெருக்கமடைவதைத் தடுக்கலாம்.

முக்கியதாக நீர் தேங்கி நிற்கும் வாய்க்கால்கள், நீர் தேங்கும் சிறிய பாத்திரங்கள், குரும்பைகள், பழைய ரயர்கள் போன்றவற்றை அகற்றிச் சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலம் நோய் பரவுவதைக் குறைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து ஆண்டுகளை தொட்ட கிளசிக்கா சிறுவர் கதம்பம்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இலங்கையில் பல வித மான மனிதநேயப் பணி களில் ஈடுபட்டு வரும் கிள ரீசியன் சபையின் ஒரு அங்கமான கிளசிக்கா என அழைக்கப்படும் கிளா ரட் சிறுவர் கதம்பம் 10 ஆண்டுகளாக தன் பணியில் ஈடுபடுவது பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது. இந்த ஆக்கத்துக் கான தகவல்களை கிளாரட் சிறுவர் கதம்பத்தின் இயக்குனர் மில்பர் வாஸ் சி.எம்.எவ். அடிகளார் தந்துதவினார்.

**1991ஆம் ஆண்டில் கிளரீசியன் சபை இலங்கைத் தீவில் நிறுவப்பட்டமை**

தந்தை கிளாரட் உலகின் நான்கு திசைக ளிலும் பயணிக்கா விட்டாலும் அவர் பற்றவைத்த அன்புத்தீ இன்றும் பெரும் பிளம்பாக அவரது மறைபணியாளர்கள் மூலம் ஐந்து கண்டங்களைச் சென்ற டைந்து 65 நாடுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் மூலமாக பற்றியெரிந்து கொண்டிருக்கின்றது. இலங்கையில் இந்தச் சபை வேரூன்றி வளர்வதற்கு முக்கிய காரணமாக இருந்தோர் ஜேர்மனி மற்றும் இந்தியா வைச் சேர்ந்த கிளரீசியன் குருக்களே ஆவர்.

1976ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜேர் மன் கிளரீசிய குருக்களின் முயற்சியால் இந்தியாவில் 2 கிளரீசிய மாகாணங்கள் உருவாகியிருந்தன. இங்கு குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவர் ஜேர்மன் நாட்டை சேர்ந்த மறைந்த அருட்தந்தை டீன்பேகர் ஆவார். இவர் இந்தியாவில் பெங்ளூர் கிளாரட் குருமட அதிபராக இருந்தபோது இலங்கைத் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த இரு அருட் சகோதரிகள் தமது ஆன்மிக பயிற்சிக ளுக்காக தந்தையிடம் சென்று வரும் போது அவர் ஏன் உங்களால் நல்ல மாணவர்களை இலங்கையில் இருந்து அனுப்பமுடியாது? என்று அடிக்கடி கேட் பது உண்டு. அருட்தந்தையின் முயற்சி அத்துடன் நின்றுவிடாமல் 1978ஆம் ஆண்டு இலங்கைக்கான முதலாவது கிளரீசிய தொடர்பாளராக இந்தியா வைச் சேர்ந்த அருட்தந்தை சிறியக் ஞாயர்குலம் அடிகளாரை யாழ்ப்பாணத் துக்கு அனுப்பி வைத்தார்.

யாழ்ப்பாணம் வந்தடைந்த அருட் தந்தை சிறியக் அப்போதைய ஆய ராக இருந்த தியோகுப்பிள்ளை ஆண்ட கையைச் சந்தித்தவேளை உரோமை யில் திருச்சபையின் சட்டத்தில் தன் னைப் பயிற்றுவித்த கிளரீசியன் குரு பேராசிரியர்களை நன்றியோடு நினைத்து யாழ்ப்பாணத்தில் இவர்களது பணிக்கான தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். மேலும் காலம் சென்ற அருட்தந்தை செல்வராஜா தற்போதைய ஓய்வு நிலை ஆயர் கிங்ஸ்லிசுவாம் பிள்ளை ஆண்டகை மற்றும் திருக் குடும்பக் கன்னியர் சபை சகோதரி அஞ் சலினா ஆகியோரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்தில் இருந்து சில மாண வர்கள் குருத்துவ உருவாக்கல் பயிற்சி களைப் பெறுவதற்காக தமிழ்நாட்டில் உள்ள கருமாத்தூர் கிளரீசியன் குரும டத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் இரு வர் குருத்துவப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து 1991ஆம் ஆண்டு தாய் மண் திரும்பினர். இவர்களே இலங்கைக் கிளரீசியன் சபையின் முதல் முத்துக்களா வர். அருட்தந்தை அல்பிரட் கிருபா னந் தன் 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி கொழும்பு ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகையால் திருநிலைப் படுத்தப்பட்டார். மற்றும் அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் யாழ்ப்பா ணத்தில் 1991ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் திகதி யாழ்ப்பாண மறைமா வட்ட ஆயர் தியோகுபிள்ளை ஆண்ட கையால் குருவாக திருநிலைப் படுத்தப் பட்டார். இவர்களது முதல் பணித்தளங் களாக கொழும்பு கொட்டாஞ்சேனை பேராலய பங்கு மற்றும் கண்டி மறை மாவட்டத்தின தலவாக்கல பங்குகள் அமைந்திருந்தன.

1980ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் உள்ள இல்லம் வாங் கப்பட்டாலும் போர் மேகங்கள் அதனு டைய சுயமான இயக்கத்தை பெரிதும் பாதித்தன. 1992ஆம் ஆண்டு வைபவ ரீதியாக முதலாவது இல்லம் றாகம வெலிசறையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த இல்லமே தற்போதைய கிளரேசி யன் வெளியீட்டகமாக இயங்கி வருகின் றது. இரண்டாவது இல்லம் 1994ஆம் ஆண்டில் கண்டி குருதெனியாவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கிளரேசி யன் மறை பணியாளர்;களைப் பயிற்று விக்கும் பெரிய குருமடமாகத் திகழ்கிறது. மேலும் சிறிய குருமடமானது நீர்கொ ழும்பு கட்டுவ பிரதேசத்திலும் நவசந்நி யாச பயிற்சி இல்லம் குருநாகல் உகுமி யவிலும் அமைந்துள்ளன.

**வார்த்தையின் பணியாளர்கள்**

இலங்கையில் 'வார்த்தையின் பணியா ளர்கள்' என தம்மை அடையாளப் படுத் திக்கொள்ளும் இவர்களினால் மேற் கொள்ளப்படும் பணிகளாக குருத் துவ உருவாக்கல் பயிற்சிகள், சாதக மான அனைத்து வளங்களையும் பயன்படுத்தி நற்செய்தி அறிவிப்புப்பணி, ஏழை மாணவர்களுக்கான கல்வி ஊக் குவிப்புகள், குடும்ப ஆற்றுப்படுத்தல்கள், வெளியீட்டகத்தினூடாக சிறந்த ஆன்மிகநூல்களையும் விவிலிய நாட் குறிப்பேடுகளையும் மக்களுக்கு வழங் குதல், மேலும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், இளைஞர்களுக்கான தலை மைத்துவ பயிற்சிகளை வழங்கி அவர் களை தகைமை உள்ளவர் ஆக்குதல் போன்றவை அமை கின்றன.




காலத்தின் தேவையினை சரியாக கண்டு கொண்ட இவர்கள் சிறப் புத் தேவையுடையவர்க ளுக்கான மையம் ஒன்றை வவுனியா பம்பைமடுவில் 'வரோட்' எனும் பெய ரில் மன்னாரின் ஓய்வு பெற்ற ஆயர் இரா யப்புஜோசப் ஆண்டகை யின் ஆசியோடு ஆரம் பித்து போரால் பாதிக்கப் பட்டவர்களின் உடல் நலத்தை யும், செயற்பாடுகளையும் மேம்படுத் ததும் பயிற்சிகளை வழங்குவதோடு அங்கிருந்து சுயமாக இயங்கத் தொடங் குவோர் தொழில் சார் தகைமைகளோடு மீளவும் தமது குடும்பங்க ளோடும், சமூகத்தோடும் இணைக்கப்பட வலு வூட்டி வருகின்றனர். அத்துடன் இலங் கையில் இவர்கள் கொழும்பு ஹல்ட்ஸ் ரொப், பதுளை பல்லேகட்டுவ, மட்டக்க ளப்பு அலிகம்பை போன்ற மூன்று பங் குகளில் பணியாற்றிவருகின்றனர்.

இவ்வாறு 1991ஆம் ஆண்டு சிறுதுளிர் விட ஆரம்பித்த கிளரீசியன் சபை 25 வருடங்களில் 34 குருக்களையும் தற் போது 13 அருட்சகோதரர்களையும் 11 நவசன்னியாச சகோதரர்களையும் 40 சிறிய குருமட மாணவர்களையும் கொண்டு [illegible] விழுதுகளாக வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகின்றது.

**சிறார்களை மதிக்க வேண்டியது சமூகத்தின் தலையாயக் கடமை**

சிறார்களை மாபெரும் பொக்கிசங் களாக மதிக்க வேண்டியது ஒவ் வொரு சமூதாயத்தினதும் தலை யாய கடமையாகும் என்பதை மையப்படுத்தியே ஐ.நா பொதுச் சபையினால் 1989ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிறுவர் உரிமை சாசனத்தை 1991 ஆம் ஆண்டில் இலங்கை அரசு உறு திப்படுத்தியது. வளர்ந்தவர்க ளுக்கு நாம் எந்தளவு முக்கி யத்து வம் கொடுத்து மதிக்கின்றோமோ அவ்வாறே சிறார்களும் நடத்தப் பட வேண்டுமென்பது நியதி.

இதன் உண்மை தன்மையினை மையப்படுத்தியே எலன்கீ என்பவர் 20ஆம் நூற்றாண்டை சிறார்களின் நூற்றாண்டு என அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி 'சிறுவர் நூற்றாண்டு' எனும் நூலையும் வெளியிட்டார.; சிறு வர்கள் தங்களது உரிமைக்காகப் போராட முடியாது ஆகவே குறித்த சமூ கம்தான் அவர்களுக்குறிய உரிமைக் குரலைக் கொடுக்க முடியும். இதன் தாக் கத்தின் பின்னரே பலநாடுகளில்; சிறுவர் களுக்கு முன்பள்ளிகல்வி, பாதுகாப்பு மற்றும் சிறுவர் நலன் பேண் செயற்திட் டங்கள் என்ற சகல அபிவிருத்தி செயற் பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. குறிப் பாக பன்னாட்டு சிறுவர் உரிமை சமவா யத்தில் சிறுவர்களுக்கான முதன்மை உரிமைகளாக பாதுகாப்பு, பங்களிப்பு, உயிர்வாழ்தல், மேம்பாடு ஆகிய நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. மேற்குறித்த இந்த நான்கு முதன்மை உரிமைகளும் கிடைக்கப்பெறாத அல் லது குறைவாகக் கிடைக்கின்ற சிறார்கள் பாதிப்படைந்த சிறார்களாகக் கருதப்படு கின்றனர். இவ்வாறு பாதிப்படைந்த சிறார்களுக்கு கரம் கொடுப்பதற்கென பல நாடுகளிலும் பல அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. அந்த வகை யில் உலகின் பல நாடுகளிலும் பல்வகை மனித நேயப் பணி களில் கத்தோலிக்க திருச்ச பையினுடைய கிளரீசியன் சபையா னது செயற்பட்டு வரு கின்றது. இவ்வாறு பல விதமான மனிதநே யப் பணிகளில் ஈடு பட்டுவரும் கிளரீசியன் சபையின் ஒரு அங்கம் தான் சிறுவர் நலனுக் காக செயற்பட்டு வரும் கிளாரட் சிறுவர் கதம்பம் என்பதாகும்.

**சுனாமிக்குப் பிற்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

2004ஆம் ஆண்டு, சுனாமி இடருக்கு பிற்பட்ட காலத்தில் இயற்கை இடரால்; உடல், உள, ஆன்மிக அளவில் பாதிக் கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலம் கேள் விக் குறியாக்கப்பட்டது. தொடர்ந்து இனப்போர் சிறுவர்களின் வளர்ச்சியை முழுமையாக பாதிப்புக்குள்ளாக்கியி ருந்து. இத்தகைய இக்கட்டான சமூக சூழலில், சிறுவர்களின் எதிர்கால வாழ் வையும் அவர்களது முழுமையான வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு கிளறீசியன் துறவற சபை எவ்வாறு ஒரு சமூகமாக பதிலளிக்கலாம் என்கின்ற கேள்விக்கான பதிலாக அமைந்தது தான் 'கிளாரட் சிறுவர் கதம்பம்' என்பது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு சிறு கிளறீசிய முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டாலும் இன்றைக்கு இலங்கையில் யாழ்ப்பாணத்தை தலைமை நிலையமாகக் கொண்டு வவு னியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மற் றும் மன்னார் போன்ற ஏனைய மாவட் டங்களிலும் கிளாரட் சிறுவர் கதம்பத்தின் நிகழ்ச்சி திட்டப் பணிகள் விரிவடைந்து காணப்படுகின்றமை இதன் சிறப்பம்ச மாகும். காலத்தின் தேவைகளைக் கருத் தில் கொண்டு 'கிளாரட் சிறுவர் கதம்பம்' சிறார்களின் முன்னேற்றத்திற்காக 'உடல், உள, ஆன்மிக வளர்ச்சிப் பாதை யில்' எனும் விருது வாக்கினை இலக் காக முன் நிறுத்தி பல்வேறுப்பட்ட செயற் பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிகழ்ச்சிச் திட்டத்தின் வளர்ச்சியில் இயக்குனர்களாக கடமையாற்றியவர்க ளின் விபரங்களை அடையாளப்படுத்து வது மிக் முக்கியமானதொரு விடயமாக உள்ளது. அதனடிப்படையில் அருட் தந்தை அல்பேட் ஜோ.அருள்ராஜா அருட்தந்தை வரதன் குலாஸ் அருட் தந்தை மில்பர் வாஸ் அருட்தந்தை வின்சன் குறூஸ் அருட்தந்தை மில்பர் வாஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்களாவர்.

மேலும் கிளசிக்காவின் மூலம் உடல், உள, ஆன்மிக, உருவாக்குதலுக்கு உட் பட்டு தம் வாழ்வை சமூகத்திற்கு ஏற்ற முறையில் வளப்படுத்திக் கொள்வதற் காக பல்வேறுப்பட்ட நிகழ்ச்சி திட்டங்கள் ஒரு யாப்பு போல நெறிப்படுத்தப்பட்டு இன்றுவரை பல செயற்பாடுகள் மேம்ப டுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக சிறு வர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட் டறை நடத்துதல், பாடசாலை மாணவர் களுக்கான கருத்தமர்வு, மாலை நேரக் கற்றல் கற்பித்தல் செயற்பாடு, கல்விக் கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், இளைஞர்களுக்கான வதிவிட மற்றும் ஒருநாள் பயிற்சிப்பட்டறை, தனிநபர் மற்றும் குழு ஆற்றுப்படுத்தல்கள், வன் முறையற்ற தொடர்பாடல் கருத்தமர்வு, கட்டிளமைப் பருவ விழிப்புணர்வு, அதிர்ச்சி ஆற்றுப்படுத்தல், ஓவிய மற் றும் விளையாட்டு சிகிச்சைப் பயன்பாடு தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டிகள், திறமைகளுக்கான களம் அமைத்தலும் ஊக்குவித்தலும், சிறுவர் களுக்கான கலாசாரப் போட்டிகளும் பரிசளிப்பும் போன்றனவாகும்.

மேலும் கிளசிக்காவின் இந்தப் பயணம் தொடர்ந்து பல்வேறுபட்ட திருமுனை களை ஏற்படுத்தி புதுவழி அமைக்க அத் திபாரமிட்டுள்ளது என்பது பாராட்டத்தக் கது. பல சமூக நல விரும்பிகளின் பங்க ளிப்பு ஒவ்வொரு வருடத்திலும் நினைத்த மாத்திரத்தை விட அதிகமாகவே கிளசிக் காவிற்கு கிடைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாண்டுக் கணக்கு அறிக்கையில் 990 கோடி ரூபா கடன் பெறவும் திட்டம்

## ★அரச செலவீனங்களுக்கு ரூ.1,765 கோடி
## ★பாதுகாப்பு அமைச்சுக்கு ரூ.1,124.6 கோடி
## ★அரசதலைவர் செயலகத்துக்கு ரூ.439.6 கோடி

கொழும்பு, டிசெ. 23
நாட்டின் அடுத்த 4 மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கையில், அரச செலவீனங்களுக்காக ஆயிரத்து 765 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சேவைகளுக்காக 790 கோடி ரூபாவும், திரட்டு நிதியத்துக்காக 970 கோடி ரூபாவும், முற்பணங்களுக்காக 5 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில், 990 கோடி ரூபா கடன் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடைக்காலக்கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சபாநாயகர் அறிவிப்பும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் சிறப்பு உரையும் இடம்பெற்றதைத் தொடர்ந்து நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து, நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கோரினார்.

96 மேலதிக வாக்குகளால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதல் காலாண்டுக்காக ஒதுக்கப்பட்ட 1765,523,826,000 ரூபா நிதியில், பாதுகாப்பு அமைச்சுக்காக ஆயிரத்து 124 கோடியே 63 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் செயலகத்துக்கு 439 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கு 50 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய அமைச்சுகளும் மற்றும் மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம் பின்வருமாறு.

**அமைச்சுக்கள்**

புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு - 49 கோடியே 34 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - 125 கோடியே 31 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா.

தலைமை அமைச்சர் வசமிருக்கும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள் குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, வாழ்க்கைத்தொழிற் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு - 3 ஆயிரத்து 90 கோடியே 11 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேஷ மருத்துவ அமைச்சு - 6 ஆயிரத்து 772 கோடியே 59 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா.

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சு - ஆயிரத்து 121 கோடியே 48 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சு - 7 ஆயிரத்து 117 கோடியே, 99 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா.

கல்வி அமைச்சு - 3 ஆயிரத்து 53 கோடி ரூபா. பொதுநிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு - 295 கோடியே 63 இலட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபா.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு - 251 கோடியே 94 இலட்சம் ரூபா.

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு - 117 கோடியே 5 இலட்சம் ரூபா.

கைத்தொழில் வாணிபம், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - 303 கோடியே 18 இலட்சத்துக்கு 70 ஆயிரம் ரூபா.

உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு - 990 கோடியே 56 இலட்சத்துக்கு 90 ஆயிரம் ரூபா.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் சமூகமேம்பாடு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு - 259 கோடியே 6 இலட்சத்து 19 ஆயிரம் ரூபா.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 1266 கோடியே 85 இலட்சத்துக்கு 95 ஆயிரம் ரூபா.

மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு - 1576 கோடியே 15 இலட்சம் ரூபா.

நகர திட்டமிடல் நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு - 2ஆயிரத்து 517 கோடியே 13 இலட்சம் ரூபா.

துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு - 119 கோடியே 86 இலட்சம் ரூபா.

தொழில், தொழிற்சங்க உறவுகள், சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு - 575 கோடியே 26 இலட்சம் ரூபா.

தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு - 193 கோடியே 65 ஆயிரம் ரூபா.

திறன்அபிவிருத்தி வெளிநாட்டு வர்த்தக விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு - 279 கோடியே 8 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா.

கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சு - 2776 கோடியே 56 இலட்சத்து 46 ஆயிரம் ரூபா.

மின்வலு சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு - 33 கோடியே 63 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சு - 288 கோடியே 60 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா.

காணி மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு - 131 கோடியே 41 இலட்சத்து 9 ஆயிரம் ரூபா.

வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு - 423 கோடியே 15 இலட்சம் ரூபா.

பொதுமுயற்சி கண்டிய மரபுரிமை கண்டி அபிவிருத்தி அமைச்சு - 28 கோடியே 91 இலட்சம் ரூபா.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சு - 62 கோடி ரூபா.

**மாகாண சபைகள்**

இதேவேளை உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 990 கோடியே 56 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதியில் வடக்கு மாகாணத்துக்கு 815 கோடி ரூபாவும் கிழக்கு மாகாணத்துக்கு 774 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, மத்திய மாகாணத்துக்கு ஆயிரத்து 34 கோடியே 50 இலட்சம் ரூபாவும், தென் மாகாணத்துக்கு 843 கோடியே 70 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்துக்கு 604 கோடி ரூபாவும், வடமேல் மாகாணத்துக்கு 875 கோடி ரூபாவும், வடமத்திய மாகாணத்துக்கு 627 கோடி ரூபாவும், ஊவா மாகாணத்துக்கு 695 கோடி ரூபாவும், சப்ரகமுவ மாகாணத்துக்கு 822 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (4)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L யில் 5 S தகைமையுடன்,

மருத்துவ துறையில்

# நீங்களும் ஒரு தாதி (Nurse) ஆகலாம்

Hotline : 071 0770770
071 7140000

இதோ !!!

அதற்கான சந்தர்ப்பத்தை உங்களுக்காக

அய்வா தாதியர் பாடசாலை வழங்குகின்றது

உடனடியாக விண்ணப்பியுங்கள்

16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்

TVEC நிறுவனத்தினால் NVQ Level - 04 சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சிறந்த சம்பளத்துடன் உறுதியான வேலை வாய்ப்பும் எங்களினால் பெற்றுத்தரப்படும்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்



TVEC

Foreign Ministry of Sri Lanka

தொடர்புகளுக்கு........

அய்வா தாதியர் பாடசாலை

323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

36/1, 38/1, 2ம் குறுக்கு வீதி, வவுனியா

071 8722351

070 2705370 - 071 8722350 - 071 8722352



# SharmilaTravels

TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

நியாயமான விலைக் கழிவுகளுடன் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்கல்.

குறைந்த கட்டணத்துடன் விமான பயணச்சீட்டு திகதி மாற்றங்கள் (Ticket Date Change).

கட்டார், டுபாய், இந்தியா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா (பாலி), சிங்கப்பூர், சீனா, மாலைதீவு போன்ற நாடுகளுக்கான சுற்றுலா விசாக்களைப் பெற்றுக் கொடுப்பதுடன் சுற்றுலா ஏற்பாடுகளும்.

பயணகாப்புறுதிகளை வழங்குதல் (Travel Insurance).

விசாக்களை பெறுவதற்கு தூதரகங்களில் கோரப்படும் ஆசன முற்பதிவுக் கடிதங்களை (It Letter) வழங்குதல்.

## இந்தியா விசா பெற்றுக் கொடுத்தல்

| | | |
|---|---|---|
| Tourist Visa | 3 Month Visa | 3,800/- |
| | 6 Month Visa | 5,500/- |
| Medical Visa | | 2,200/- |
| Business Visa | | |
| Student Visa | | |

IATA

இந்தியா விசா விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்தல் கட்டணம் 100/-

289, Stanley Road, Jaffna.
www.sharmilatravels.com
jaffnapsa@sharmilatravels.com

+94 21 222 0266, 222 0267



# KINGS ELECTRONICS(PVT) LTD

★SPECIAL★ ★OFFERS★

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

## மாபெரும் மலிவு விற்பனை DECEMBER 31 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

### LED TELEVISIONS



WARRANTY 3 YEARS

| | |
|---|---|
| Samsung 32" | -29500/= |
| LG 32" | -29600/= |
| Hisence 32" | -22900/= |
| Sony 32 | -34500/= |
| VideoCon 32" | -21500/= |
| Innovex 24" | -16900/= |
| Panasonic 32" | -27500/= |
| Abans 32" | -21900/= |
| Sony 40" | -81500/= |
| Maxmo 32" | -19500/= |
| Haier 32" smart | -28900/= |

SAMSUNG R19 REFRIGERATOR 36,900/=

10 YEAR WARRANTY

6KG INNOVEX WASHING MACHINE 36,900/= FIVE YEAR WARRANTY

5 YEARS WARRANTY

SOFA SET 3+1+1 39,900/= ONLY



LG INVERTER REFRIGERATOR RS.67,900/=

10 YEAR WARRANTY

OPEN 9.00AM TO 8.00PM 365 DAYS

Stand Fan Rs. 3,900

LG TOP LOADER WASHING MACHINE 7KG WS-2107 INVERTER RS.55,900/=

Hisense 55 4K SMART RS.126,900 ONLY

LG 43" FULL HD RS.78,500 ONLY

SAMSUNG 43" 4K SMART RS.109,000 ONLY

WARRANTY 3 YEARS

LG DVD HOME THEATRE LHD677 RS.35,900/=


HAIER WASHING MACHINE RS.36,500/=

021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னசமூக நிலையத்தின்
# விழா சிறப்புமலர்







## ஆசியுரை



சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு ஆசிச் செய்தி கூறுவதை யிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பழனியானந்தன் சனசமூக நிலையமானது சித்திரமேழி ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. இச் சனசமூக நிலையமானது சித்திரமேழி ஊர் மக்களின் பல தேவைகளுக்கு உதவி புரிகின்றது. இன்றைய நவீன காலகட்டத்தில் சனசமூக நிலையங்களை ஊர்களில் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது. அந்தவகையில் சித்திரமேழி ஊரில் பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் வளர்ச்சி பாராட்டுதலுக்குரியது.

பழனியானந்தன் சனசமூக நிலையமானது இன்னும் தொடர்ந்து சிறப்புடன் செயற்பட வேண்டும். மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விக்ன விநாயகப் பெருமானையும் சித்திரமேழி ஞானவைரவப் பெருமானையும் பிரார்த்தித்து ஆசி வேண்டி அமைகின்றேன்.

**"சிவாகம கிரியா தத்துவநிதி"**
**சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக்குருக்கள்**
**(ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் தேவஸ்தான ஆதீன குரு)**

## ...யானந்தன் சனசமூக நிலையம்

...ந்தர் நோக்கும் கை" என்று சான்றோரால் போற்றப்படுகின்ற "மேழி" என்ற பெயரை ...ர்களால் முடிசூட்டப்பட்டு "சித்திரமேழி" என்று அழைக்கின்றார்கள்.

...ழும் கலப்பையின் கைப்பிடிக்கும் பகுதி இப் பகுதி சித்திர வேலைப்பாடுடன் ...தரியது. எம் ஊரில் உழவுத்தொழிலை தெய்வமாக மதித்து இத்தொழிலை. எம் ஊர் ...அருட் ...சத்தினால் ஆ... இருந்து இன்றுவரை உழவுத் தொழிலை செய்து ...ர மேழி என்ற நாமத்தை வம்சாவழியாக பேணிவருகின்றனர் எம் மேழியூரார்.

... இல்லாத சிறப்பு எம் ஊருக்கு உண்டு. பெரிய வைரவர் ஆலயமும் அதன் அருகே ...ல்லியும் அதன் சோலையிலே வைரவர் வீற்றிருக்க அதன் அருகே பசுமை நிறை ...ாக்கு கூட்டுறவுச்சங்க கிளையும், பழனியானந்தன் முன்பள்ளியும் கம்பீரமான ...ன் சனசமூக நிலையமும் காட்சி அளிப்பது எம் மேழியூரின் சிறப்பு.

...து தனது 75 ஆவது பவளவிழாவினை சிறப்பாக கொண்டாட உள்ளது. ... ஆண்டு திரு.வேலுப்பிள்ளை பொன்னம்பலம் தலைமையில் ஆரம்பமாகி தனது 75 ...புடன் வீறு நடை போடுகின்றது.

...டைபெற்ற விழாக்கள், பண்டிகைகள், கலை, கலாசார, கல்வி, உதவிதிட்டங்களை ...வளவிழா நாயகனாக காட்சியளிக்கின்றான்.

...வழிநடத்தலில் இன்றும் சளைக்காமல் எம் விழுமியங்களை பின்பற்றி தொண்டினை

...சேவை" என்ற வாக்கிற்கு அமைய எம் மேழியூரார் தம் ஊரை மட்டுமன்றி அயற் ...ா பணியாற்றி வருகின்றனர்.

...தன் சனசமூக நிலையத் தலைவர் "திரு.வி.பிரசீலன்" தலைமையில் மாட்டுவண்டி ...விட "தானத்தில் சிறந்த தானம்" உயிர்காக்கும் உன்னத பணியாக இரத்ததான ...த்துகின்றார்கள். கல்வி வாழ்வாதாரம் போன்ற உதவி திட்டங்களை ஆற்றி ...ணிகள் மேன்மேலும் தொடர்ந்து பழனியானந்தன் நூற்றாண்டு விழாவை காணும்.

## வாழ்த்துச்செய்தி



75 ஆவது ஆண்டை நிறைவு செய்து வெற்றிநடை போடும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்துக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகுந்த பேருவகை அடைகின்றேன்.

ஒரு கிராமத்தின் அல்லது சமூகத்தின் வளர்ச்சிப்படியில் அத்திபாரமாகத் திகழ்வது சனசமூக நிலையங்கள். இவை மக்களின் தேவையறிந்து அவர்களுடன் ஒன்றிணைந்து கிராமத்தின் வளர்ச்சி நோக்கில் செயற்பட்டு அக்கிராமத்தை சகல துறைகளிலும் உயர்த்தி நிற்கும் செயல்திறனைக் கொண்டவையாகும். அந்த வகையில் பழனியானந்தன் சனசமூக நிலையம் பாராட்டுக்குரியது. அவர்களின் சேவை நோக்கையும் உற்சாகத்தையும் கண்டு வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பெருமை கொள்கின்றது. வாழ்த்திநிற்கின்றது.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அடித்தளமாகத் திகழ்வது கிராமங்கள் ஆகும். கிராமங்கள் வளர்ச்சியடையும் போது நகரங்கள் வளர்ச்சியடையும். நகரங்கள் வளர்ச்சியடையும் போது நாடு வளர்ச்சியடைகின்றது. அந்தவகையில் வளர்ச்சியின் ஆரம்பம் கிராமங்களிலேயே ஊற்றெடுக்கின்றன. கிராமங்கள் வளர்ச்சியடைய அங்கு இயங்குகின்ற சனசமூக நிலையம் திறம்பட செயலாற்ற வேண்டியுள்ளது. அந்தவகையில் இச்சனசமூக நிலையம் மிகவும் திறம்பட செயற்பட்டு வருகின்றது கண்கூடாகும். இந்நிலையில் பவளவிழாவைக் கொண்டாடும் பழனியானந்தன் சனசமூகநிலையம் மேலும் வளர்ச்சியடைந்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**கௌரவ.சோ.சுகிர்தன் (தவிசாளர்)**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**

## வாழ்த்துரை



எமது தனித்துவமான பாரம்பரியங்களோடு கலை, கலாசாரம் ஒன்றிணைந்து மிளிர்வது போன்று பயிர் செய்து பண்பும், அறிவும், ஆன்மிகம் என அனைத்தும் இணைந்து வளம் கொளிக்கும் விவசாய சூழலில் அமைந்திருக்கும் இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் நீண்டதொரு வரலாற்று தடங்களுடன் 23.12.2018 அன்று 75 ஆவது ஆண்டு நிறைவுடன் பிரதிபலிக்கின்றமையிட்டு மகிழ்ச்சி.

கிராம மட்ட அமைப்புக்களின் எழுச்சியே அந்த கிராமங்களிலும் நாட்டின் பலமாக காணப்படும் நமது அடைமான அடையாளங்களுடன் இணைப்பை ஏற்படுத்தும் நிலையங்களில் வகிபாகம் இன்றியமையாததாகும். கிராம ரீதியாக கல்வி, ஆன்மிகம், கலை,கலாசாரம் போன்ற கட்டமைப்புக்களை முன்பள்ளி கல்வி, ஆலயங்களில் அறநெறி கற்பித்தல், விளையாட்டு என பிரதேச சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளையும் இணைக்கும் வலுவான கிராமத்தின் எழுச்சிக்கான அடிப்படை கட்டமைப்புகளுடன் மிளிர்வது உன்னதானமாது.

பிரதேச நலத்திற்கும், பலத்திற்கும் வளம் சேர்த்து பொக்கிசமாக திகழும் பழனியானந்தன் சனசமூக நிலையத்திற்கும் எனது வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

கிராமங்களின் எழுச்சிக்காக வலுவான செயல்பாடுகள் இடம்பெறுவதோடு எமது மக்களின் துரித வளர்ச்சிக்காக உன்னதாமான செயற்பாடுகளை எடுத்தியப்புவேன் என தங்களின் வரலாற்று நிகழ்வில் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

## வாழ்த்துரை



எமது பெற்றோரையும் நாம் பிறந்த ஊரையும் நாம் நமது இரு கண்கள் போலப் போற்றவேண்டும். எம்மைப் பெற்று வள்ர்த்து கல்வியும் வாழ்வும் தந்து ஆளாக்கி விட்டவர்கள் பெற்றோர் - எம்மைச் சமூகத்துடன் இணைத்துச் சமூகப் பழக்க வழங்கங்களையும் பண்பாட்டையும் பழக்கி உலகில் தலை நிமிர்ந்து வாழவைத்தது நமது ஊர். எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் எம்மை அடையாளப்படுத்தப் பெற்றோர் பெயரும் ஊர்ப் பெயருமே உதவுகின்றன. பிறப்புச் சான்றிதழ் தொடக்கம் இறப்புச் சான்றிதழ் வரை எம்மை அடையாளப்படுத்த இவை இரண்டுமே தேவைப்படுகின்றன. இந்த அருமைப்பாடடை உணர்ந்து பெற்றோரையும் பிறந்த ஊரையும் மறக்காமல் நினைந்து மேன்மைப்படுத்த வேண்டியது நமது நன்றிக்கடன் ஆகும்.

எமது ஊரான சித்திரமேழியில் பழனியானந்தன் சபை எனத் தொடங்கிப் பழனியானந்தன் சனசமூக நிலையமென மலர்ந்து 75 ஆண்டுகளுக்கு மேலாகப் பன்முகப் பணியாற்றி என்னைப் போன்ற பலரைக் காலத்துக்குக் காலம் உருவாக்கிவிட்ட இந்த நிறுவனத்தை வாழ்த்துவதில் நான் மிக மகிழ்கின்றேன். இந்த நிறுவனம் ஒரு உயர்ந்த சமூகப் பண்பாட்டு மையமாகும். இங்கு வாழ்ந்தவர்கள் எல்லோரும் சைவ வாழ்வு வாழ்ந்தவர்கள், எல்லோரும் பசு வளர்த்தும் பயிர்வளர்த்தும் வாழ்ந்து தம்பிள்ளைகளையும் நவீன உலகிற்கேற்ற கல்வி தந்து உயர வைத்தவர்கள்.

எல்லோருமே ஊரின் நடுவிலே இருக்கும் சித்திர மேழி ஞான வயிரவரைக் காலையில் வந்து வணாங்கிவிட்டு நெற்றிநிறைய நீறணிந்து கொண்டு தத்தம் தொழிலுக்கு செல்வார்கள். நண்பகல் வேளையில் வந்து ஓய்வாக இருந்து பழநியானந்தன் ச.ச. நிலையத்தில் பத்திரிகை படித்தும் புத்தகங்கள் படித்தும் தம் நேரத்தைப் பயன்படக் கழித்தார்கள். இந்த நிலையத்தில் தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி காலங்களில் பெருவிழாக்கள் நடக்கும் அதில் நமதூர்க் கலைஞர்களும் பிறவூர்க் கலைஞர்களும் பங்குகொள்வர். நவராத்தி காலத்தில் பூசையும் விழாக்களும் நடக்கும் வயிரவர் கோயில் திருவிழாக்காலத்தில் பிரசாங்கங்களும் சிறப்பான கலை நிகழ்ச்சிகளும் நடக்கும் . புராணபடனம் நடக்கும்.

கோயில் வயலில் முதல் நெல் விதைத்தபின்தான் தத்தம் வயல்களில் விதைப்பார்கள் தைப்பூசத்தில் வயிரவர் மாங்கலவாத்தியங்கள் கொடிகுடை ஆலவட்டங்களுடன் ஊர்வலமாக வயலுக்குச் சென்று புதிர் எடுத்தபின்தான் மக்கள் தத்தம் வயல்களில் புதிர் எடுப்பார்கள். ஊரிலேயுள்ள கல்விமான்கள், சோதிடர்கள், வைத்தியர்கள் முதலான பெரியவர்களின் வழிகாட்டளில்தான் மற்றவர்கள் அச்சமின்றி வாழ்ந்து இறந்தார்கள். இவ் விதமான ஒருபண் பாட்டுப் பண்ணையாக நமது ஊர் திகழ்வதற்குரிய சமூக மையமாக விளங்கியது. இந்தப் பழனியானந்தன் நிலையமாகும்.

இன்றும் அந்த வழித்தடம் மாறாமல் நூலகமும் வாசிகசாலையும், பாலர் பாடசாலையும் அறநெறிப் பாடசாலையும், கோயிலும், கூட்டுறவுச் சங்கமும் அயலூர்களுக்கு முன்மாதிரியாக திகழ நம்மை வழிப்படுத்திய நம்முன்னோரின் தியாகத்தை நினைத்து இன்றைய இளைஞர். யுவதிகளும் பெற்றோரும் முன்னின்று உழைக்க வேண்டும். அதற்கு இந்தப் பவளவிழா நல்ல உந்து சக்தியாக இருக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி த.பேரானந்தராசா**
**பொது வைத்திய நிபுணர்**

## பவள விழா வாழ்த்து



சித்திரமேழிப் பழனியானந்தன் சனசமூக நிலைய... ள விழா வாழ்த்து

இளவால...க கிராமத்தின் எழிலான சிற்றூராம் வளமான வாழ்வுடைய சித்திரமேழியெனும் பழமையும், பெருமையும், பண்பாடும் பார் மகிழும் வழமையும் வாண்மையும் வல்லோர்கள் மிகவிருந்த சித்திர மேழியெனும் செந்தமிழ்சொல் பெற்றுயர்ந்த நீர்வளமும் நிலவளமும் நித்தமும் விளைவுதரும் சீர்மிகுந்த மருதநில வயல்கள் வளம் கொழிக்கும் மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை மேழிச் செல்வமென்றும் மேன்மைக்குரியதென்றும் உழுதுண்டு வாழ்கின்ற உத்தமர்கள் வாழ்ந்தவூர் பூமிதிருத்தி அங்கு புகு பொருளைக் கொண்டென்றும் தாமும் மகிழ்ந்துண்டு தம்மை அடைந்தோர்க்கும் இல்லையென்னாமல் ஈந்துவந்து வாழ்ந்தவூர். கலைமகளும் திருமகளும் கைகோர்த்து வாழ்ந்ததனால் கற்றோரும் கலைஞர்களும் கவின்பெறவே வாழ்கவென நற்கலைகள் ஞானநூல் நவின்றிடவே வாய்ப்பாக எழுபத்தைந்தாண்டின் முன் எழுந்திட்ட நிலையமிது. பழனியானந்தன் எனும் தமிழ் முருகன் பெயராலே எல்லோரும் கூடி மகிழ்ந்ததென்றும் மகிழ்வெய்தும் நிலையமாய்த் திகழ்ந்தின்று மூன்றாம் தலைமுறையில் பவள விழாக் காணப் பார்போற்ற நிமிர்ந்து நிற்கும் பழனியானந்தன் சனசமூக நிலையம் என்றும் ஏற்றம் மிகப்பெற்று எழில்பெறவே வாழியவே.

**கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை**
**இளவாலை வடக்கு, இளவாலை.**

## வாழ்த்துரை



எனது பிரதேசத்தில் திறம்பட தனது சேவையை வழங்கி வரும் பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் வட்டாரம் (2) இன் கௌரவ உறுப்பினர் என்ற வகையில் வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்ட எமது பிரதேசமானது சகல துறைகளிலும் பல புத்தி ஜீவிகளை உருவாக்கிய பெருமைக்குரியது என்றால் மிகையாகாது. அப் புத்தி ஜீவிகளின் வழிகாட்டலின் கீழ் எமது பிரதேச மக்களிற்கு ஏறத்தாழ 75 வருடங்களாக பழனியானந்தன் சனசமூக நிலையம் அரும்பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. பொதுச்சேவைகள் என்ற வகையில் முன்பள்ளிகளிற்கான உதவிகள், மருத்துவ முகாம்கள், விளையாட்டு ரீதியான ஊக்குவிப்புக்கள் போன்ற பல்வேறு சமூக செயற்றிட்டங் களை ஆற்றி மக்களிற்கு அளப்பரிய பணியை ஆற்றி வருகின்றது. இப்பணிகள் மேன் மேலும் சிறப்புற மக்களிற்கு இன்னும் பல நூற்றாண்டுகள் சிறந்த சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**கௌரவ ச.க. அச்சுதபாயன்.**
**உறுப்பினர்**
**வலி தென்மேற்கு பிரதேசசபை**

...ani
...ex
...1 222 5578 /
222 9286
...rand Bazzar Road,
Jaffna.

அருள்நிலா
நகை மாடம்
தங்கப்பவுன் நகை வியாபாரம்
74, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 077 710 6042

YARL
Mother Care
No: 514/18, Hospital Road,
Jaffna,
T.P:021 221 9595/021 221 9797/
021 222 9521/021 222 6363
Email- yarlmothercare17@gamil.com
Web- yarlmothercare.com

ஆசைப்பிள்ளை & சன்
நகைமாடம்
AASAPILLAI & Son
Nagai Maddam
K.T PLAZZA
Main Road,Chankanai
T.P. 021 2252 399

Mayavan
Hardware
பிரதான வீதி,
இளவாலை.
T.P: 077 271 4900/
076 704 7729

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(உரிமையாளர் - விநாயகர் ரேணிங் வேக்ஸ்)

மலர்வு 22 . 07 . 1948

உதிர்வு 23 . 12 . 2011

பொன் மலர்ந்த முகமும் புன் சிரிப்பும் கொண்டவரே!
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
நாடிவரும் அனைவருக்கும் யாமிருக்கப் பயமென்ன
உதவிக்கரம் நீட்டிய எங்கள் அப்பாவே!
புன்னகையால் வெல்லுவோம் எனப் புதுவேகம் படைத்தவரே!
உங்கள் முகத்தைக் காணாது தவிப்பது
இறைவன் அளித்த தண்டனையா?
எம்மை விட இறைவன் உம்மை நேசித்தாரோ?
என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்.....

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாய் மடியில் 07.03.1957

சிவன் அடியில் 09.12.2018

அமரர்

### கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா



கடந்த 09.12.2018 சிவபதம்பெற்ற எம் குடும்ப விளக்கு அமரர் கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், துண்டுப்பிரசுரம், பதாகைகள் வாயிலாகவும், மலர்வளையம், மலர்மாலையிட்டு பலவகையில் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை (24.12.2018) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**– தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.203, கோயில் வீதி,
நல்லூர்.


மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(CS/21980)(11,17)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

### முத்துக்குமாரு சிவகுமாரதாஸ்



பிறப்பு 01.05.1943

இறப்பு 02.01.2018

திதி:– அபரபக்க பிரதமை

எமை உம் கண்களாகக் காத்திருந்த
அப்பாவே
இமைகளை இழந்த கண்கள்
காத்தனவே இமை தேடி
ஓராண்டு கடந்தும் காணாது தவித்தேங்கி
நீரோடும் கண்களுடன்
உயிர்மலரால் அஞ்சலித்தோம்.

குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

## அந்தியேட்டி அழைப்பு



பிறப்பு 08.04.1942

இறப்பு 23.11.2018

கடந்த 23.11.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்னை, அன்புத் தெய்வம்

### திருமதி தங்கரத்தினம் வேலாயுதம்

அவர்களின்

அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று புனித அஸ்தி கீரிமலை தீர்த்தத்தில் கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் வீதி,
வல்லை, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(CS 21913) (14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
11.02.1977

இறப்பு
02.01.2018

கடந்த 02.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதப்பேறு அடைந்த
**எமது குடும்பத்தலைவர்**

## அமரர் இந்திரசித்து விக்கினேஸ்வரன்

**(லலிதா ஜீவல்லரி)**

**கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு ஓராண்டாய் சென்று விட்டீர்**
**வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து தவிக்கின்றோம்**
**எமன் உங்களில் பாசம் வைத்து அழைத்துவிட்டான் - நாங்களோ**
**எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.**

**32, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS-23598)(14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TELESOON Textile

Cargills Square, 1st Floor & Chunnakam Junction
Tel: 021 221 4664 Tel:071 190 7466

## அதிரடி New Year Sale

- எவ்வகையான இரண்டு Saree களை வாங்கி ஒரு Saree ஐ இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.
- 900/- தொடக்கம் 6000/- வரையிலான Salwar Material ஒன்றை வாங்கி இன்னும் ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.
- அத்துடன் அனைத்து கொள்வனவிற்கும் 10% தொடக்கம் 25% வரையான விலைக்கழிவு.



## BUY 1 GET 1 FREE



1000/- மேற்பட்ட அனைத்து கொள்வனவிற்கும் சிங்கப்பூர் சென்றுவர அதிஸ்ரம் மூலமான சந்தர்ப்பம் உண்டு.
மேலும் பல பரிசில்கள்.

மேலதிக தகவல்களுக்கு:-
like our page:- Telesoon

# 2018 GCE O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்



**Dilploma In IT**
Duration : 6 months

New intake will be on 19.12.2018 / 05.01.2019

கட்டடத் துறையில் நீங்களும் ஒரு தேர்ச்சி பெற்ற நிபுணராக திகழ வேண்டுமா? இன்றே இணைந்து கொள்ளுங்கள்

**Certificate in AutoCAD** Duration : 4 Months

AUTOCAD 2D & 3D

New intake will be on 05.01.2019

SLIM Sri Lanka Institute of Marketing

**Welcome to The World of Marketing**

**Preliminary Certificate in Marketing**

சந்தைப்படுத்தல் துறையில் பணியாற்றுபவர்கள்,
சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவினைப் பெற விரும்புவோர்,
க.பொ.த. உயர்தர பெறுபேற்றிற்காக காத்திருப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

New intake will be on 05.01.2019

## IIS CITY CAMPUS

#200, Sivan Pannai Road, Jaffna

TEL :- 021 222 8060 Mobile :- 0777 570 038


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12.05.1953 உதிர்வு 28.12.2012

திதி : அபரபக்க பிரதமை

**தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)**
**(பிரபல தர்ம்சன்ஸ் கட்டட ஒப்பந்தகாரரும் உரிமையாளரும் - அரியாலை)**

எங்கள் அன்பின் ஆருயிர் அப்பாவே!
ஆண்டுகள் ஆறாகி விட்டதுவே
ஆறவில்லையே எங்கள் மனம்
ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு நிமிடமும்
உங்கள் நினைவாகவே வாழ்கின்றோம்
வேறு வழி தெரியவில்லையே அப்பா
ஆனாலும் என்றென்றும் உங்கள் ஆசி
எங்களுக்கு உதவியாக இருக்கும் என்ற
மன உறுதியோடும் தைரியத்துடனும்
வாழ்கின்றோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
சித்திவிநாயகரினதும், மகாமாரி அம்பாளினதும்
அருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி,



11, கதிரவேலு லேன்,
கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண
பல்கலைக்கழகத்தில்
01.10.2018 இல்
பிரதிப் பதிவாளராக
(Deputy Registrar)
பதவி உயர்வு பெற்ற

**திரு. S. எட்வேட் றெஜினோல்ட்**

அவர்களைப் பாராட்டுவதுடன்
மேலும் உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
தம்பு பாலசுப்பிரமணியம், மேரி நற்குணம், Eng. ஜெபதனுஷன், ஜீவனா, நோயல் றொஷான் தர்சிக்கா (கனடா), டிலோஜினி

## விற்பனைக்குண்டு

**ஓவ் செற் பிறிண்டிங் மெசின்**
Kord Black Long Box -18X24 inch
Chinese Cutter - 42 inch என்பன விற்பனைக்குண்டு.

T.P: - 076 997 4741

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரில் அமைந்துள்ள லங்கா டைல் ( Lanka Tile) காட்சியறைக்குத் தகுதியான இருபாலாரிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- காசாளர்
- விற்பனை மேம்படுத்துநர்
- களஞ்சியப் பொறுப்பாளர்

(CS/21958)(11,17)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :- விளம்பர இல :- JF/1003
மே/பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு நாள் வாடகைக்கு உண்டு. (A/C and Non A/C Rooms)

**077 4291 246, 077 6 333 000**

## விற்பனைக்கு

பழைய நிலை கதவு, யன்னல்கள், தீராந்திகள் விற்பனைக்கு உண்டு.

**T.P: 076 7257 280**

## விற்பனைக்கு

மொரட்டுவ Printers
KORS AUTO Platon 10”x15”
Rayobi N480 Plate Maker
உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- மகேஸ்

**T.P: 077 920 2226**

## 1st Year Rememberance



03 . 12 . 1962 — 23 . 12 . 2017

Loving Memory Of
**Rajendra Ramesh**
On Sunday 23rd December 2018

You are Remembered every moment in our lives.
Time Flies away So Soon but not a single day passes without you in our thoughts

**By:- Family Members**
**077 959 0566**

(CS/21311)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் 14.12.2018 அன்று நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கான சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில்

- 2017 ஆம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான வெளிவாரி மதிப்பீட்டில் 1C பாடசாலைகளில் பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதனிலை
- 2017 ஆம் ஆண்டிற்கான வடமாகாணத்தில் சிறந்த சுகாதாரப் பாடசாலைகளுக்கான தங்கவிருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்திற்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர். பழைய மாணவர்கள்
கிளி / உருத்திரபுரம் ம. வி. 2010 O/L & 2013 A / L

## பணியாளர் தேவை

கொழும்பில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு **30 வயதுக்கு உட்பட்ட விற்பனைப்பிரதிநிதி** உடன் தேவை.
**சம்பளம் 30,000/-**
**தங்குமிட வசதி இலவசம்.**

**077 623 1295**

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 56 - xxxx டொல்பின் வான் விற்பனைக்கு உண்டு.
Duval A/C, Adjestment Sheets, Long Model, Manuval,
புதியரயர்கள் (Alow wheel) புதிதாக பெயின்ற் அடிக்கப்பட்டது.

**077 169 7776, 076 824 2823**

## விற்பனைக்கு

மலேசியன் செவிழை தென்னங்கன்று 6அடிக்கு உட்பட்ட சவுக்கங்கன்றுகள், தேசி, தோடை, மாங்கன்று மற்றும் பல இன மரக்கன்றுகளும் பழமரக்கன்றுகளும், பூஞ்சாடி, பூங்கன்று வகைகளும் மேலும் பலகன்றுகளும் விற்பனைக்குண்டு.

**நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு கணேசா பாடசாலைக்கு அருகில்
077 612 9343
கிளை K.K.S றோட், இணுவில்.

(CS 21798)(04,17)




## தேவை

மருதானையில் இயங்கும் ஆயுள்வேத SPA நிலையத்துக்கு பெண் வேலையாள்கள் உடன் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. மாதம் **85,000/=** (உரிமையாளர் பெண் ஒருவர்)

**071 3410 194 டிலானி பேரரா**
ஆயுள்வேத லைசன் உண்டு : 6.3.2./466

## தேவை

கல்விப் பதிப்பகமொன்றிற்கு Type setting/ Graphics Designers தேவை.
தொடர்புகட்கு அலுவலக நாள்களில்.

**0777 901354 / 077 9120 615 / 077 650 3432**

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் தோட்டம் செய்ய, வீடு கட்ட உகந்த காணி தண்ணீர், மின்சார வசதியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-

**075 500 1211 / 076 766 1211**

## வாடகைக்குண்டு

நாவலர் வீதியில்
1500 சதுர அடி கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

**077 665 9736, 021 222 3479**

## வீடு வாடகைக்குண்டு

யாழ் இராமநாதன் வீதியில் Raja Cream House Wedding Hall அருகில் 3583 சதுர அடியில் புதிதாக அமைக்கப்பட்ட கீழ்மாடி வீடு, 4படுக்கை அறைகள், இணைந்த குளியலறை, சமையலறை உட்பட வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 249 9979/077 854 3169**

## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி




**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

**நீச்சல் தடாக வடிவமைப்பு**



உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.

நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

SATISFACTION 100% GUARANTEE

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

Jaffna: No.341, K.K.S Road, Jaffna. Tel: 021 222 6888 | 077 362 6230 Kilinochchi: 677, A9 Road, Kilinochchi, Tel: 021 228 4888 | 075 3313302

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பு, தெஹிவளை வங்கி ஒன்றில் வேலை செய்யும் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல், குழந்தை பராமரிப்பு செய்வதற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**077 772 6736**

## மணமகன் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம், 1983ம் ஆண்டு உத்தராடம், தனுசு ராசி 10இல் சூரியன், செவ்வாய், புதன் (தோஷமற்ற) அரச உத்தியோக பெண்ணுக்கு தகுதியான மணமகன் தேவை

தொடர்புகளுக்கு:-

**077 254 3121 / 021 221 6946**

## வாடகைக்கு தேவை

கோண்டாவில், உரும்பிராய், இணுவில், தாவடி பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. 077 892 7054

(CS 22027/15/17)

## பணிப்பெண் தேவை

வவுனியா புளியங்குளத்திலுள்ள வீடு ஒன்றில் 50 வயதிற்கு மேற்பட்ட பெண் பணியாளர் (உதவியாளர்) தேவை. தனிநபர் விரும்பத்தக்கது. சமையல். வயோதிபர், சிறுபிள்ளை பராமரிக்கத் தேவையில்லை

**077 220 0627 / 076 7673 732**

## காணி விற்பனைக்கு

வடமராட்சி பகுதி நாகர் கோவிலிற்கு அருகாமையில் உள்ள குடத்தனை பிரிவைச் சேர்ந்த பருத்தித்துறை, மருதங்கேணி பிரதான வீதிக்கு அருகாமையில் 16 ஏக்கர் காணித்துண்டு விற்பனைக்கு உள்ளது. இக் காணிக்குரிய விலைகள் பேசித்தீர்மானிக்கப்படும். நீங்கள் இது சம்பந்தமாக தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-

**076 7810 493**

## விற்பனைக்கு

அறத்துஸ்சா லேன் வெள்ளவத்தையில் Brand New Apartment வீடு விற்பனைக்கு உண்டு. 3 Bedrooms, 2 Bathrooms

**T.P.No:- 077 059 6477**

## விற்பனைக்கு

யாழ் மல்லாகம் K.K.S. வீதிக்கு அருகாமையில் உள்ள பங்களா ஒழுங்கையில் வீட்டுடன் நீள்சதுர காணி 4 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு.

**077 230 6642 / 077 386 7695**

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம், 2ஆம் பாதம், கிரகபாவம் 78%, 4இல் செவ்வாய், நில அளவையாளராக (BSc சப்ரகமுவ பல்கலை கழகம்) வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**T.P: 076 132 2135**

## வாகனம் விற்பனைக்கு

Toyota, Aqua S Grade 2014 Model Car விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:-

**077 525 7324 / 011 2360 844**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அருகில் மின்சார நிலைய வீதியில் மூன்றாம் ஒழுங்கையில் அமைந்துள்ள 3/4 பரப்பு. விஸ்தீரணமுள்ள. வீடு கட்டி குறையில் உள்ள காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**T. P : 077 605 4360, 077 0357 850**


## கடை வாடகைக்கு

யாழ் மணிக்கூட்டு வீதியில் 30 அடி அகலம், 50 அடி நீளம் கொண்ட கட்டடமும், அத்துடன் 10 அடி அகலம், 20 அடி நீளம் கொண்ட கடையும் வாடகைக்கு உண்டு.

**077 271 8458**

## மரண அறிவித்தல்

# கந்தையா சுப்பிரமணியம்



கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (22.12.2018) சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பர்வதபத்தினி தம்பதிகளின் அன்பு மகனும் செல்லக்கொழுந்துவின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மலட்சுமியின் அன்புக் கணவரும் சுபாஜினி, சுஜீபன், சுதர்சன், சுகந்தினி, சுதாகரன், சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயச்சந்திரன், நந்தினி, யுவப்பிரதா, நவநீதன், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களானநாகரத்தினம்,சபாநாதன்,பராசக்தி,திருநாவுக்கரசு மற்றும் இராசலட்சுமி, சிவஞானம், வசந்தாரணி ஆகியோரி அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், சுந்தரலிங்கம் மற்றும் அனுசலட்சுமி, தெய்வேந்திரன், ஞானசொரூபி, தர்மசேனன், வைஜெயந்திமாலா, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஸேசாந், ஜதுபிரியன், கிருசோஷன், ஆரவி, கேசவர்ஷன், சுகிஷன், சாதுரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை இல. 186/11, நெசவுசாலை ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டா விலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 508 1775,
077 044 4951

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23602/15/18)

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### TOP UP DEGREE FAST TRACK DEGREE PROGRAMME 2019/ 2020 (One year)



- BA in English
- B.BA in Management
- B.Sc in Psychology
- BA in FineArts
- BA in Education
- B.Sc in Nursing
- B.Sc in Computer Science
- B.Sc in Engineering

❖ க.பொ.த. சா/த, உ/த தகைமை

❖ NVQ, HND, அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

UGC Approved

கருத்தரங்கு: 29, 30 - 12 - 2018 10.00 a.m.

பிரிவுகள் ஆரம்பம் 05.01.2019 10.00 a.m.

ஆங்கிலம், கணினி கற்கைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பம்...

(I.) இலவச ஆங்கில, கணினி வகுப்புகள் 03 மாதங்கள்

(II.) IETLTS (III.) IETLTS Lifeskills

● Academic ● General

50% Discount

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், புலமைப் பரிசில் திட்டங்கள்

ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் ஆரம்பமாகின்றன. சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு;

**IPS City Campus** *to your future*

முகாமைத்துவ நிர்வாக சபை
யாழ். பல்கலைக்கழகம் அருகில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 450 8489/ 077 602 1794
E mail : degreeinfo08@gmail.com

(C 32315/15/18)

After O' level Exam

**Diploma in Spoken English** Full / Part time

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General **IELTS**

Next exam date on 19/01/18

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவரகளுக்கு

**IELTS A1 LIFE SKILLS**

கடந்த 3 வருடத்தில் 640 மாணவ, மாணவிகளை சித்தியடையவைத்த ஒரே ஒரு நிறுவனம்

COMPUTER COURSES: MS - Office | Web Designing | Computer Studies | Multi Media | Hardware | Graphic Designing

BRITISH COLLEGE of Education

More information 0777 596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113

103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041

Main Street, Mullaithivu. Tel : 021-4927497

Station Rd, Mannar. Tel : 023-4924124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான

## (TRAINEE ENGLISH TEACHER) வேலைவாய்ப்பு

- பயிற்சியின் பின் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தும் முகமாக ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.
- வயது 18 - 28க்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*தூர பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

K & K Ads

நேர்முகப்பரீட்சைக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS ஊடாக அனுப்பவும். **0785 880 680**

**INTERNATIONAL TEACHER TRAINING ACADEMY**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மெற்றில்டா மேரி கணேசலிங்கம் (இந்திரா)



மண்ணில் 21.12.1950 விண்ணில் 21.12.2018

ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசலிங்கம் மேரி மெற்றில்டா கடந்த (21.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் அவரது இல்லத்தில் நாளை (24.12.2018) திங்கட்கிழமை நடைபெற்று தொடர்ந்து ஒட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 22030/15/18) **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பொன்னம்மா முருகுப்பிள்ளை



பிறப்பு 05.10.1925 இறப்பு 22.12.2018

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா முருகுப்பிள்ளை நேற்று (22.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு, மாணிக்கவாசகர், இராசேஸ்வரி (கனடா), கிருஷ்ணகுமார் (கனடா), செல்வகுமார் (பிரான்ஸ்), சத்தீஸ்வரி, சாமூண்டீஸ்வரி (கனடா) ஆகியோரின் தாயாரும் இராசகுலவீரசிங்கன் (கனடா), குலசிங்கம், சண்முகதாசன் (கனடா), நகுலேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, கனகமணி (பிரான்ஸ்), சரஸ்வதி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் திரிவேணி (லண்டன்), கலைச்செல்வி (கொலன்ட்), இமயந்தி (பிரான்ஸ்), சுஜீபன் (லண்டன்), பிரிதா, கீர்த்திகா (கனடா), சர்மிகா (கனடா), நிருசவேல் (பிரான்ஸ்), ஜெகநிதா (பிரான்ஸ்), கௌசிக் (பிரான்ஸ்), சமந்தா (கனடா), துளசிகா (கனடா), பிரியா, கவிதா, செந்தூரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் கானுஷன், தர்மிகன், சுகிர்தன், ரிசான் (லண்டன்), ருசானி (லண்டன்), சிகானி (லண்டன்), ஜெனு (கொலன்ட்), ஜெனன் (கொலன்ட்), தினுஷன் (பிரான்ஸ்), கேதுஷன் (பிரான்ஸ்), திரியா (பிரான்ஸ்), சுரபிகா, கோசிகா, தனுஷா, கீர்த்திகன், ஜகான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இடைக்காடு.** (CS 22020/15/17) **தகவல்: பிள்ளைகள்.**


## வீடு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் ஐந்து அறை கொண்ட வீடு 2½ பரப்புக்கு உட்பட்ட காணியில் விற்பனைக்குண்டு. யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இல. 40/1 இரண்டாம் ஒழுங்கை, பலாலி வீதியில் அமைந்துள்ளது.

(CS 32065/04.07)

**075 580 8707**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அண்மையில் மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள. ஒன்றரை பரப்பு நிலப்பரப்பில் அமைந்துள்ள வீடு (ஐந்து அறைகள், மூன்று விசாலமான விறாந்தைகள், நவீன முறையில் அமைக்கப்பட்ட குளியலறைகள், வாகனத் தரிப்பிடம் மற்றும் பல வசதிகள்) வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:- **021 222 8587 / 077 242 3533/ 077 127 5204**

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

**இப்பொழுது திரையில்**




வடக்கு, கிழக்கு

Majestic Jaffna. 1.45, 7.45 pm [021 222 7712]
Raja 2 Jaffna. 4.30,9.30 pm [021 222 7332]
Saru Cinema Point Pedro. 2.30,9.30 pm [021 226 5000]
Shanthi Batticaloa. [065 222 3516]
Saraswathy Trinco. 2.30 [026 222 2221]
Nelson Trinco.




வடக்கு, கிழக்கு

Raja 1 Jaffna. 4.30 pm [021 222 7332]
Majestic Jaffna. 10.45, am [021 222 7712]
Chelva Batticaloa. 10.30 am [021 222 7973]
Salu Cinema Point Pedro. 2.30,9.30 pm [021 226 5000]
Vasanthi Vavunia. [0772 189 646]
Shanthi Batticaloa. One Show [026 2222221]
Nelson Trinco. 10.30 am




Salu Cinema Point Pedro. Nahams Chunnaham.

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

# STUDY ABROAD

London (UK), Canada, Germany ஆகிய நாடுகளுக்கான

**இலவச உயர் கல்வி சேவை**


O/L, A/L பூர்த்தி செய்துள்ள அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் London ஐ தலைமையகமாக கொண்ட எமது நிறுவனத்தால் உங்களது உயர் கல்வியை வெளிநாட்டில் தொடர்வதற்கு இலங்கையில் இலவச சேவை வழங்கப்படுகின்றது. VISA பெறுவதற்கு முன் அல்லது பின் எந்தவிதமான சேவைக் கட்டணமும் எமது நிறுவனத்தால் அறவிடப்பட மாட்டாது.

மேலதிக விவரங்களுக்கு:

**AROSI HOLDINGS (PVT) LTD.**
Paramount Tower
No.5, 9th Lane, Nawala Road, Nawala - Colombo.
Phone:- 077 959 2262


## பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 13 . 01 . 1932



மறைவு 16 . 12 . 2005

அமரர்

### முருகேசு தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி - அபரபக்க பிரதமை 23.12.2018

ஆண்டுகள் பதின்மூன்று மறைந்தாலும்
மாறாது எங்கள் மனத்துயரம்!
பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய்
விளங்கி உண்மை, நேர்மை, அன்பு, இறை பக்தியுடன்
வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாக வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே!
உங்களை வழிகாட்டியாகக் கொண்டு
உங்கள் நினைவுடன்
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடர்கின்றது.

"கோகுலம்"
சாங்கத்தானை,
சாவகச்சேரி.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், மைத்துனி,
பெறாமக்கள் மற்றும் உறவினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 13 ☼ 09 ☼ 1942



உதிர்வு 19 ☼ 12 ☼ 2018

எமது நிறுவனப் பணியாளர்
திரு. இ. நிறஞ்சன் அவர்களின் பாசமிகு தாயார்

### அமரர் திருமதி. இரத்தினசிங்கம் பரமேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி...

**பணிப்பாளரும் பணியாளர்களும்
கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்**

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் இரத்தினசிங்கம்

(புதிய உயர் கல்லூரி பணிநிலை உத்தியோகத்தர்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இரத்தினசிங்கம் கடந்த (21.12.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும் நவமணிதேவியின் அன்புக் கணவரும் சோபனாவின் (QA Engineer Esshva Tech (Pvt) Ltd., Kopay) அன்புத் தந்தையும் சிவமணி (சிங்கள ஆங்கில ஆசிரியர்), இராமச்சந்திரன் சண்முகநாதன் (இயக்குநர் - புதிய உயர்கல்லூரி, யாழ்ப்பாணம்), திலகமணி, செல்வராஜா (பணிநிலை உத்தியோகத்தர் - புதிய உயர் கல்லூரி), பத்மநாதன் (இயக்குநர் - பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம், சுன்னாகம் Barathy Institute, சித்தங்கேணி), மோகனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், நவமணி மற்றும் அருள்நங்கை, ஞானக்கொழுந்து, வசந்தராணி, சகிலா பரஞ்சோதி, பத்மாவதி, கமலேந்திரன், பரமேஸ்வரி, மகேந்திரன், பாலேந்திரன், மாலினிதேவி, திலீபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 8819/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை குமாரசாமி



தோற்றம் 10.04.1948 மறைவு 22.12.2018

உடுவில், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குமாரசாமி நேற்று (22.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 22028/15/18) **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பம் இலைப் பொதிகளுடன் வீதியில் நின்றவருக்கு மறியல்

## கஞ்சா வைத்திருந்தாரென பொலிஸ் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, டிசெ. 23


வீதியில் வைத்து ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் 5.5கிலோகிராம் வேப்பம் இலைகள் பொதியிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன என்று தெரிவித்த பொலிஸார் அவரது உடமையில் மறைத்துவைத்திருந்த 10கிராம்கஞ்சாபோதைப் பொருளை மீட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்நீதிமன்றில்முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்என்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம்கிளிநொச்சிமாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

சந்தேகநபர் பேருந்துக்காகக் காத்திருந்துள்ளார். அவர்கஞ்சாகடத்த முற்படுகிறார் என்று தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்று அவரைக் கைது செய்தோம்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

வேப்பம் இலைகளை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவதற்குப்பொதி செய்து வைத்திருந்தேன் என்று சந்தேகநபர்விசாரணையில்கூறியுள்ளார் என்று பொலிஸார் மேலும்தெரிவித்தனர். (4.6)





## மின்விளக்குகள்வழங்கல்

கொடிகாமம்.டிசெ. 23

ஒரு தொகுதி மின் விளக்குகள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமைசாவகச்சேரிப்பிரதேசசபையின் உப தவிசாளர் செ. மயூரன் தலைமையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ. ஜெயபாலனின்வேண்டுகோளையடுத்துகைதடியைச் சேர்ந்த மறைந்த பண்டாரி இரத்தினசிங்கம் நினைவாக கைதடி மேற்கு உதயநகர் கிராமத்துக்கும், கைதடிதெற்கைச்சேர்ந்த மறைந்த ஆறுமுகம் சூரியகுமார் நினைவாக கைதடி குவாரி நூலக இணைப்பு வீதிக்கு பொருத்துவதற்கு எனவும் ஒரு தொகுதி மின் விளக்குகள் வழங்கப்பட்டன.

இந்த மின்விளக்குகள் சாவகச்சேரி பிரதேச சபையின் மின் இணைப்பாளர் இ. சாந்தரூபனிடம் கையளிக்கப்பட்டன. (ஜ-159)

## வீதிகளுக்கு மின்விளக்குகள்

வடமராட்சி,டிசெ.23

வடமராட்சிக்கிழக்குகிராமம்முழுவதுக்கும்மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பத்து லட்சம்ரூபாநிதிஒதுக்கீட்டில்இருந்துகொள்வனவு செய்யப்பட்ட 176 மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தினூடாக வடமராட்சிக் கிழக்கின் போக்கரப்பு தொடக்கம் மனற்காடு வரைக்குமானகிராமங்கள்நன்மையடையவுள்ளன. மின் விளக்குகளை பருத்தித்துறை பிரதேச சபையினர், இலங்கை மின்சாரசபையினர், மருதங்கேணிபிரதேசசெயலகத்தினர்ஆகியோர் இனைந்து பொருத்தி வருகின்றனர். (ஜ-70)

## சீருடைக்கானவவுச்சர்கள்வழங்கல்

கொடிகாமம்.டிசெ.23

கச்சாய் அ.த.க பபாடசாலையின் மாணவர்களுக்கான 2019ஆம்ஆண்டுக்கான இலவசசீருடைக்கான வவுச்சர்கள் பாடசாலையில்நாளை திங்கட்கிழமைகாலை8மணிக்குவழங்கப்படும். எனவேமாணவர்கள், ஆசிரியர்கள், ஆரம்பபிரிவு மாணவர்களது பெற்றோர்களையும் பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு பாடசாலையின் அதிபர் அறிவித்துள்ளார். (ஜ-159)

## திருவாசக முற்றோதல்

வவுனியா,டிசெ.23

திருவாசக முற்றோதல் நிகழ்வு வவுனியா,குடியிருப்புஆருத்திராதரிசனம்திருக்கோயில், சிறிசித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் இன்று ஞாயிற்றுக்கிழமைமுற்பகல்9மணிக்கு இடம்பெறும்.

வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத்தலங்களில்திருவாசகமுற்றோதல்கள்நடைபெற்று வருகின்றன. (ஜ)



பார்த்தீனியம் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில்பல்வேறுஇடங்களில்பார்த்தீனியம்அழிக்கும்செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சங்கானை மண்டிகைகுளத்துக்கு அருகில் காணப்பட்ட பார்த்தீனியத்தை சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர்கள், மானிப்பாய்ப் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து அழிக்கும் செயற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். (ஜ– 7)

## சிறார்களை பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வு

கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் முன் பள்ளி மாணவர்களை பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ் [illegible] நேற்றுமுன்தினம் முற்பகல் [illegible] மணிக்கு நிலையத் தலைவர் மா. மதிவண்ணன் தலைமையில்நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராகபோக்கட்டிஅ.த.கபாடசாலை அதிபர் தி. அபராஜிதன், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் தெற்குபிரிவின்பொருளாதாரஅபிவிருத்திஅலுவலகர்திருமதிக.சிவமதி,சாவகச்சேரிபிரதேசசபைஉறுப்பினர்க. அசோகலிங்கம்,கொடிகாமம் தெற்கு கிராம அபி விருத்திச் சங்கத் தலைவர் ச. ஜெகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பராமரிப்பு நிலையத்தின் நிர்வாகத்தினரால் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப் பையும் கற்றல் உப[illegible]ணங்களும்வழங்கப்பட்டன.

முதன்மைவிருந்தினராககலந்து கொண்ட போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் உரையாற்றுகையில், முன்பள்ளி மாணவர்களுக்குபோசாக்கானஉணவுவழங்க வேண்டும்யாழ்ப்பாணத்தில்மாணவர்களிடையே குருதிச் சோகை நோய்அதிகரித்துகாணப்படுகிறது. ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதால்இரும்புச்சத்துகுறைபாடுஇருப்பதாகக்கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களிடையே ஞாபகசக்தி குறைபாடு, காணப்படுகின்றது. இதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு உணவுப் பழக்க வழக்கங்களில் பெற்றோர்கள் கூடிய கவனம்செலுத்த வேண்டியதுஒவ்வொருபெற்றோரின் கடமையும் ஆகும் எனத் தெரிவித்தார். (ஜ-159)

# மயானங்கள் சீரமைப்பு

யாழ்ப்பாணம் டிச 21

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மயானங்களின் சீரமைப்பு பணிகள்துரிதகதியில்இடம்பெற்றுவருவதாக சபை உறுப்பினர் அருட்குமார் ஜோன்ஜிப்ரிக்கோ தெரிவித்தார்.

நீண்டகாலமாக சீரமைக்கப்படாது காணப்பட்ட விளாவெளி , பண்டத்தரிப்பு, பிரான்பற்று, வடலியடைப்பு, சண்டிலிப்பாய் மக்களின்வேண்டுகோளுக்குஅமையவலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அதன் படி சபையின்கண்காணிப்புக்குகீழ்உள்ளஅனைத்து மாயனங்களும்சீரமைக்க நடவடிக்கை எடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக சபையின் 5 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விளாவெளி இந்துமயான சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மயானம்முழுமையாகதுப்புரவுசெய்யப்பட்டு பாவனைக்குஉதவாதநிலையில்காணப்பட்ட எரி கொட்டகை அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்குஉகந்தவகையில்அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாயானக் கிணறு தூர்வாரி சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை எருக்கலாம் பிட்டி காக்கைதீவு மயானம் ரூபாய் 3 இலட்சத்து 75 ஆயிரம் செலவிலும், ஆரியம் பிட்டி மயானம் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாசெலவிலும், போதி மயானம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், மாரீசன் கூடல் மயானம் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், கிராஞ்சி மயானம் 2 இலட்ச்சத்து 85 ஆயிரம் ரூபா செலவிலும்சீரமைப்புவேலைகள்இடம்பெற்று வருகின்றன. (ஜ-115)

# கிராம சக்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள்

தென்மராட்சி,டிசெ. 23

கிராம சக்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்டகிராமஅலுவலர்பிரிவுகளில்கடந்தவியாழக்கிழமை இடம்பெற்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட வரணிவடக்கு, மந்துவில்கிழக்கு, கைதடிதெற்குஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம சக்திதிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான உதவிகள் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்துப் பிரதேச செயலர் தேவந்தினி பாபுவால் வழங்கி வைக்கப்பட்டன.

மந்துவில்கிழக்குபிரிவுமக்களுக்கான உதவிகள்மந்துவில்றோமன்கத்தோலிக்கதமிழ்கலவன்பாடசாலையில்வைத்துபிரதேசஉதவித்திட்டமிடல்பணிப்பாளர் செ.சுபச்செல்வனும், கைதடி தெற்குப் பிரிவு மக்களுக்கான [illegible] மண்[illegible] ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-9)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தைப் பெறவே ரணிலுக்கு ஆதரவாம்

## கூறுகின்றார் தினேஷ் எம்.பி.

கொழும்பு, டிசெ.23

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆயுத வழியில் பெற முடியாமல் போன தமிழ் ஈழத்தை இராஜதந்திர வழியில் பெறலாம் என்ற நப்பாசையுடனேயேதலைமை அமைச்சர்ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"ரணிலின் தீவிர விசுவாசியாக சுமந்திரனும், சுமந்திரனின் தீவிர விசுவாசியாக ரணிலும் உள்ளனர். அதை நாடாளுமன்றத்தில் நாம் நேரில் கண்கூடாகப் பார்த்துள்ளோம்.

ரணில் தலைமையில் புதிய அரசமைப்பு வரும் என்றும், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணையும் என்றும், கூட்டாட்சி வழியில் தமிழ் ஈழம் மலரும் என்றும் சுமந்திரனும் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கனவு காண்கின்றனர். இந்தக் கனவு ஒரு போதும் நனவாகாது.

ரணில் அரசின் அமைச்சரவை நியமனங்கள் கூட சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் நடைபெற்றன என நாம் அறிந்தோம்.

நாட்டில் கடந்த 50 நாள்களுக்கு மேலாக நீடித்த அரசியல் குழப்பங்களுக்கு ரணில், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரே காரணம். அரசியல் குழப்பங்களின்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார். தற்போது அவரின் பதவியும் பறிபோயுள்ளது" - என்றார். (ற)

# மைத்திரி கொலைச் சதி: திட்டமிடப்பட்ட நாடகம்!

## உண்மை அம்பலமாகும் என்கிறார் சாகல

கொழும்பு, டிசெ.23

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்ய எவரும் சதித் திட்டம் தீட்டவில்லை. இது குறுக்கு வழியில் வந்து 50 நாட்கள் மட்டும் ஆட்சி புரிந்தவர்களின் திட்டமிட்ட நாடகம்.

இவ்வாறு துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நான் சட்டம், ஒழுங்கு அமைச்சராக இருந்தபோது இந்த விவகாரம் குறித்து இரகசிய விசாரணை நடத்தியிருந்தேன். அதன்போது இந்த நாடகம் தொடர்பில் அறிந்தேன். ஆனால் சில மனநோயாளிகளின் வாக்குமூலங்களைநம்பி அரசதலைவர் மைத்திரிபால புலம்புகின்றார். விரைவில் உண்மை அம்பலமாகும். அப்போது அரச தலைவர் வெட்கித் தலைகுனிவார்.

தன் மீதான கொலைச் சதி தொடர்பில் தீவிர விசாரணை நடத்தவில்லை என்ற காரணத்தைக் காட்டி சட்டம், ஒழுங்கு அமைச்சை அரச தலைவர் தம்வசப்படுத்தி வைத்துள்ளார். போலியான இந்தக் கொலைச் சதியை அரச தலைவர் அவரின் கரங்களைப் பிடித்திருக்கும் மகிந்த அணியினருமே பெரிதுபடுத்தினர்" - என்றார். (ற)

### விஜயகலாவுக்கு...

துள்ளார். "வடக்கு - கிழக்கில் புலிகள் அமைப்பின் கை மீண்டும் ஓங்க வேண்டும் என்று பகிரங்கமாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார். அதற்கு எதிராக நாடாளுமன்றில் நாம் குரல் கொடுத்தோம். அதையடுத்துத்தான் வகித்த அமைச்சுப் பதவியிலிருந்து விஜயகலா மகேஸ்வரன் விலகினார். புலிகளை ஆதரித்தமைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். அவருக்குஎதிராகநீதிமன்றில்வழக்குவிசாரணைநடைபெறுகிறது. தற்போது ரணில் அரசில் அவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவருக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சுப் பதவியை அரச தலைவர் மீளப் பெற வேண்டும். இல்லையேல் அவர் மீண்டும் பதவி விலகும் நிலையை ஏற்படுத்துவோம்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ற)

### வெள்ளத்தில்...

கிளிநொச்சி மாவட்டத்தில் 400 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் அனைத்துக் குளங்களும் நீரால் நிரம்பியுள்ளன.

**கிளிநொச்சி**

இரணைமடுக்குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. கனகாம்பிகைக்குளம், கல்மடு, விசுவமடுக் குளங்களில் இருந்து அதிக நீர் வெளியேறுகின்றது. குளங்களில் இருந்து அதிக நீர் வெளியேறுவதால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புன்னைநீராவி, தர்மபுரம், கண்டாவளை, பன்னங்கண்டி ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ளன.

இதுவரை 2 ஆயிரத்து 192 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 52 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 28 இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் கட்டுக் குளம், வவுனிக்குளம், உடையார்கட்டுக் குளம் ஆகிய குளங்களின் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அந்தக் குளங்களின் கலிங்கு ஊடாக அதிக நீர் வெளியேறுகின்றது.

அங்குள்ளதாழ்நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதிகளின் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 794 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 651 பேர் பாதிப்படைந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்கள் 22 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் கரிசல் பிரதேசத்தில் வெள்ளத்தால் 38 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தால் மீனவர்களின் 11 படகுகள் சேதமடைந்துள்ளன என்று மாவட்டச் செயலர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் கடும் மழை பெய்துள்ள நிலையில் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போக்கறுப்பு வீதியூடானபோக்குவரத்து மருதங்கேணியுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. மருதங்கேணியில் இருந்து போக்கறுப்புக்கான 30 கிலோமீற்றர் தூர வீதியால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மருதங்கேணியில் வெள்ளத்தால் 278 குடும்பங்களைச் சேர்ந்த 708 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (ற-105)

### எத்தகைய...

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. சுவிஸ் வாசல் செந்தமிழ்ச் சோலை நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாங்கள் ஜனநாயக ரீதியில் செயற்பட்டு ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம். நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள அரசியல் பிரச்சினைக்குத் தீர்வை அடைவோம். சம நேரத்தில் போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களைச் சீரமைப்பது தொடர்பாகவும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பாகவும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தொடர்பாகவும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம். எமது இந்த நடவடிக்கைகளுக்குப் பன்னாட்டுச் சமூகம் எமக்கு உறுதுணையாகவுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் பலர் கருத்துக்களை முன்வைக்கலாம். கடந்த மாதங்களில் நடந்தவை அனைவரும் அறிந்ததே. திருட்டுத்தனமாக முறையற்ற விதத்தில் தலைமை அமைச்சரையும், அமைச்சரவையும் நீக்கியமை அரசமைப்புக்கு முரணாக நடைபெற்றது. அதற்காகவே நீதிமன்றத்தை நாடினோம். நீதிமன்று நீதியை நிலைநாட்டியது.

நாங்கள் எமது மக்களுக்கு என்ன தேவையோ அதை முன்னிறுத்தியே செயற்படுகின்றோம். சிலர் எமது செயற்பாட்டைப் பார்த்துக் கட்சி சார்பாக நடக்கின்றோம் என்று கூக்குரலிடுகின்றனர்"- என்றார். நிகழ்வில் மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, பிரதேச உறுப்பினர் கலையமுதன், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் எஸ்.குலநாயகம், மாவட்டக் கிளைத் தலைவர் கனகசபாபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-8)

### வர்த்தக...

மாவட்டத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையாலும், வெள்ளத்தாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கலிலும், மீட்புப் பணியிலும் பல தரப்பினரும் எம்முடன் இணைந்துள்ளனர். மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக இன்று கூட்டுறவுச் சங்கங்கள், கடைகள், சந்தைகள் என்பவற்றை இன்று திறக்க வேண்டும். அது மக்களுக்கு உதவியாக அமையும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-7,6)

### இடர்...

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இயற்கை இடரால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மேலதிக மாவட்டச் செயலர் சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, அரச அலுவலகங்களின் பிரதிநிதிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ற-35,6)

### மழை...

நல்லதம்பி திருச்செல்வம் (வயது-56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வீட்டில் தனித்து வசித்து வந்தார் என்றும், வீட்டுக்குள் வெள்ள நீர் புகுந்த நிலையில் மின் ஒழுக்கு ஏற்பட்டு அவர் மின் தாக்கி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற-105)



**வீடு விற்பனைக்கு**

தாவடி, கொக்குவில் பகுதியில்

2 நடுத்தரமான வீடுகள் விற்பனைக்குண்டு.

076 697 2287


# மரண அறிவித்தல்



## நடராசா யோகேஸ்வரன்

*(முன்னாள் தொலைத்தொடர்பு பரிசோதகர் - ஸ்ரீலங்கா ரெலிகொம், நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர்)*

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா யோகேஸ்வரன் நேற்று (22.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுபாஜினியின் அன்புக் கணவரும் திவாகரி, தேவகரி (Virtusa) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முகுந்தன், துஷ்யந்தன் (Virtusa) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதினியின் அன்புப் பேரனும் சரோஜினிதேவி, யோகராஜா மற்றும் குலமணிதேவி, திருச்செல்வம், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் சுதந்திரேஸ்வரன், ரேவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலராணி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சவுந்தரராஜன், செல்வராஜா, மாலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 021 222 3014

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பளுதூக்கலில் வி.ஆசிகா வென்றார் தங்கப்பதக்கம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் பளுதூக்கல் சங்கத்தின் சார்பாகக் கலந்துகொண்ட வி.ஆசிகா தங்கப்பதக்கம் வென்றார்.
கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்கல் சங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய வி.ஆசிகா 64 கிலோ எடைப்பிரிவில் 178 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்றார். (ம-23,422)



## பஜீனா வென்றார் வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் பளுதூக்கல் சங்கத்தின் சார்பாகக் கலந்துகொண்ட பஜீனா வெள்ளிப்பதக்கம் வென்றார்.
கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவில் பஜீனா கலந்து கொண்டார்.
அவர் 100 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றார். (ம-23,422)



## பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் மாணவி தர்சிகாவுக்கு வெண்கலப்பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பளுதூக்கல்தொடரில் பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவி தே.தர்சிகா வெண்கலப் பதக்கம் வென்றார்.
கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 45 கிலோ எடைப்பிரிவில் பி.தர்சிகா 80 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலம் வென்றார். (ம-23,422)



## திவானுஜனுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் யாழ்ப்பாணம் பளுதூக்கல் சங்கத்தைப் பிரதி நிதித் துவப்படுத்திய எஸ்.திவானுஜன் வெண்கலப் பதக்கம் வென்றார்.
கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. ஆண்கள் இளநிலைப் பிரிவில் 102 கிலோ எடைப் பிரிவில் எஸ்.திவானுஜன் 120 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)



## இளவாலை கன்னியர்மட மாணவி ம.மகிழினி வென்றார் வெண்கலம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் இளவாலை கன்னியர்மடமாணவி ம.மகிழினி வெண்கலப்பதக்கம் வென்றார்.
கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற இந்தப் போட்டியில் ம.மகிழினி 40 கிலோ எடைப்பிரிவில் 58 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



## றெகோன்சியாவுக்கு வெண்கலப்பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் இளவாலை கன்னியர்மடமாணவி வி.றெகோன்சியா வெண்கலப்பதக்கம் வென்றார்.
கொழும்புடொறிங்ரன் விளையாட்டரங்கில் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதுக்கல் போட்டியில் பி.தர்சிகா 64 கிலோ எடைப்பிரிவில் 60 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



## யாழ்ப்பாணம் மத்தி இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 179 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 50 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. சாருசன் 12 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் விதுசன் 4 இலக்குகளையும், குகாதுஸ், நிதுஷன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 269 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ராஜ் கிளிங்டன் 73 ஓட்டங்களையும், ஜெயதர்சன் 64 ஓட்டங்களையும் இயலரசன் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் டினேஸ் குமார் 6 இலக்குகளை வீழ்த்தினார்.
கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் 40 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 179 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (ம)




## மும்பை இந்தியன்ஸில் ஜெயந்த் யாதவ் இடம்


ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணியில் இடம் பிடித்திருந்த இளம் வீரரான ஜெயந் யாதவை மும்பை அணி வாங்கியுள்ளது.
குயின்டன் டி ஹொக் உள்ளிட்ட சில வீரர்களை டெல்லியிடம் இருந்து நேரடியாக மும்பை இந்தியன்ஸ் வாங்கியிருந்த நிலையில் அவ்வாறு வாங்கப்பட்ட நான்காவது வீரரானார் ஜெயந்த யாதவ். (ம)


## தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தது பெல்ஜியம்

பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடர்கிறது பெல்ஜியம்.
பன்னாட்டுக் கால்பந்தாட்டச் சம்மேளனம் தனது தரவரிசைப் பட்டியலை நேற்றுப் புதுப்பித்தது. பெல்ஜியம் ஆயிரத்து 727 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.
பிரான்ஸ் ஆயிரத்து 726 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பிரேசில் ஆயிரத்து 676 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும், குரோசியா ஆயிரத்து 640 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும், இங்கிலாந்து ஆயிரத்து 619 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தையும் கைப்பற்றின.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே உருகுவே, போர்த்துக்கல், சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், டென்மார்க் ஆகிய அணிகள் உள்ளன. இறுதியாக வெளியான தரப்படுத்தலுக்கும் நேற்றைய தரப்படுத்தலுக்கும் இடையில் புள்ளிகளின் அடிப்படையில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் அணிகளின் தரநிலையில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கட்டாரில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்காக கட்டாரில் அமைக்கப்பட்டுள்ள மூன்று கால்பந்தாட்ட அரங்குகளின் ஒளிப்படமே இது. கட்டாரில் அதீத வெப்பம் நிலவுகின்ற காரணத்தால் அந்த நாட்டிடம் உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தைக் கொடுக்கக்கூடாது என்று சில நாடுகள் போர்க்கொடி தூக்கியிருந்த நிலையில் முழுவதும் குளிரூட்டப்பட்ட நிலையில் இந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தலா 80 ஆயிரம் ரசிகர்கள் அமரக்கூடிய வகையில் இந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. (ம)

# இலங்கைக் கிரிக்கெட்டை மேம்படுத்த சங்கா, மகேல

## அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ விடுத்தார்

இலங்கை கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு முன்னாள் ஜாம்பவான்கள் சங்கா, மகேல, அரவிந்த டி சில்வா மூவருக்கும் அழைப்பு விடுத்தார் அமைச்சர் ஹ[illegible] பெர்னான்டோ.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசின் போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களான தயாசிறி ஜெயசேகரவும் அவரைத் தொடர்ந்து பைசர் முஸ்தபாவும் விளையாட்டுத்துறை அமைச்சர்களாகச் செயற்பட்டனர். இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுமதிபால நியமிக்கப்பட்டிருந்தார்.

சுமதிபாலவினதும், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்களின் வினைத்திறன் தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் வாரி இறைக்கப்பட்டன. இதற்கேற்ப இலங்கை அணி அண்மைக்காலமாகத் தொடர்ந்து பல்வேறு தோல்விகளைச் சந்தித்து வந்தது. சொந்த மண்ணில் சிம்பாப்வேயிடம் தொடரை இழக்கும் அளவுக்கு அணியின் நிலைமை மோசமானது. தற்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் விளையாட்டுத் துறை அமைச்சராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஹரீன் பெர்னான்டோ நியமிக்கப்பட்டார். அவரின் நிர்வாகத்தில் இலங்கைக் கிரிக்கெட் புத்துயிர் பெறுமா என்பது தொடர்பில் பெரியளவில் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அதிரடி நகர்வாக சங்கா, மகேல, அரவிந்த டி சில்வா மூவரையும் அழைத்துள்ளார் ஹரீன் பெர்னான்டோ. அவரின் இந்த முடிவுக்கு சமூக வலைத்தளங்களில் ஆதரவுகள் கொட்டிக் கிடக்கின்றன.



### மெல்பேர்ன் டெஸ்ட் ஆட்டம்

# இந்திய அணியில் வேண்டும் பாண்டியா

## மைக் ஹசி கூறுகின்றார்



இந்திய - ஆஸ்திரேலிய அணிகள் மோதுகின்ற 3ஆவது டெஸ்ட் ஆட்டம் மெல்பேர்னில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்துக்கான இந்திய அணியில் பாண்டியாவைச் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஹசி.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் உள்ளன. மூன்றாவது ஆட்டம் மெல்பேர்னில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பாண்டியா விளையாடினால் இந்திய அணி வலுப்பெறும் என்று தெரிவித்தார் ஹசி.

"பேர்த் ஆடுகளம் மிகவும் தனித்துவம் வாய்ந்தது. அதில் இருந்து மெல்பேர்ண் ஆடுகளம் முற்றிலும் மாறுபட்டதாகும். இந்தத் தொடரில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் அருமையாக பந்து வீசி வருகிறார்கள். பாண்டியா கிட்டத்தட்ட மிட்செல் மார்ஷ் போன்றவர். அவர் நல்ல பயிற்சியில் இருந்தால் அணிக்கு கூடுதல் பந்துவீச்சு வாய்ப்பாக அமையும். எனவே அவரை அடுத்த ஆட்டத்தில் சேர்க்க வேண்டும்' என்று ஹசி மேலும் தெரிவித்தார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் பாண்டியா காயமடைந்தார். அதன்பின்னர் தொடர்ச்சியாக ஓய்வில் இருந்து வந்த அவர் தற்போது மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

# இந்திய கிரிக்கெட் சபையைத் தடைகோரி வழக்கு



புதுடெல்லி அரசிடம் இருந்து எந்தவிதமான முறையான அங்கீகாரம் இன்றி நாட்டின் பிரதிநிதியாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செயற்படும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை (பிசிசிஐ) தடை செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை டெல்லியைச் சேர்ந்த கீதா ராணி என்பவர் தொடர்ந்துள்ளார். இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வீரர்கள் தேர்வில் வெளிப்படைத் தன்மை இல்லை. எப்போதும் பாகுபாடுகள் காட்டப்படுகின்றனர். ஏனைய விளையாட்டுத் துறைகளைப் போன்று கிரிக்கெட்டும் மத்திய விளையாட்டுத் துறையால் நேரடியாக நிர்வகிக்கப்பட வேண்டும்என்றும்மனுதாரர்குறிப்பிட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று சர்ச்சை எழுவது இது ஒன்றும் புதிதல்ல. இதற்கு முன்னரும் இதுபோன்று சர்ச்சைகள் ஏற்கனவே குவிந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3125 திகதி: 2018.12.22 சனிக்கிழமை

SATURDAY FORTUNE

பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 03 05 60 67 K

போனஸ் இலக்கம்: 25

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 55,813,055/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும், அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## சංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 206

சீட்டிழுப்பு திகதி 22.12.2018 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| T | 13 51 63 | 06 |

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,109,720 /=

2018.12.27 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



## பௌதிகவியல்

2021 A/L. T.K. கஜன் B.Sc (Physics)
புதன், வெள்ளி - 6.00pm. முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு 077 653 1177



## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் வீட்டில் தங்கிநின்று வேலைசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 668 7688



## வீடு விற்பனைக்கு

பரமேஸ்வரா வீதி (தபால்பெட்டி ஒழுங்கை), திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 பரப்பு 00.67 குளி விஸ்தீரணமான ஆதனமும் அதில் அமைந்துள்ள வீடும் விற்பனைக்குள்ளது.
தொடர்பு - 077 391 7645, 077 597 8812



## A/L PHYSICS

A/L

எல்லா Batches இற்கும்

திரு. M. ஸ்பெல்மன் BSc, PGDE

தொடர்பு - 077 611 6724



## நிறுவனங்களுக்கு வீடு வாடகைக்கு விடப்படும்

இல. 958/2, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(பிரதான வீதியில் அமைந்துள்ள)

தொடர்புகளுக்கு:-
071 699 7052 / 077 071 2199


# 77 லட்சம் ரசிகர்கள் நேரில் பார்த்த கால்பந்துத் தொடர்



ரஷ்யாவில் நடைபெற்று முடிந்துள்ள உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடர் தொடர்பான சுவாரஸ்யத் தகவல்கள் வெளிவந்து கொண்டுள்ளன. இதன்படி இந்தத் தொடரை 77 லட்சம் ரசிகர்கள் நேரில் சென்று பார்த்து இரசித்துள்ளனர் என்ற தகவல் தற்போது வந்துள்ளது.

ஜூன் 14ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரையில் இந்தத் தொடர் நடைபெற்றது. பிரான்ஸ் கிண்ணம் வென்றது. குரோசியா இரண்டாவது இடத்தைத் தனதாக்கிறது. வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் ரஷ்யாவுக்குள் நுழைய வேண்டுமாயின் அந்த நபருக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். ஆனால் உலகக்கிண்ணத் தொடரைப் பார்க்க ரசிகர்கள் பெருமளவில் அணிதிரள வேண்டும் என்பதற்காக ரஷ்ய அதிபர் புடின் அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார். இதையடுத்து 77 லட்சம் பேர் உலகக்கிண்ணத் தொடரைக் காண்பதற்காக ரஷ்யாவுக்குப் படையெடுத்துள்ளனர்.

பிரேசிலில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரைக் காணச் சென்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 25 லட்சம் பேர் அதிகமாக ரஷ்யாவுக்குச் சென்றுள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் ரஷ்ய உலகக்கிண்ணத் தொடர் மிகப்பெரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. கீச்சகத்தில் மட்டும் (ருவிற்றர்) 115 பில்லியன் பதிவுகள் ரஷ்ய உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


## காணி விற்பனைக்கு

மானிப்பாய் நகர் பகுதியில் இரண்டு பரப்புக் காணி (02 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

077 664 0322 / 077 174 399



## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 472
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.22

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,347,285/-

வெற்றி இலக்கங்கள்: 02 33 44 50 ஆங்கில எழுத்து U

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும், அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## துயர் பகிர்கின்றோம்



பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்,
பொருளியற்கல்லூரி, சுன்னாகம், BARATHY
சித்தன்கேணி ஆகிய கல்விநிறுவனங்களின்
இயக்குநர் திரு. ம. பத்மநாதன் (தயா)
அவர்களின் அன்புச்சகோதரன்

**மாணிக்கம் இரத்தினசிங்கம்**

(புதிய உயர்கல்லூரி உத்தியோகத்தர்)
அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டுநாமும் துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்**
**பொருளியற்கல்லூரி, யாழ்ப்பாணம் - சுன்னாகம்,**
**BARATHY சித்தன்கேணி**



# Golden Eagle K.T.(Pvt) Ltd

## பதவி வெற்றிடங்கள்



1. கனிஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஆண்
2. கனிஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - பெண்

✓ **இடங்கள்**
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு

✓ **வயதெல்லை**
- 21 - 55 (நல்ல கண் பார்வையும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்)

✓ **நேர்முகத் தேர்வு**
- 24.12.2018 மற்றும் 25.12.2018

✓ **ஆவணங்கள்**
- கிராம அதிகாரியின் நற்சான்று, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சை சான்றிதழ், தேசிய அடையாள அட்டை போன்றவற்றின் மூலம், மூலப்பிரதிகள், ( Original and Copies )

✓ சாரணியர்கள், படைப்பயிலுநர்கள் (Cadet) முதலுதவிப்படை மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

✓ சம்பளம் 23,000 முதல் 25,000 வரை (EPF+ETF உட்பட) பெற்றுக் கொள்ளலாம்.

758, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். பணிப்பாளர்.



## யாழ். நகரில்

என்றுமில்லாதவாறு Mega Sale 31.12.2018 வரை

**KKJ** Furniture Centre
சிவன்கோவில் முன்பாக
No. K.K.S. Road, Jaffna.
077 903 7203/ 021 221 7319




இல. 11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
மனோகரா சந்தியிலிருந்து 300m மானிப்பாய் றோட் பக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.